

கலைஞர் 100
1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in


murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 105 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 08 – வெள்ளிக்கிழமை 24 நவம்பர் 2023 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 105: Thiruvalluvar Year - 2054 - Karthigai 08 - Friday 24 November 2023 - Madurai 16 Pages ₹ 5.00


## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (3)

# சிங்கத்தின் குகையில் சிலந்தி கூடுகட்டுவதா?



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'இளைஞர்களுக்கு வழி விடுவோம்' எனும் தலைப்பில் முரசொலி'யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 'கலைஞர் கடிதங்கள்' எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார். தற்போது சேலத்தில் 2023 - டிச.17 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்த விருக்கும் கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

## கலைஞர் கடிதம்

**உடன்பிறப்பே,**

நெருக்கடி கால நெருப்பின் "ஜுவாலை" அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் அனற் பிழம்பாய்க் கொதித்த போது, இப்போது குடும்பக் கட்சி என்று குதர்க்கம் பேசுகிற குள்ளநரிக் கும்பல், இந்தக் குடும்பம் இருக்கும் திசையின் பக்கம் கூடத் திரும்பிப் பார்த்தது கிடையாது. நெருக்கடி நிலையை எதிர்த்து தி.மு.கழகச் செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றியதைத் தொடர்ந்து, 1976இல் ஆட்சி கலைக்கப்பட்டது என்று அறிவிப்பு - அடுத்த நாள் காலை முதல் அதிகாரிகள் படையெடுப்பு - முன்னாள் அமைச்சர்கள் - நாடாளுமன்றக் கழக உறுப்பினர்கள், சட்டமன்றக் கழக உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் என்று ஆயிரம் பேர் கைது - எந்தச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள் என்ற தகவல் கூட தெரியாத நிலைமை - தம்பி மாறனையும், தம்பி ஸ்டாலினையும் வீட்டுக்குள் நுழைந்து போலீஸ் அதிகாரிகள் கைது செய்ததுதான் தெரியும். அவர்களை எந்த ஊர் சிறைக்குக் கொண்டு சென்றார்கள் - எங்கே அடைத்துள்ளார்கள் என்று தெரியாது - இருபது நாட்களுக்குப் பிறகுதான் அவர்கள் சென்னை சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதும் - சென்னை சிறையில் அடைபட்டுள்ள கழகக் கண்மணிகள் அனைவரையும் சிறைக் கூண்டுகளுக்குள்ளேயே காவலர்கள் கடுமையாக அடித்து உதைத்துச் சித்ரவதை செய்தார்கள் என்பதும் காட்டுத் தீ போல் மூலை முடுக்குகள் எல்லாம் செய்தியாகப் பரவியது.

சென்னைச் சிறையில் இருந்தவர்களை - சிறையில் நேர்காணலுக்கே, எனக்கும், என் குடும்பத்தாருக்கும் நாற்பது நாட்களுக்குப் பிறகே அனுமதி கிடைத்தது - அதுவும் சிறை வாசலில் உ ண் ண ா வி ர த ப் போராட்டம் நடத்தப் போகிறோம் என்று அறிவித்த பிறகே - அந்த அனுமதியும் வழங்கப்பட்டது. இந்தக் கொடுமை ஓராண்டு நீடித்தது. அந்த ஓராண்டு காலமும் அது வரையில் நெருங்கிப் பழகிய நண்பர்கள், கழகத்தின் சார்பில் பெரும்பதவிகளை அனுபவித்தவர்கள், "அற்ற குளத்து அறுநீர்ப் பறவைகள், மனித உருப்பெற்று வந்தால் எப்படிக் காட்சியளிப்பர்" என்பதை, எனக்கும், இந்த இயக்கத்திற்கும் அனுபவ ரீதியாக உணர்த்தி விட்டனர் என்றே சொல்லலாம்.

அவர்களில் சிலர், நெருக்கடி காலம் நீங்கி, "ஜனநாயக" மறுமலர்ச்சி ஏற்பட்டபோது, கழகத்தையும், என்னையும் நாடித் திரும்பியதை மறந்துவிட முடியாது. அவர்கள் யார் என்பதை அவர்களே அறிவார்கள் என்பதால் இப்போது அதை நான் நினைவூட்ட விரும்பவில்லை.

ஒரு நிகழ்ச்சி - உனக்குச் சொல்லியாக வேண்டும். உயிருக்குயிராக என்னுடன் பழகிய தோழர் - அவரும், அவருடன் நான்கைந்து பேரும் - நெருக்கடி காலம் முழுதும் என்னிடமிருந்து விலகி வெகுதூரம் சென்றிருந்தவர்கள் - சிரித்த முகத்துடன் என்னைச் சந்திக்க வந்தார்கள் - வாசலில் அடியெடுத்து வைத்ததுதான் தாமதம் - "அட, துரோகிகளா! இப்பத்தான் இந்த வீடு அடையாளம் தெரிந்ததா? - எல்லோரும் செத்து விட்டோம் என்று இதுவரை நினைத்து வராமல் இருந்தவர்கள், இப்ப மட்டும் எங்கே வந்தீங்க?"

என்று உரத்த குரல் ஒன்று கேட்டு, வெளியே ஓடிப் போய்ப் பார்த்தால் என் மகன் மு.க. அழகிரியின் குரல்தான் அது!

"என்னப்பா அழகிரி! ஏன் அவுங்களை விரட்டுரே?"

"அப்பா - எமர்ஜன்சின்னு எங்கேயோ ஓடிட்டு - இப்ப வந்திருக்காங்க - இவுங்களை நான் உள்ளே விடமாட்டேன்"

தம்பி அழகிரி, இனிய இயல்புடன் கழகத்தினரிடம் அன்புடன் பழகுவதையும் கண்டிருக்கிறேன் - பாராட்டி மகிழ்ந்திருக்கிறேன் - நன்றிக்குப் பொருள் தெரியாதவர்கள், கழகத்தை வெறும் பதவி பிடிக்கும் கருவியாக மட்டும் கருதுகிறவர்கள் மீது, கடுமையான வெறுப்பு உமிழ்வதையும் கண்டுணர்ந்திருக்கிறேன் - அளவோடு இருந்தால் இரண்டு சுபாவங்களுமே இளைஞர்களுக்கு இன்றியமையாத் தேவைகள்தான்.

உடன்பிறப்பே, என்னுடைய பிள்ளைகள், பெண்கள் இன்று கழக ஆர்வலர்களாக இருப்பதால், வயிறெரிந்து வசை பாடுகிறார்களே! வார ஏடுகள், நாளேடுகளில் கூட "வாரிசு" - "குடும்பம்" என்றெல்லாம் விஷத்தைக் கக்கிய வண்ணம் இருக்கிறார்களே! அவர்கள் நான், நேற்று எழுதிய இளம் வயது லெனின் பற்றிய கட்டுரை தீட்டிட நான் படித்த லெனின் வரலாற்றைப் படித்தால் அறிந்து கொள்ளக் கூடும்; "வில்தீமிர் உலியானவ் எனப்படும் லெனின் மற்றும் ஆன்னா, அலெக்ஸாந்தர், ஓல்கா, திமீத்ரிய், மரீயா எனும் ஆறு பேர் சகோதரர்கள்! அந்த நூலாசிரியர் கூறுகிறார்! மொத்தம் அந்த ஆறு பிள்ளைகளும் புரட்சிக்காரர்களாக விளங்கியது தற்செயல் அல்ல" என்பதாக! அந்தக் குடும்பத்துப் பிள்ளைகள் எல்லோருமே இயல்பாகவே புரட்சிக் கருத்துக் கொண்டவர்களாக விளங்கியதால் பெருமையடைந்தனர் பெற்றோர் - ஆனால், இன்னமும் இங்கேதான் வாரிசு, குடும்பம் என்று வயிறு எரிந்து வக்கணை பேசிக் கொண்டிருக்கின்றனர். என் குடும்பத்துப் பிள்ளைகள் ஆறு பேரும் இயக்க ஆர்வம் படைத்தவர்கள் - இலட்சியம் காப்பவர்கள் - தொண்டர்க்குத் துணை நிற்பவர்கள்.

என் குடும்பத்திலாகட்டும், இயக்க முன்னோடிகள் வீட்டுப் பிள்ளைகளாகட்டும், தந்தை வழியில் தன்மானம் போற்றித் தமிழகம் காத்திடும் ஆக்கப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வது எவ்வாறு தவறாகும்? அவர்கள் போற்றுதலுக்குத் தகுதி படைத்தவர்களன்றோ?

நான், 1957ஆம் ஆண்டு, குளித்தலையில் போட்டியிட்டபோது, முதலில் என்னை வரவேற்று வாழ்த்தியவர், அந்த ஊர்ப் பெரியவர்களில் ஒருவரான வையாபுரிச் சோழகர் - அவர் பழுத்த காங்கிரஸ்காரர் - அவர் மூத்த மகன் திராவிடர் கழகம் - அவருக்கு அடுத்த மகன் தி.மு.கழகம் - அவர்களுடைய பிள்ளைகுட்டிகள், பேரன், பேத்திகள் மொத்தம் குடும்பத்தினர் பதினைந்து பேர் இருக்கும். ஆளுக்கொரு கட்சி! அப்படியும் ஒரு குடும்பம் - எல்லாப் பிள்ளைகட்கும் திராவிட முன்னேற்றக் கழகப் பற்று என்பதாக இப்படியும் ஒரு குடும்பம்.

இதிலும் என் குடும்பத்து பிள்ளை - என் பிள்ளை என்பதால் ஸ்டாலினுக்குச் சிறப்பா? அவர் அல்லும் பகலும், ஓடியாடி, அலைந்து திரிந்து, இயக்கப் பணியை ஓய்வின்றி ஆற்றுவதால்தானே உடன்பிறப்புக்களாம் உன் போன்றோர் இதயத்தில் இடம் பெற்றுள்ளார் - நெருக்கடி கால நெருப்பாற்றைக்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## சென்னை, ராஜீவ் காந்தி சாலை - இந்திரா நகர் சந்திப்பில் ரூ.18.15 கோடி செலவில்

# 'U' வடிவ மேம்பாலம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

## போக்குவரத்து நெரிசல் பெருமளவு குறையும்!

**சென்னை, நவ. 24-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.11.2023) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் சென்னை, ராஜீவ் காந்தி சாலை (OMR), இந்திரா நகர் சந்திப்பில் ரூ.18.15 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 'U' வடிவ மேம்பாலத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.**

பொருளாதாரத்தின் அங்கங்களான விவசாயம், தொழில், வணிகம், சுற்றுலா, போன்ற துறைகளின் மேம்பாட்டிற்கு சாலை உட்கட்டமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. மாநிலத்தில் புதிய சாலைகள் மற்றும் பாலங்கள் அமைத்தல், சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல், கிராமப்புறங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைத்தல் போன்ற முக்கியப் பணிகளை நெடுஞ்சாலைத் துறை மேற்கொண்டு வருகிறது. இதன்மூலம், தமிழ்நாடு அரசு, நெடுஞ்சாலைத் துறை வாயிலாக தரமான மற்றும் பாதுகாப்பான சாலை கட்டமைப்பினை சிறந்த முறையில் உருவாக்கி, பராமரித்து வருகிறது.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.11.2023) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் சென்னை, ராஜீவ் காந்தி சாலை (OMR), இந்திரா நகர் சந்திப்பில் ரூ.18.15 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 'U' வடிவ மேம்பாலத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் மரு. எஸ். பிரபாகர், செயல் இயக்குநர் திருமதி எம்.விஜயா ஆகியோர் கலந்து கொண்டனர்.

**இந்திரா நகர் சந்திப்பில் கட்டப்பட்டுள்ள 'U' வடிவ மேம்பாலத்தை திறந்து வைத்தல்**

ராஜீவ் காந்தி சாலையில் (ஓ.எம்.ஆர்), இந்திரா நகர் சந்திப்பு மற்றும் டைடல் பார்க் சந்திப்பில் அமைந்துள்ள இரண்டு போக்குவரத்து சமிக்ஞைகளில் தற்போது வாகனங்கள் சுமார் 20 முதல் 30 நிமிடங்கள் வரை காத்திருக்க வேண்டிய சூழல் உள்ளது. இதனால் அப்பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசலும் ஏற்படுகிறது. இதற்கு ஒரு நிரந்தர தீர்வு காணும் வகையில், மேற்கண்ட இந்திரா நகர் சந்திப்பு மற்றும் டைடல் பார்க் சந்திப்பு ஆகிய இரண்டு சந்திப்புகளிலும் 'U' வடிவ மேம்பாலங்கள் அமைக்க முடிவெடுக்கப்பட்டது.

அதன்படி, இந்திரா நகர் மற்றும் டைடல் பார்க் சந்திப்புகளில் 'U' வடிவ மேம்பாலங்கள் அமைத்தல் உள்ளிட்ட ஒருங்கிணைந்த போக்குவரத்து உள்கட்டமைப்பை மேம்படுத்தும் பணிகளுக்காக ரூ.108.13 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. **இப்பணிகளுள் ஒன்றான ரூ.18.15 கோடி செலவில் இந்திரா நகர் 'U' வடிவ மேம்பாலப் பணிகள் முழுவதும் தற்போது முடிக்கப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது.**

இந்திரா நகர் சந்திப்பில் கட்டப்பட்டுள்ள 237 மீட்டர் நீளமுள்ள இப்பாலம், 12.5 மீட்டர் நீளமுள்ள 19 கண்களை கொண்டதாகும். ராஜீவ் காந்தி சாலையின் வலது புறத்தில் இந்த பாலத்தின் ஏறு சாய்தளம் 120 மீட்டர் நீளத்திற்கும், இடது புறத்தில் இறங்கு சாய்தளம் 120 மீட்டர் நீளத்திற்கும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்திரா நகர் "U" வடிவ மேம்பாலம் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்படுவதால், சோழிங்கநல்லூர் திசையில் இருந்து வரும் வாகனங்கள் இந்திரா நகர் மேம்பாலம் வழியாக ஏறி "U" திருப்பம் எடுத்து, இந்திரா நகர் வழியாக அடையாறு மற்றும் திருவான்மியூர் ஆகிய பகுதிகளுக்கு போக்குவரத்து நெரிசலின்றி விரைந்து செல்ல இயலும்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலகத்திலிருந்து தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் மரு. எஸ். பிரபாகர், செயல் இயக்குநர் திருமதி எம்.விஜயா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்திரா நகர் சந்திப்பு பகுதியிலிருந்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், கே.கணபதி, ஜெ.எம்.எச்.அசன் மௌலானா, ஏ.எம்.வி. பிரபாகர ராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், மண்டலக் குழுத் தலைவர் துரைராஜ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட முதன்மை பொது மேலாளர் மனோகரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 24-11-2023

# உச்சநீதிமன்றத்துக்கே நெருக்கடி

**மாநில அரசுகளுக்கு ஆளுநர்கள் மூலமாக நெருக்கடி கொடுக்கிறார்கள் என்று உச்சநீதிமன்றத்துக்குச் செல்கிறோம். ஆனால் உச்சநீதிமன்றத்துக்கே ஒன்றிய அரசு நெருக்கடியைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறது. 'கொலீஜியம்' எனப்படும் நீதிபதிகள் தேர்வுக்குழு பரிந்துரைகளுக்கு உரிய நேரத்தில் ஒப்புதல் தராமல் ஒன்றிய அரசு இழுத்தடித்து வருவதை தொடர்ச்சியாக உச்சநீதிமன்றம் கண்டித்துக் கொண்டு இருக்கிறது.**

உச்சநீதிமன்றம், உயர்நீதி மன்றத்துக்கான நீதிபதிகளை நியமனம் செய்யும் அதிகாரம் உள்ள அமைப்பு கொலீஜியம் ஆகும். உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியுடன், உச்சநீதி மன்றத்தின் நான்கு மூத்த நீதிபதிகள் அடங்கிய குழுவாகும். இவர்கள் பரிந்துரை செய்வதை அரசு ஏற்கும். அது தான் நடைமுறையாக இருந்தது. பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தது முதல் அதிலும் சிக்கல் ஏற்பட்டது. கொலீஜியம் பரிந்துரை செய்வதை ஏற்பது இல்லை. நிராகரிக்கிறார்கள். மேலும், கொலீஜியம் பரிந்துரை செய்வதற்கு அனுமதி வழங்காமல் கிடப்பில் போடுகிறார்கள். இதனை பல முறை உச்சநீதிமன்றம் சுட்டிக் காட்டி வருகிறது. ஆனாலும் ஒன்றிய பா.ஜ.க. அரசு அதே மந்தகதியில் தான் தனது செயல்பாடுகளை வைத்துள்ளது.

**கடந்த 20 ஆம் தேதி அன்றும் உச்சநீதிமன்றம் இது பற்றி கவலையைத் தெரிவித்து இருக்கிறது. நாங்கள் அனுப்பி வைப்பதை முழுமையாக ஏற்காமல், 'குறிப்பிட்ட' சிலரை மட்டும் ஏற்றுக் கொள்வது ஏன் என்பது தான் உச்சநீதிமன்றம் எழுப்பும் கேள்வி ஆகும்.**

பஞ்சாப் - அரியானா உயர்நீதிமன்ற நீதிபதிகளாக 5 மூத்த வழக்கறிஞர்களின் பெயர்களை உச்சநீதிமன்ற கொலீஜியம் பரிந்துரை செய்தது. அதில் இருவர் சீக்கிய மதப்பிரிவைச் சேர்ந்தவர்கள். அந்த இருவருக்கு மட்டும் ஒன்றிய அரசு அனுமதியை வழங்கவில்லை. இதுதான் சமீபத்திய சர்ச்சைக்குக் காரணம் ஆகும். கொலீஜியத்தின் பரிந்துரைகளுக்கு ஒன்றிய அரசு உடனடியாக ஒப்புதல் வழங்க வேண்டும் என்பது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் இரண்டு வழக்குகள் விசாரணையில் உள்ளது. இந்த மனுக்களின் மீதான விசாரணை உச்சநீதிமன்ற நீதிபதிகள் சஞ்சய் கிஷன் கவுல், சுதான்ஷு துலியா ஆகியோர் அடங்கிய அமர்வின் முன்னால் கடந்த 20 ஆம் தேதி நடந்தது.

**உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் 11 பேர் பெயரை பரிந்துரை செய்து கொலீஜியம் அனுப்பியதாகவும் அதில் 5 பரிந்துரைகளுக்கு மட்டுமே ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்ததாகவும் நீதிபதிகள் தகவல் கூறினார்கள். "இது வரை நாங்கள் அனுப்பிய 8 நீதிபதிகளின் பரிந்துரைக்கு ஒன்றிய அரசு ஒப்புதல் தரவில்லை. கொலீஜியம் பரிந்துரைக்கும் பெயர்களில் 'குறிப்பிட்ட' சிலரை மட்டும் தேர்ந்தெடுத்து ஒப்புதல் அளிக்கும் அணுகுமுறையை ஒன்றிய அரசு கடைப்பிடிக்கிறது. இதன் காரணமாக நீதிபதிகளின் பணி மூப்பு பாதிக்கப்படுகிறது. இது நல்ல நடைமுறையாக இல்லை" என்று நீதிபதிகள் கவலை தெரிவித்துள்ளார்கள். உச்சநீதிமன்ற நீதிபதிகள் கண்டனம், கவலை, வருத்தம் தெரிவிப்பது இது முதல் முறை அல்ல. தொடர்ந்து இது நடந்து வருகிறது.**

கடந்த 7 ஆம் தேதியும் உச்சநீதிமன்றம் இதே கருத்தை இன்னும் கடுமையாகக் கூறியது. "வழக்கறிஞர்கள், அவர்களுக்கு வழங்கப்படும் நீதிபதி பதவியை பொறுப்புணர்வுடன் சமூகத்துக்கான பங்களிப்பாகக் கருதி ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் கொலீஜியம் பரிந்துரைப்பதில் 'குறிப்பாக' சிலரை மட்டும் பிரித்தெடுத்து அரசு நியமனம் செய்கிறது. இது வெற்றிகரமான வழக்கறிஞர்களை நீதிபதி பணிக்கு கொண்டுவருவதற்கு உதவாது. இந்த நடைமுறையை நிறுத்துமாறு திட்டவட்டமாகக் கேட்டுக் கொள்கிறோம். அதேபோல், நீதிபதிகள் பணியிட மாற்றம் தொடர்பான பரிந்துரைகளுக்கும் ஒன்றிய அரசு உடனடியாக ஒப்புதல் வழங்க வேண்டும் என்பதே எங்கள் கருத்தாகும். இந்த விவகாரத்தில் ஒன்றிய அரசு விரும்பாத முடிவை எடுக்க வேண்டிய சூழல் எங்களுக்கு வராது என நம்புகிறோம்" என்று நீதிபதிகள் சஞ்சய் கிஷன் கவுல், சுதான்ஷு துலியா ஆகியோர் கடுமையாகக் கருத்துத் தெரிவித்தார்கள்.

கொலீஜியம் என்ற அமைப்பு முறையைக் கலைக்க வேண்டும் என்றே பா.ஜ.க. அரசு நினைக்கிறது. தேசிய நீதிபதிகள் நியமன ஆணையத்தை 2014 ஆம் ஆண்டே உருவாக்கியது ஒன்றிய அரசு. தேசிய நீதிபதிகள் நியமன ஆணையம் எனப்படும் புதிய தேர்வு முறை, உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி, உச்ச நீதிமன்றத்தின் இரண்டு மூத்த நீதிபதிகளை உள்ளடக்கியது. ஆனால் அதில் சட்ட அமைச்சர், இரண்டு நிபுணர்கள் உறுப்பினர்களாக இருப்பார்கள். இவர்கள் இருவரையும் அரசு நியமிக்கும். 'இது சுதந்திரமான நீதித்துறை செயல்பாட்டை பாதிக்கும், இந்த ஆணையம் அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிரானது' என்று கூறி அந்த அமைப்பையே 2016 ஆம் ஆண்டு கலைத்துவிட்டது உச்சநீதிமன்றம். **அது முதல் ஒன்றிய அரசுக்கும் உச்சநீதிமன்றத்துக்குமான மோதல் நடக்கிறது. உச்ச நீதிமன்றத்தால் அனுப்பப்பட்ட பரிந்துரைகளை தாமதப்படுத்தும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் நடவடிக்கை தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 'அரசின் தாமதம் நீதிமன்ற அவமதிப்பு' என மனுதாரர்கள் தரப்பு தெரிவிக்கிறது.**

"கொலீஜியம் பரிந்துரைகள் மீது 3 முதல் 4 வாரங்களுக்குள் பரிசீலனை செய்து நீதிபதிகள் நியமனத்துக்கான ஒப்புதலை ஒன்றிய அரசு அளிக்க வேண்டும்" என்று மனுதாரர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். ஒவ்வொரு முறை இந்த வழக்குகள் விசாரணைக்கு வரும் போதும் எதையாவது சொல்லி நாள் கடத்தி வருகிறது பா.ஜ.க. அரசு.

**அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக்கிய அனைத்து அமைப்புகளையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு நெருக்கடிக்கு உள்ளாக்கி வருகிறது என்று சொல்வது இதனால் தான்.**




கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் இல்லத் திருமண வரவேற்பு விழா கிருஷ்ணகிரி சுங்கச்சாவடி அருகில் உள்ள கலைஞர் அரங்கத்தில் நடைபெற்றது. மணவிழா வரவேற்பில் கழகப் பொதுச் செயலாளர் – தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமை தாங்கினார். கழக இளைஞரணிச் செயலாளரும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மணமக்களை வாழ்த்திப் பேசினார். அமைச்சர் அர.சக்கரபாணி வரவேற்புரை ஆற்றினார். இம்மணவிழா வரவேற்பில் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கே.ஆர்.பெரியகருப்பன், ஆர்.காந்தி, எஸ்.எஸ்.சிவசங்கர், துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, திருமதி. செல்வி செல்வம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## கணித்தமிழ் 24 பன்னாட்டு மாநாடு - நிரலாக்கப் போட்டி (Hackathon)

# தமிழ் இணையக் கல்விக் கழக இயக்குநர் அறிக்கை!

சென்னை, நவ.24-

கணித்தமிழ் 24 பன்னாட்டு மாநாட்டின் ஒரு பகுதியாக நிரலாக்கப் போட்டி (Hackathon) நடத்தப்படவிருப்பதாக தமிழ் இணையக் கல்விக்கழக இயக்குநர் சே.ரா. காந்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையில் நடந்த 'தமிழிணையம் 99' மாநாட்டுக்குப் பிறகு 25 ஆண்டுகள் கழித்து தமிழ்நாடு அரசு ஒருங்கிணைக்கும் பன்னாட்டுக் கணித்தமிழ் 24 மாநாடு, எதிர்வரும் பிப்ரவரி மாதம் 8, 9, 10 ஆகிய நாள்களில் சென்னை நந்தம்பாக்கத்திலுள்ள வர்த்தக மையத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. உலகு தழுவி வாழும் தமிழர்களுக்கு இணைய வழியில் தமிழ் கற்றுக்கொடுத்தல், தமிழ் நூல்களையும் இதழ்களையும் அரிய ஆவணங்களையும் மின்னுருவாக்கம் செய்தல், கணினித் தமிழை மேம்படுத்துதல் ஆகிய முக்கியமான பணிகளைச் செய்துவரும் தமிழ் இணையக் கல்விக்கழகம் இந்த மாபெரும் மாநாட்டை ஒருங்கிணைக்கிறது.

'தமிழிணையம் 99' மாநாட்டுக்குப் பிறகு இந்த இடைப்பட்ட காலகட்டத்தில் தொழில்நுட்பம் அடைந்திருக்கும் வளர்ச்சி மிக அதிகம். செயற்கை நுண்ணறிவு என்று சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே நாம் பேசத் தொடங்கி விட்டாலும் அண்மைக் காலத்தில்தான் அது முழு வீச்சில் களம் கண்டிருக்கிறது. எனவே, வளர்ந்துவரும் இந்தத் தொழில்நுட்ப யுகத்தில் தமிழுக்கான இடம் என்ன என்ற கேள்வியோடு, இந்தப் பன்னாட்டு மாநாட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆய்வுக் கட்டுரைகள், உரைகள், விவாதங்கள், கலந்துரையாடல்கள், காட்சி அரங்குகள் ஆகியவை கணித்தமிழ் 24 மாநாட்டின் முக்கியக் கூறுகளாகும்.

இம்மாநாட்டின் ஒரு பகுதியாக தமிழ் இணையக் கல்விக்கழகமானது StartupTN நிறுவனத்துடன் இணைந்து நிரலாக்கப் போட்டியை (Hackathon) நடத்துகிறது. இப்போட்டியின் வாயிலாக நவீனத் தொழில்நுட்பங்களான இயற்கை மொழி ஆய்வு, இயந்திரவழிக் கற்றல், செயற்கை நுண்ணறிவு, இதர டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றில் தமிழ் மொழியின் வளமையை வெளிக்கொணரவும், புதுமைகளைச் சிந்திக்கத் தூண்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.

டிஜிட்டல் யுகத்தில் தமிழ் மொழியின் பயன்பாட்டையும் புரிதலையும் மேம்படுத்தும் புதுமையான கருவிகள் உருவாக்குவதை ஊக்குவித்தல், மொழியியல் அறிஞர்களும் தொழில்நுட்ப வல்லுநர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு தமிழ் மொழியில் தொழில்நுட்பங்களை உருவாக்குவதற்கான சூழலை ஏற்படுத்துதல், கல்வி, உள்ளடக்க உருவாக்கம், தகவல்தொடர்பு போன்ற தளங்களில் பரந்துபட்ட பயனர்கள் பயன்படுத்தும் விதமாகத் தமிழ்மொழியைக் கொண்டுவருவதற்கான தீர்வுகளை உருவாக்குதல், செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தில் தமிழ்மொழியைச் செழுமையுடன் பயன்படுத்துவதற்கான சூழலை உருவாக்குதல் ஆகியவை இந்த நிரலாக்கப் போட்டியின் நோக்கங்களாகும்.

தமிழ் எழுத்துணரி (Tamil OCR), தமிழ்ப் பேச்சைப் புரிந்துகொள்ளுதல் (Tamil Speech Recognition), தமிழ் உள்ளடக்க உருவாக்கம் (Tamil Content Creation), தமிழ் உரையாடி (Tamil Chatbot), தமிழில் இயற்கை மொழி ஆய்வு (Tamil Language NLP) உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட தலைப்புகளில் நிரலாக்கப் போட்டி நடத்தப்படுகிறது. இந்தப் போட்டியில் கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களும், ஆர்வலர்களும், மொழித் தொழில்நுட்பம் சார்ந்து செயல்படும் நிறுவனங்களும் கலந்துகொள்ளலாம்.

இந்தப் போட்டியில் மிகச் சிறப்பாகப் பங்களிப்பவர்களுக்கு, கணித்தமிழ் 24 மாநாட்டில் செயல்விளக்கம் அளிக்க வாய்ப்பு வழங்கப்படும். அவர்களுக்கான பரிசுகளும் மாநாட்டின்போது வழங்கப்படும். மேலும், நிரலாக்கப் போட்டியிலிருந்து உருவாகியிருக்கும் கருவிகள், மென்பொருள்கள், தளங்கள், தொழில்நுட்பங்கள் போன்றவை ஆய்வாளர்கள் மற்றும் பொதுப் பயன்பாட்டிற்காக www.tamilvu.org இணையதளத்தில் பதிவேற்றப்படும்.

அர்ப்பணிப்புமிக்க தொழில்நுட்ப வல்லுநர்கள், தொலைநோக்குச் சிந்தனையாளர்கள், அனுபவமிக்க மொழியியல் அறிஞர்கள், கல்விச் சமூகத்தினர்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டும் முயற்சி இது. இதன் மூலம், தமிழ் மொழியின் பரவலான இருப்பையும், தற்காலத் தொழில்நுட்ப வளர்ச்சிகளில் தமிழ் மொழியின் நிலையையும் வெளிக் கொண்டுவர முடியும். இது இளம் தலைமுறையினருக்கு மிகப் பெரும் அனுபவமாக இருக்கும். இது போட்டியாக மட்டுமல்லாமல், கற்றல் செயல்பாடாகவும் இருக்கும். புதிய வாசல்களைத் திறந்துவைக்கும். நிரலாக்கப் போட்டி குறித்த விரிவான விவரங்களுக்கு: https://www.kanitamil.in/#/hackathon



## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (3)

# சிங்கத்தின் குகையில் சிலந்தி கூடுகட்டுவதா?

## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

கடந்து வந்தது சாதாரணமா, இதோ! “சிட்டிபாபுவின் சிறை டைரி” என்ற நூலில் சிங்க ஏறு சிட்டிபாபுவே தன் கைப்பட ஸ்டாலினைப் பற்றி எழுதியுள்ள வாக்கியங்கள்! இன்று வார ஏடு நடத்தும் சிலர் வயிறெரிந்து பாடுகிறார்களே, அது வசைபுராண வரிகளா? அல்லது வாழ்த்துக் கீதங்களா? அதுவும் தனது ஆருயிரைக் காராக்கிரகக் கொடுமைக்குக் காவு கொடுத்த கழகக் காளை – என் அருமைத் தம்பி – சிட்டிபாபுவின் இதயமல்லவா எழுத்துக்களை குருதியில் நனைத்துக் கொட்டி அடுக்கியிருக்கிறது!

இதோ – அந்தக் கண்ணீரும் செந்நீரும் – கலக்க காராக்கிரகக் கொடுமையைப் படிப்போம் உடன்பிறப்பே, படிப்போம்!

**“வெறிக் கூட்டம் முரசு பறை அறைவது போல் இரு கைகளால் அடி கொடுத்து கொண்டிருந்தன. ஒரு புறத்தில் இக்காட்சி, பள்ளிக்கூட மாணவன் பெஞ்ச் மீது நிற்பது போல் இரும்பு ஏணி அருகில் கன்னத்தில் கை வைத்துக் கொண்டு கதறும் “வி.எஸ்.ஜி.” ஒரே குத்துத்தான் நீலத்துக்கு (நீலநாராயணன்). குள்ள உருவம் நீலம். மேலே நிமிர்ந்து பார்த்திட மார்பகத்தில் மற்றொரு குத்து! முதுகில் இரண்டு தடி அடி! அவ்வளவுதான் குலை நோயில் கேவிக் கொண்டு கீழே விழும் நோயாளி போல் சுருண்டு விழுவதைக் கண்டேன். கால் எடுத்து வைத்து கை கொடுக்க முடியுமா என்று அசைந்தேன். தொண்டையில் ஓர் குத்து எனக்கு! மீண்டும் சுவற்றில் தள்ளப் பட்டேன். அய்யோ! என்று சாய்ந்தேன் நான்.**

**அருகே என் அன்புத் தம்பி! ஆமாம், ஸ்டாலின்தான், தமிழகத்து முதல் அமைச்சரின் மகன் என்று நேற்று வரை அறிந்த அந்த ஆசிரியன் (சுருளிராஜன்) தன் கால் பூட்ஸால் அவன் அழகிய முகத்தைச் சுவைபார்க்க உதைத்தான். அடுத்து கொலைகாரன் ஒருவன் ஓங்கிய கோல் அவனது தோள் பட்டையில்! காக்கி உடை அணிந்த வார்டர் ஒருவன் கன்னத்தில் கை நீட்டினான், கண்டேன் காட்சியை! இவர்கள் இவனை அடித்தே கொன்று விடுவர் என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. மற்றவர்கள்தான் மண்ணுடன் சாய்ந்து கிடப்பவர்களாக இருக்கின்றனர். உதவிக்கு எழ அவர்கள் முடியாதபடி அருகில் எமதூதர்கள். என்ன செய்வது? எனக்கென்று ஓர் துணிவு! திடீர் என்று குறுக்கே பாய்ந்தேன். தம்பியை தள்ளிக் கொண்டே தடிகள் கழுத்தில்!**

**அவைகள் அடிகள் அல்ல. உலைக்களத்தில் பழுத்துக் காய்ச்சிய இரும்பை தட்டிப் பதப்படுத்தும் உளியாக மாற்றி விடும் சம்மட்டி அடிகளாக எனக்கு அமைந்தது. கழுத்தில் அத்தனையும் தாங்கிக் கொண்டேன். அன்புத் தம்பி அறைக்குள்ளே ஓடிவிட வழி கிடைத்தது.**

**வீராசாமியை தூக்கி நிறுத்தி ஒரு குத்து விட்டு உள்ளே தள்ளினர். நீலம், மூச்சுத் திணற வி.எஸ்.ஜி.யை தாங்கிப் பிடித்து அழைத்துச் சென்றார். தம்பியோ, தான்பட்ட அடி மறந்து தன் உடன்பிறப்புகளை உள்ளே அழைத்துச் செல்லும் காட்சி கண்டேன். அவர்களைப் படுக்க வைக்க தன் தோள் துண்டை தரையில் போட்டு, தாக்கப்பட்டவர்களை தாங்கி படுக்க வைத்த காட்சி கண்டேன். என்னை ஒருவன் வாடா தம்பி வா என்று வாயில் ஓர் குத்துவிட்டு உள்ளே தள்ளினான்.”**

சிறையில் நடந்த மிசாக் கொடுமையைத்தான் சிட்டிபாபு இப்படிக் கண்ணீர்க் காவியமாக்கிக் கைப்பட எழுதியுள்ளார்.

கழகக் குடும்பத்தினருக்கு அன்பு அரவணைப்பாகவும், மாறுபட்டவர்க்கு அங்குசமாகவும் விளங்கிடும் அழகிரியும் – தியாகத் தீயில் புடம்போட்ட தங்கமாக ஒளிர்ந்திடும் ஸ்டாலினும் என் ஒரு குடும்பத்தில் மட்டுமல்ல – உன் போன்ற உடன்பிறப்புகள் பலரது குடும்பங்களிலும், அண்ணன், தம்பிகளாக இருக்கின்றார்கள் – அல்லது தணற் காட்டைத் தாமரைப் பொய்கையாக மதிக்கும் தன்மானச் சிங்கங்களாக இருக்கிறார்கள். இருப்பதால்தான் இத்தனை புயல், வெள்ளம், பூகம்பங்களுக்கு ஈடு கொடுத்து இந்த இயக்கத்தின் கொள்கைகள், திட்டங்கள் பூத்துக் குலுங்குகின்றன.

இந்த நறுமணமிக்க நந்தவனத்தில் நுழைந்து, பூக்களையும், செடிகொடிகளையும் நாசப் படுத்தலாமா என்று கணக்கிடுவோரை – அவர்தம் காரியம் கை கூடாமல் தடுத்து விரட்டிட இன்னும் இளைஞர்கள் பல்லோர், நமது நந்தவனத்து வேலிகளில் அமைந்துள்ள வேல் கம்புகளாக விளங்கிட விரைந்து வாரீர் என அழைக்கின்றேன். கருதிப் பார்த்து கடமையைச் செம்மையாகச் செய்திடுவீரானால், சிங்கத்துக் குகையில் சிலந்திகள் கூடு கட்டிட முடியாது! நமது புலிப்போத்துகள் முன்னே, புத்திகெட்ட நரிகள் நடத்திட முனையும் பிரித்தாளும் சூழ்ச்சி, வீழ்ச்சியில்தான் இடறி வீழ்ந்து முடியும் என்பது திண்ணம்!

**அன்புள்ள**

**மு.க.**

(முரசொலி – 10.11.2007)

---

தமிழ் வளர்ச்சித் துறை சார்பில்

# முதலமைச்சர் கணினித் தமிழ் விருது வழங்கல்!

## டிசம்பர் 31 வரை விண்ணப்பிக்கலாம்!

சென்னை, நவ. 24–

முதலமைச்சர் கணினித் தமிழ் விருதுக்கு விண்ணப்பிப்பது குறித்து தமிழ் வளர்ச்சித்துறை அறிவிப்பு வருமாறு:–

பன்னூறு ஆண்டுகளாக வற்றாத படைப்புகளைக் கொண்டு, சீரிளமையோடு இயங்கி வரும் தமிழுக்கும், தமிழ்மொழி, பண்பாட்டு வளர்ச்சிக்குத் தொண்டாற்றிடும் தமிழ்த்தாயின் திருத்தொண்டர்களுக்குத் தமிழால் விளங்கிடும் தமிழ்நாடு அரசு பல்வேறு விருதுகளையும் சிறப்புகளையும் அளித்து, அவர்தம் தொண்டுக்கும் தமிழுக்கும் பெருமை சேர்த்து வருகின்றது நீங்கள் அறிந்த ஒன்றே.

தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கேற்ப, உலகமெலாம் கணினி வழித் தமிழ் மொழி பரவச் செய்யும் வகையில் கணினித் தமிழ் வளர்ச்சிக்காக சிறந்த தமிழ் மென்பொருள் உருவாக்குபவர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக முதலமைச்சர் கணினித் தமிழ் விருது என்ற பெயரில் விருது வழங்கப்பட்டு வருகிறது. விருது பெறுபவருக்கு விருதுத் தொகையாக ரூபாய் 2 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம் மற்றும் தகுதியுரை வழங்கப்படுகிறது.

இதுவரை மென்தமிழ் (தமிழ்ச் சொல்லாளர்) (2013), விருபா வளர்தமிழ் நிகண்டு (2014), விவசாயம் (2015), www.tamilpulavar.org (2016), பிரிபொறி (2017), தமிழ் உரைவழி பேச்சு உருவாக்கி (2018), ‘வாணி’ தமிழ்ப் பிழைத் திருத்தம் (2019), ‘செவ்வியல் இலக்கண – இலக்கியம்’ (2020), வட்டெழுத்து (2021), ‘தமிழ்ப்பேச்சு’ மேம்படுத்திய பதிப்பு (2022) உள்ளிட்ட மென்பொருள்களுக்கு முதலமைச்சர் கணினித் தமிழ் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

அவ்வகையில் 2023ஆம் ஆண்டுக்குரிய முதலமைச்சர் கணினித் தமிழ் விருதுக்கு தனியார் மற்றும் நிறுவனத்திடமிருந்து, தமிழ் வளர்ச்சிக்கான மென்பொருள்கள் / செயலிகள் வரவேற்கப்படுகின்றன. விருதுக்கு அனுப்பப்படவுள்ள மென்பொருள்கள் 2020, 2021, 2022ஆம் ஆண்டுகளில் தயாரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

இவ்விருதுக்குரிய விண்ணப்பம் மற்றும் விதிமுறைகளைத் தமிழ் வளர்ச்சித் துறையின் வலை தளத்திலோ (www.tamilvalarchithurai.tn.gov.in) அல்லது http://awards.tn.gov.in என்ற இணைய தளத்தின் வழியாகவோ இலவசமாகப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

இதுதவிர, தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், தமிழ்ச் சாலை, எழும்பூர், சென்னை 600 008 என்ற முகவரிக்கு அஞ்சல் வாயிலாகவோ 31.12.2023 ஆம் நாளுக்குள் விண்ணப்பங்களை அனுப்பிட வேண்டுகின்றோம். தக்க ஆவணங்களோடு விண்ணப்பங்கள் அமைதல் விரும்பத்தக்கது. மேற்கண்ட இணையதளத்திலேயே போதுமான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

கூடுதல் விவரமறிய விரும்புவோர் 044 28190412, 044 – 28190413 ஆகிய தொலைபேசி எண்களை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம். உரிய நாளுக்குள் (31.12.2023) பெறப்படும் விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும் என்பதை நினைவிற் கொள்ள கனிவுடன் வேண்டுகின்றோம்.

இவ்வாறு தமிழ் வளர்ச்சித்துறை அறிவித்துள்ளது.

---

கலைஞரின் மனசாட்சி! திராவிட இயக்கத்தின் அறிவுப் பெட்டகம்!

# முரசொலி மாறன் நினைவு நாளில் அவருக்கு என் புகழ் வணக்கம்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழஞ்சலி!



சென்னை, நவ. 24–

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாகத் திகழ்ந்த முரசொலி மாறன் அவர்களின் 20ஆம் ஆண்டு நினைவுநாள் நேற்று (23.11.2023)!

அரசியலில் நாகரிகம், பொது வாழ்வில் தூய்மை, உயர்ந்த கொள்கைகள், தொலைநோக்குப் பார்வை, ஒன்றிய அமைச்சரவையில் கழகத்தின் சார்பில் பொறுப்பேற்று உலக அரங்கில் இந்தியாவை உயர்த்திக் காட்டிய பாங்கு என பெருமைக்குரியவராகத் திகழ்ந்தவர்!

இத்தகைய சிறப்புகளை பெற்ற முரசொலி மாறன் அவர்களின் நினைவு நாளையொட்டி, கழகத் தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள புகழஞ்சலியில், "கலைஞரின் மனசாட்சி, திராவிட இயக்கத்தின் அறிவுப் பெட்டகம், முரசொலி மாறன் அவர்களின் நினைவு நாளில் அவருக்கு என் புகழ் வணக்கம்" எனப் புகழாரம் சூட்டியுள்ளார்.

முரசொலி மாறன் அவர்களின் நினைவு நாளையொட்டி நேற்று (23.11.2023), திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:–

**மூத்த பிள்ளையாம் முரசொலியைப் பொறுப்பேற்று நடத்திய கலைஞரின் மனசாட்சி!**

**திராவிட இயக்கத்தின் அறிவுப் பெட்டகம்!**

**தலைநகரில் கழகத்தின் முகம்!**

**நாடாளுமன்றத்தில் மாநில உரிமையின் குரல்!**

**உலக அரங்கில் வளரும் நாடுகளுக்காக வாதாடிய மதியூகி!**

**இப்படி எத்தனை சொன்னாலும் தகும் தகுதிக்குரிய மதிப்புக்குரிய முரசொலி மாறன் அவர்களின் நினைவுநாளில் அவருக்கு என் புகழ்வணக்கம்!**

இவ்வாறு தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டியுள்ளார்.

---

டிசம்பர் இறுதி வரை தினமும்

# தமிழ்நாட்டுக்கு காவிரியிலிருந்து 2,700 கனஅடி நீர் திறந்துவிட வேண்டும்!

## புதுடெல்லியில் நடைபெற்ற காவிரி ஒழுங்காற்றுக் குழு பரிந்துரை!

டெல்லி, நவ. 24 –

காவிரி நீர் ஒழுங்காற்று குழுவின் 90வது கூட்டம் நேற்று டெல்லியில் தொடங்கிய நிலையில் நாளை முதல் டிசம்பர் இறுதி வரை தமிழ்நாட்டுக்கு தினமும் 2,700 கனஅடி தண்ணீர் திறக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது

காவிரி நடுவர் மன்றம் மற்றும் உச்சநீதிமன்ற உத்தரவுகளை பின்பற்றி கர்நாடகா அரசு தமிழ்நாட்டுக்கு தண்ணீர் திறந்து விட வேண்டும். ஆனால் கர்நாடகா அரசு தண்ணீர் திறந்து விடுவது இல்லை.

உச்சநீதிமன்ற உத்தரவை கர்நாடகா மதிக்காமல் மழையில்லை, தண்ணீர் இல்லை என தமிழகத்தை வஞ்சிக்கிறது. அதோடு காவிரி நதி நீரை தமிழ் நாட்டுக்கு திறந்து விடுவதற்கு கர்நாடக அரசு தொடர்ந்து மறுத்து வருகிறது.

மேலும் அங்குள்ள கன்னட அமைப்பினர், விவசாய அமைப்பினர் தமிழ்நாட்டுக்கு தண்ணீர் திறப்பபை எதிர்த்து தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர். மேலும் பந்த் போராட் டங்களும் நடந்தன. அதோடு தமிழ்நாட்டுக்கு தண்ணீர் திறந்து விடப்படும் கிருஷ்ணராஜசாகர் (கே.ஆர்.எஸ்.) அணையையும் முற்றுகையிட்டு போராட்டங்கள் நடத்தினர்.

இந்நிலையில் தான் கடந்த மாதம் 30ம் தேதி நடந்த காவிரி ஒழுங்காற்று குழு கூட்டத்தில் நவம்பர் மாதம் 22ம் தேதி வரை தமிழ்நாட்டுக்கு வினாடிக்கு 2,600 கனஅடி நீரை திறக்க வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டது. இதற்கு கர்நாடக அரசு எதிர்ப்பு தெரிவித்தது. இருப்பினும் வேறு வழியின்றி அந்த தண்ணீரை கர்நாடகா தமிழ்நாட்டுக்கு திறந்து விட்டது.

இந்நிலையில் தான் டெல்லியில் நேற்று காவிரி ஒழுங்காற்று குழுவின் 90வது கூட்டம் நடைபெற்றது. காவிரி நீர் ஒழுங்காற்று குழுவின் தலைவர் வினீத் குப்தா தலைமையில் நேற்று காலை 11.30 மணிக்கு டெல்லியில் தொடங்கியது. இந்த கூட்டத்தில் காணொலி மூலம் தமிழகம், கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களின் நீர் வளத் துறை அதிகாரிகள், ஒழுங்காற்று குழு உறுப்பினர்கள் பங்கேற்றுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில், தமிழக அரசு சார்பில் கர்நாடகா நிலுவையில் உள்ள தண்ணீரை திறந்து விட நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது. அதோடு கர்நாடகாவில் வடகிழக்கு பருவமழை என்பது ஓரளவு பெய்து வருகிறது. இதனால் தண்ணீர் திறப்பதில் அவர்களுக்கு சிக்கல் இருக்காது. அதேவேளையில் கர்நாடகா திறந்து விடும் தண்ணீரை மேட்டூர் அணையில் சேமித்து வைக்கவும் முடியும்.

ஏனென்றால் மேட்டூர் அணையில் 23 டி.எம்.சி. தண்ணீர் தான் இருப்பு உள்ளது. இதனால் கர்நாடகா திறக்கும் தண்ணீரை முழுமையாக சேமிக்க முடியும் என கூறப்பட்டது.

இதை கேட்ட காவிரி நீர் ஒழுங்காற்று குழு கர்நாடகாவை வினாடிக்கு 2,600 தண்ணீர் திறந்து விட வேண்டும் என கூறியிருந்தோம். ஆனால் 5 ஆயிரம் முதல் 8 ஆயிரம் கனஅடி வரை தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இருப்பினும் முந்தைய நிலுவை தண்ணீர் திறக்க வேண்டியுள்ளது.

இதனால் நாளை முதல் டிசம்பர் இறுதி வரை தமிழ் நாட்டுக்கு தினமும் 2,700 கனஅடி நீரை கர்நாடகா திறக்க பரிந்துரை செய்யப்படுகிறது” என கூறியது.

இதன்மூலம் இன்று முதல் கர்நாடகா தமிழ்நாட்டுக்கு 2,700 கனஅடி தண்ணீரை டிசம்பர் இறுதி வரை திறக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

---

1 ஏக்கர் 42 சென்ட் இடத்தை ஒன்றியச் செயலாளர் முருகேசன் தானமாக வழங்கினார்!

# சின்னாளபட்டி நகரின் தூய்மையை காக்க வளமீட்பு பூங்கா!

## அமைச்சர் ஐ.பெரியசாமியின் நடவடிக்கைக்கு பொதுமக்கள் பாராட்டு!

திண்டுக்கல், நவ.24 –

சின்னாளபட்டி நகரின் தூய்மையை காக்க ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் உத்தரவின் பேரில் 1ஏக்கர் 42சென்ட் இடத்தை ஒன்றிய செயலாளர் முருகேசன் பேரூராட்சி செயல் அலுவலர் செல்வராஜிடம் தானமாக வழங்கினார். பேரூராட்சி நிர்வாக வளமீட்பு பூங்காவிற்கு புதிய இடம் வழங்க நடவடிக்கை எடுத்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு சமூக ஆர்வளர்கள், பொதுமக்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி சிறப்பு நிலை பேரூராட்சியில் 18 வார்டுகள் உள்ளன. சுமார் 50ஆயிரம்பேர் வசிக்கின்றனர். பேரூராட்சி பகுதியி லிருந்து சேகரிக்கப்படும் குப்பை கழிவுகள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை தரம் பிரிப்பதற்காக செம்பட்டி சாலையில் அஞ்சுகம் காலனி எதிரே பேரூராட்சி வளம் மீட்பு பூங்கா உள்ளது.

நகரின் வளர்ச்சிக்கு ஏற்ப குப்பை கழிவுகள் அதிகரித்து வருவதால் சாலை ஓரங்களில் குப்பை கழிவுகள் குவித்து வைக்கப்பட்டு பின்பு அப்புறப் படுத்தபட்டன. சின்னாளபட்டி நகர பொதுமக்கள் மற்றும் பேரூராட்சிமன்ற நிர்வாகிகள் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமியிடம் தங்களுக்கு புதிதாக வளம் மீட்பு பூங்கா அமைக்க இடம் வசதி வேண்டுமென கோரிக்கை விடுத்தனர்.

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உடனடியாக அவர்களின் கோரிக்கையை நிறைவேற் றும் வண்ணம் ஆத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசனிடம் வளம்மீட்பு பூங்கா அமைக்க இடவசதி செய்து கொடுக்க வேண்டுமென உத்தரவிட்டார்.

நிகழ்ச்சியின்போது தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபானி, ஆத்தூர் நடராஜன், ஆத்தூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன், திண்டுக்கல் ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன், நிர்வாகி அம்பை ரவி, மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப் பட்டி வாஞ்சிநாதன் அகரம் பேரூராட்சிமன்ற தலைவர் நந்தகோபால், சின்னாளபட்டி பேரூராட்சி துப்புரவு ஆய்வாளர் கணேசன், கும்மம் பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, நெல்லை சுபாஷ், ஆனந்த், ஜான்பீட்டர், நந்தி நடராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---


தமிழ்நாடு அரசு

**தொழில் நுட்பக்கல்வித்துறை**

கலைஞர் 100 1924 - 2023

தொழில் நுட்பக் கல்வி வட்டம், சென்னை – 600 025

**முன் தகுதி மின்னணு ஒப்பந்தப்புள்ளி எண்.38த.பொ/வ.அ.3/தொநுகவ/2023-24 நாள் : 21.11.2023**

**ஒப்பந்தப்புள்ளி படிவம் : மொத்த தொகை / விலை விகித முறை (இரு உறை முறை)**

தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும், மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் தலைமைப்பொறியாளர், பொபது, தொழில் நுட்பக் கல்வி வட்டம், சென்னை – 600 025 அவர்களால் பதிவு பெற்ற தகுதி வாய்ந்த பொதுப்பணித்துறை ஒப்பந்ததாரர்களிடமிருந்து மின்னணு முறையில் கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தங்கள் கோரப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | தோராய மதிப்பீடு (சரக்கு மற்றும் சேவை வரியுடன் ரூபாய் இலட்சத்தில்) | முன் வைப்புத் தொகை ரூபாய் மற்றும் பணி முடிக்க வேண்டிய காலம் | தகுதியான ஒப்பந்ததாரர் | முன் வைப்புத் தொகை மின்னனு முறையில் செலுத்த வேண்டிய செயற் பொறியாளர் |
|---|---|---|---|---|---|
| 1 | சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா செட்டியார் அரசு பொறியியல் தொழில் நுட்ப கல்லூரியில் 100 மகளிர்க்கான விடுதி கட்டும் பணி | 556.00 | 288000/- 13 மாதங்கள் | வகுப்பு 2 மற்றும் அதற்கு மேல் | செயற்பொறியாளர், பொபது தொழில் நுட்பக்கல்விக் கோட்டம், மதுரை |
| 2 | புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரியில் 24 வகுப்பறைகள் கட்டும் பணி | 631.00 | 326000/- 13 மாதங்கள் | வகுப்பு 2 மற்றும் அதற்கு மேல் | செயற்பொறியாளர், பொபது தொழில் நுட்பக்கல்விக் கோட்டம், திருச்சி |

1. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள், மின்னணு வழியாக ஒப்பந்தப்புள்ளி கோருதல் மற்றும் அறிவுறுத்தல்கள் குறித்து http://tntenders.gov.in இணையதளத்தில் தெரிந்துகொள்ளலாம். 2.ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பதிவேற்றம் செய்ய வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : 27.12.2023 காலை 11.00 மணி வரை (மின்னணு முறை) (சர்வர் சிஸ்டம் கடிகாரம்) 3.மின்னணு ஒப்பந்த புள்ளிகள் (முதல் உறை) திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 28.12.2023 காலை 11.30 மணி அளவில் (சர்வர் சிஸ்டம் கடிகாரம்) 4.மின்னணு ஒப்பந்தப்புள்ளி கலந்துகொள்ள மின்னணு கையொப்பம் கட்டாயமாகும். ஒப்பந்தப்புள்ளி விவரங்களில் ஏற்படும் மாற்றங்கள் – திருத்தம் மேற்காணும் இணைய தளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

**தலைமைப் பொறியாளர்,** பொபது., தொழில் நுட்பக் கல்வி வட்டம், சென்னை – 600 025.

செ.ம.தொ.இ/6155/ஒப்பந்தப்புள்ளி/2023



**தமிழ்நாடு அரசு, பொதுப்பணித்துறை**

**கட்டடம் (க & ப ) வட்டம் தஞ்சாவூர். இன விலை முறை**

கலைஞர் 100 1924 - 2023

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 16/க.பொ/க (க & ப) வட்டம். தஞ்சாவூர் /2023-2024/ நாள்.21.11.2023**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டடம் (க & ப ) வட்டம், தஞ்சாவூர்-1 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து ஒரு பணிக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1) கடலூர் மாவட்டத்தில் ஒரு பணிக்கான ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை அணுகவும்.

| | | |
|---|---|---|
| 2 | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் | 24.11.2023 முதல் 11.12.2023 மாலை 3.00 மணி வரை. |
| 3 | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | 11.12.2023 மாலை 3.00 மணி வரை. |
| 4 | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் | 12.12.2023 மாலை 3.00 மணி |

5) விலை மாறுதல் கூறு (Price Adjustment Clause) இப்பணிக்கு பொருந்தும்

**கண்காணிப்பு பொறியாளர், பொபது (கூ/பொ)**
**கட்டட (க & ப) வட்டம், தஞ்சாவூர்- 1.**

**செ.ம.தொ.இ / 6189/ ஒப்பந்தப்புள்ளி /2023**



ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, திண்டுக்கல் மாவட்டம், சித்தையன்கோட்டையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க 22.11.2023 அன்று அடிக்கல் நாட்டினார். அருகில் திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பெ.திலகவதி, பேரூராட்சிகள் உதவி இயக்குநர் திருமதி ரா.மனோரஞ்சிதம், சித்தையன்கோட்டை பேரூராட்சித் தலைவர் திருமதி மு.போதும்பொண்ணு, பேரூராட்சி துணைத்தலைவர் மு.ஜாகீர்உசேன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மண்டல மேலாளர் ம.பாலமுருகன் உட்பட பலர் உள்ளனர்.



ஒன்றிய முன்னாள் அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட கழக அலுவலகத்தில் முரசொலி மாறன் அவர்களின் திருஉருவப்படத்திற்கு நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் மாநில வர்த்தக அணி செயலாளர் மாலைராஜா, மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த், மாவட்ட துணைச் செயலாளர்கள் தர்மன்,கிரிஜா குமார்,மேயர் சரவணன்,தீர்மானக் குழு உறுப்பினர் சுப.சீதாராமன், அருண்குமார்,கருணாகரன், மீரான் மைதீன்,பொன்னையா பாண்டியன்,அனிதா,தேவிகா, ஜோதி,பிரியா,ஜெனி,செந்தில், முருகன்,மாலதி,செல்லத்துரை, பிரான்சிஸ்,நெல்லை ரவி, ஸ்டீபன்,நவநீதன்,பலராமன், வீரபாண்டியன்,கலையரசன், இசக்கி பாண்டியன்,ஜலீஸ் ரகுமான்,சரத் மணி, சங்கரலிங்கம்,ரகுமான் ஷா, பாலன்,சண்முகசுந்தரம்,கவிஞர் மூர்த்தி,அலெக்சாண்டர் பிரிட்டோ,காதர்ஒலி,மைதீன் உட்பட கழகத்தினர் திரளாக கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில்

# முரசொலி மாறன் 20ஆம் ஆண்டு நினைவுநாள்!

## திருவுருவப் படத்திற்கு - பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மாலை அணிவித்து மரியாதை!

திருவண்ணாமலை, நவ. 24 -

திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், மறைந்த முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 20 ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு, அவரது திருவுருவப்படத்திற்கு பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

23.11.2023 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோவிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், மாவட்ட தி.மு.க. சார்பில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 20 ஆம் ஆண்டு நினைவுநாள் அனுசரிக்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட அவைத்தலைவர் த.வேணுகோபால் தலைமை வகித்தார்.

கழக மருத்துவர் அணி துணைத்தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, தலைமை செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் ப்ரியா விஜய ரங்கன், விஜயலட்சுமிரமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பொதுப்பணித் துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான எ.வ.வேலு, முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் நினைவுநாளை முன்னிட்டு, அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் செய்திருந்தார். நிகழ்ச்சியில் நகர மன்ற தலைவர் நிர்மலா வேல் மாறன், மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி. எம்.நேரு, ஜெ.மெய்கண்டன், சு.விஜி (எ) விஜயராஜ்,கு.கணேஷ், பாலமுரளிகிருஷ்ணா, இரா. கார்த்திகேயன், ஏ.டபல்யூ. சர்தார், எஸ்.டி.ஆர்.எஸ். பாபு, பி.கே.ஏ. அருண், ஒன்றிய செயலாளர்கள் மெய்யூர் சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், பா.ராமஜெயம், பொதுக்குழு உறுப்பினர் நா.பழனி, வழக்கறிஞர்கள் டி.எம்.கதிரவன், ந.முரளி, நகர நிர்வாகிகள் சி.சண்முகம், மு. கருணாமூர்த்தி, ஜீவரேகா விஜயராஜ், குட்டி க.புகழேந்தி, ஹக்கிம்சேட், துரை.வெங்கட், மாவட்ட துணை அமைப்பாளர்கள் எம்.ஆர்.கலைமணி, டி.எம். கலையரசு, பா.ஷெரீப், அய்யம்பாளையம் திருநாவுக்கரசு, இரா.சீனுவாசன், ஏ.எம்.பாஷா, இரா.ராஜசேகரன், ஆர்.வெங்கடேஷ், டி.பென்ராபர்ட், பச்சையம்மாள் யேசு மற்றும் மண்டி ஏழுமலை, சி.கே.சசிகுமார் சென்னை சுரேஷ், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை தந்த

# கழக இளைஞரணியினரின் இருசக்கர வாகனப் பேரணி!

## அமைச்சர் பெரியகருப்பன் தலைமையில் உற்சாக வரவேற்பு!

சிவகங்கை, நவ. 24 -

வருகிற டிசம்பர் 17ஆம் தேதி சேலத்தில் இளைஞரணி இரண்டாவது மாநாடு நடைபெற உள்ளது. அதனை ஒட்டியும் தமிழகத்தில் நீட் தேர்வுக்கு விலக்கு கோரியும் இருசக்கர வாகனப் பேரணியை கன்னியாகுமரியில் மாநில இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இம் மாதம் 15ம்தேதி கன்னியாகுமரியில் துவக்கி வைத்தார். பல்வேறு மாவட்டங்களில் பிரச்சாரம் மேற்கொண்ட இருசக்கர வாகன பேரணி குழுவினர் ராமநாதபுரத்தில் இருந்து இரண்டு நாட்கள் பயணமாக சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை தந்தனர்.

மாநில மாணவரணி தலைவர் ராஜிவ்காந்தி தலைமையில் வந்தகுழுவினரை சிவகங்கை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனிசெந்தில்குமார் தேவகோட்டை நகரசெயலாளர் பெரி.பாலா ஆகியோர் இருசக்கர வாகனத்தை ஒட்டியவாறு வரவேற்றுஅழைத்துவந்தனர். அவர்களை சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மாவட்ட கழக அலுவலகத்தில் இருசக்கர வாகன பேரணியினரை மாவட்ட செயலாளரும் கூட்டுற வுத்துறை அமைச்சருமான கேஆர்.பெரிய கருப்பன் கைத்தறி ஆடை அணிவித்து முதலில் வரவேற்றார்.

அவரைத்தொடர்ந்து முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல் .ஏ .மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் ஆகியோர் வரவேற்றார்கள்.

இருசக்கர வாகன பேரணியில் பங்கேற்ற அனைவருக்கும் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப் பட்டது.

தொடர்ந்து இருசக்கர வாகன பேரணி காரைக்குடியில் 5 விளக்கு, கழனி வாசல், ஆகிய பகுதிகளில் தெருமுனைப் பிரச்சாரத்தினை நடத்தினார்கள். இரண்டாவது நாளாக நேற்று திருப்பத்தூர் அண்ணா சிலை முன்பாகவும் சிவகங்கையில் நீதி மன்ற வாயிலில் உள்ள அண்ணா சிலை முன்பாகவும் மானாமதுரை யில் ஒன்றிய அலுவலகம் முன்பாகவும் நீட்விலக்கு , மற்றும் சேலத்தில் நடைபெற உள்ள மாநில இரண்டாவது இளைஞர் மாநாடு குறித்து விளக்கிப்பேசினார்கள்.

இருசக்கர வாகனபேரணி யினரை மாவட்ட அவைத்தலைவர் அ.கணேசன், மாவட்ட துணை செயலாளர் கள் த.சேங்கை மாறன்,கே.எஸ்.எம். மணிமுத்து,திருமதிஜோன்ஸ்ருசோ, முன்னாள் எம். எல்.ஏக்கள் சுப.மதியரசன், எஸ்.மாரியப்பன்கென்னடி மாநில மாணவரணி இணை செயலாளர் பூரண சங்கிதா, ,ஒன்றியசெயலாளர்கள் நாகனிரவி, பூபால சிங்கம்,லெ.மு.ரவிச்சந்திரன்,சுப.சின்னத்துரை, கே.ஆர்.ஆனந்த்,நா. நெடுஞ்செழியன்,குன்னக்குடிசுப்பிர மணியன், எஸ்.சண்முகவடிவேலு, கே.பாலசுப்பிரமணியன், விராமதிமாணிக்கம், பி.செல்வராசு, திருமலை முத்துராமலிங்கம், துரை. ராஜாமணி,எம்.அண்ணாத்துரை,வே.தமிழ்மாறன்,கா. வெங்கட்ராமன்,ஆறு.செல்வராசன், ஆர்.எம்.கென்னடி, வே.ஆரோக்கிய சாமி,நகர்கழக செயலாளர்கள் என்.குணசேகரன், பெரி.பாலா, க.பொன்னுச்சாமி, பேரூர் கழக செயலாளர்கள் அசோக்,ஆர்.கார்த்திகேயன், கதிர்வேல்,நாகூர்கனி,கே.பி.எஸ்.பழனியப்பன், செயற்குழு உறுப்பினர் தா.ராமையா, பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, ஏ. ஆர்.ஜெயமுர்த்தி, த.உதயகுமார், அம்பலமுத்து, மதார்சேட், சோமசுந்தரம், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்டமகளிர் தொண்டரணி வேட்பாளர் திருமதி ஹேமலதா செந்தில், மகளிரணி நிர்வாகிகள் மு.மணி மேகலை திலகவதி கண்ணன், ,மார்கரெட்கமலா, சத்யா ராஜா, பாக்கியலட்சுமி சண்முகப்பிரியா, பத்மாவதி,

மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கார்த்தி,சேதுபதிராஜா, கே.எம்.பொற்கோ, பரணி கிட்டு, எஸ்.எம். மதிவாணன், முகமதுமகாதீர், மாவட்ட சுற்றுசூழல் துணை அமைப்பாளர் கும ணன், பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதிகோகில ராணிநாராய ணன், இளைஞரணி நிர்வாகிகள், சிவபுரிசேகர், கார்த்தி,சாகீர்உசேன், அண்ணாமலை, ஆர்.சேகர், பைரோஸ் கான், வைகைமாறன், மனோகரன், பஷிர், இலக்கிய அணி அழகையாசிறு பான்மைஅணி சேவியர் , ஒன்றியகுழு தலைவர்கள் திருமதி மஞ்சுளா பாலசந்தர், திருமதி லதாஅண்ணாத்துரை, துணைத்தலைவர் முத்துச்சாமி, ஒன்றிய , நகர, பேரூர் கழக நிர்வாகிகள் பொருளாளர் ஏ.எம். கண்ணன்,ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், ராம.ரவி, புதூர்கண்ணன், முத்துராம லிங்கம், ரவிச்சந்திரன், ஷாஜ கான் தகவல் தொழில் நுட்ப அணி கண்ணன், பேரூராட்சி மன்றத் தலைவர் நஜ்முதீன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே. எஸ்.நாராயணன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் சன்சீமான் சுப்பையா. மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழுதலைவர் கொத்த மங்கலம்சேது, அமைப்பாளர்கள் சிதம்பரம், சிங்க முத்து , மாவட்ட நெசவாளரணி அமைப்பாளர் முருகானந்தம், மற்றும் ஒன்றிய நகர பேரூர் இளைஞர் அணி நிர்வாகிகள் வரவேற்றார்கள். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் தலைமையில் துணை அமைப்பாளர்கள் இருசக்கரவாகன பேரணியினரின் சுற்றுப்பயண ஏற்பாடுகளை செய்திருந்தார் கள். இடைவிடாது மழை பெய்தபோதிலும் இருசக்கர வாகன பிரச்சார பேரணி நடைபெற்றது.



சிவகங்கையில் நடைபெற்ற 70வது அனைத்திந்திய கூட்டுறவு வாரவிழாவில் மாவட்ட அளவில் சிறப்பான முறையில் லாபத்துடன் செயல்பட்டு வரும் திருப்புவனம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கான கேடயத்தினை தலைவர் த.சேங்கைமாறனிடம் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் வழங்கி பாராட்டினார்.உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித், மண்டல கூட்டுறவு இணைப்பதிவாளர் திருமதி ஜுனு,மாவட்ட கவுன்சிலர் நாகனிசெந்தில்குமார், ஊராட்சி மன்றத்தலைவர் கே.எஸ்.எம்.மணிமுத்து, நகர்மன்ற தலைவர் சி.எம்.துரைஆனந்த் செயலர் கிருஷ்ணன் ஆகியோர் உள்ளனர்.

### எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில்

# கட்சி பேதமின்றி மக்கள் நலனுக்கான ஆட்சி நடைபெறுகிறது!

## சித்தையன் கோட்டையில் - அடிக்கல் நாட்டு விழாவில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

திண்டுக்கல், நவ. 24 -

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மக்கள் நலனுக்கான நல்லாட்சி நடைபெறுகிறது என்று சித்தையன்கோட்டையில் ரூ.1,637லட்சம் மதிப்பில் அம்ரூத் 2.0 குடிநீர் திட்டம், ரூ.62.50 லட்சம் மதிப்பில் நேரடி கொள்முதல் நிலையம், நரசிங்கபுரத்தில் ரூ.8லட்சத்திற்கான நாடக மேடை கட்டும் பணிக்கான அடிக்கல் நாட்டுவிழாவில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி கலந்துகொண்டு பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் சித்தையன்கோட்டை பேரூராட்சியில் வசிக்கும் பொதுமக்களின் நலன் கருதி வீடுகளுக்கு குடிதண்ணீர் இணைப்பு பணிக்கு ரூ.1,637லட்சம் மதிப்பில் அம்ரூத் 2.0 திட்டப்பணிக்கான அடிக்கல்நாட்டுவிழா மற்றும் விவசாயிகளின் நலன் கருதி ரூ.62.50லட்சம் மதிப்பில் நேரடி கொள்முதல் நிலையம் கட்டுவது நரசிங்கபுரத்தில் ரூ.8லட்சம் மதிப்பில் நாடகமேடை கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

விழாவிற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி தலைமைதாங்கினார். திண்டுக்கல் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ரா.மனோரஞ்சிதம் வரவேற்று பேசினார். திண்டுக்கல் எம்.பி. ப.வேலுச்சாமி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு. பாஸ்கரன், ஒன்றியபெருந் தலைவர் மகேஸ்வரி முருகேசன், துணைத்தலைவர் ஹேமலதா மணிகண்டன், பேரூராட்சிமன்ற தலைவர் போதும்பொன்னு முரளி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. உறுப்பினரும், திமுக மாநில துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் பணிகளை துவக்கி வைத்துவிட்டு பொதுமக்கள் மத்தியில் பேசும்போது;

தமிழகத்தில் மக்கள் நலனுக்கான நல்லாட்சி தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்று வருகிறது. 10ஆண்டுகாலமாக சித்தையன்கோட்டை பேரூராட்சி பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு வீடுதோறும் குடிதண்ணீர் வழங்க போதுமான தண்ணீர் வரத்து இல்லாததால் கொடுக்கமுடியவில்லை. நிலக்கோட்டை, ஆத்தூர் ஒன்றிய பகுதியில் உள்ள கிராமங்களுக்கு வைகை அணையிலிருந்து குடிதண்ணீர் கொண்டுவர ரூ.300கோடி முதல் 500கோடியிலான குடிதண்ணீர் திட்டம் விரைவில் தொடங்க இருக்கிறது. இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டால் சித்தையன் கோட்டை பேரூராட்சி பகுதி மட்டுமின்றி ஆத்தூர் ஒன்றியத்தில் உள்ள கிராம ஊராட்சிகளில் 100சதவீதம் குடிதண்ணீர் பிரச்சினை தீர்ந்துவிடும் தற்போது காவிரி கூட்டு க்குடிநீர் திட்டம் மூலம் குடிநீர் கொண்டுவரப்பட்டுள்ளது. வைகை அணையிலிருந்தும் குடிதண்ணீர்; கொண்டுவந்து விநியோகம் செய்தால் தினசரி சித்தையன்கோட்டை பேரூராட்சியில் உள்ள பொது மக்களுக்கு குடிதண்ணீர் கிடைக்கும்.

சித்தையன்கோட்டை பகுதியில் எந்த பகுதி மேடாக உள்ளது, எந்த பகுதி தாழ்வாக உள்ளது என்பதை ஆய்வு செய்து தேவைப்படும் இடத்தில் மேல்நிலை தண்ணீர் தொட்டி கட்டிக்கொடுக்கப்பட்டு சீரான குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வடகிழக்கு பருவ மழையை நம்பித்தான் இப் பகுதி விவசாயிகள் உள்ளனர். அவர்களின் நலன் கருதி நெல் கொள்முதல் நிலையம் கட்டப்பட உள்ளது. திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைந்துள்ள இந்த ஆட்சி மக்கள் நலனுக்கான நல்லாட்சி என்றதோடு கட்சி பேதமின்றி எல்லா மக்களுக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் அதுதான் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் அமைந்த திராவிடமாடல் ஆட்சி.

இவ்வாறு அமைச்சர் ஐ. பெரியசாமி பேசினார்.

நிகழ்ச்சியில் தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் சத்தியமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் பிள்ளை யார்நத்தம் முருகேசன், ஆத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளர் பாறைப்பட்டி ராமன், முன்னாள் ஒன்றிய செயலாளர் பி.சி.முரளிதரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மனலூர் மணிகண்டன், பேரூராட்சி செயல்அலுவலர் சிவக்குமார், பேரூராட்சி மன்ற துணைத்தலைவர் ஜாகீர் உசேன், தமிழ்நாடு நுகர்வோர் வாணிப கழக மண்டல மேலாளர் ம.பாலமுருகன், தி.மு.க. நிர்வாகி அம்பை ரவி, மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன் சித்தயன்கோட்டை பேரூர்கழக செயலாளர் சக்திவேல், முன்னாள் செயலாளர் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். முன்னதாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் நீடுழி வாழ மும்மதங்களைச் சேர்ந்தவர்கள் வாழ்த்தினர்.

### தமிழ்நாடு முன்னாள் ஆளுநர்:

# பாத்திமா பீவி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ. 24-

தமிழ்நாடு முன்னாள் ஆளுநர் பாத்திமா பீவி அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

தமிழ்நாடு முன்னாள் ஆளுநரும், உச்சநீதிமன்ற நீதிபதியான முதல் பெண்மணி என்ற பெருமைக்குரியவருமான பாத்திமா பீவி அவர்கள் மறைந்தார் என்றறிந்து வருந்துகிறேன்.


உச்சநீதிமன்ற நீதிபதி, தேசிய மனித உரிமைகள் ஆணைய உறுப்பினர், கேரள பிற்படுத்தப்பட்டோர் ஆணையத் தலைவர், தமிழ்நாடு ஆளுநர் எனப் பல உயர்பொறுப்புகளில் பணியாற்றியுள்ள பாத்திமா பீவி அவர்களது மறைவால் வாடும் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வே. குமரேசன்

நவம்பர் 24 (2006)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து, ஆர்.கே.நகர் பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.

17வது வட்டக் கழகச் செயலாளராகவும் – பகுதி துணைச் செயலாளராகவும் – பகுதி செயலாளராகவும், பின்னர் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.

வண்ணாரப்பேட்டை பால் நுகர்கோவர் கூட்டுறவு சங்கத் தலைவராகவும், நாம்கோ இயக்குநராகவும் பதவி வகித்தவர்.

1962 – விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் – இலங்கைத் தமிழர் ஆதரவுப் போராட்டம் போன்ற கழகம் அறிவித்த அனைத்துப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## மாநகராட்சிகள் – நகராட்சிகள் – பேரூராட்சிகளில்

# ரூ.929.37 கோடி மதிப்பீட்டில் 230 திட்டங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணை!

சென்னை, நவ.24–

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ஒன்றிய, மாநில அரசுகள் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிதி பங்களிப்புடன் பல்வேறு மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் ரூ.929.37 கோடி மதிப்பீட்டில் 230 அடிப்படை வசதி திட்டங்களை செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்.**

நகர்ப்புர பகுதிகளில் முழுமையான நீர் ஆதார பாதுகாப்பினை உறுதி செய்வது, அனைத்து வீடுகளுக்கும் வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவது, கழிவுநீர், கசடு மேலாண்மை மற்றும் பயன்படுத்தப்பட்ட நீரின் மறுசுழற்சி/மறுபயன்பாடு, கழிவு நீர் நிலைகளை புனரமைப்பது மற்றும் பசுமை வெளிகள், பூங்காக்கள் உருவாக்குவது உள்ளிட்ட நோக்கங்களைக் கொண்டு ஒன்றிய, மாநில அரசுகள் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிதி பங்களிப்புகளுடன், அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் 2.0 (அம்ரூத் 2.0) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின்சார்பில் அம்ரூத் 2.0. திட்டத்தின் கீழ், மொத்தம் ரூ.330.12 கோடி மதிப்பீட்டில் காரைக்குடி, இராஜபாளையம் நகராட்சிகள், வேலூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, நாகர்கோவில், திருச்சிராப்பள்ளி, தாம்பரம், கடலூர், ஈரோடு, ஆவடி மற்றும் திண்டுக்கல் மாநகராட்சிகளில், தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் 24x7 குடிநீர் வழங்கல் முன்னோடித் திட்டங்களை (24x7 water supply system to the selected pilot water zones) செயல்படுத்த முதலமைச்சர் அவர்கள் நிருவாக அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.



அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் காரைக்குடி நகராட்சியின் விடுபட்ட பகுதிகளுக்கு ரூ.33.71 கோடி மதிப்பீட்டிலும், மதுரை மாநகராட்சியின் விடுபட்ட பகுதிகளுக்கு ரூ.452.42 கோடி மதிப்பீட்டிலும், பாதாளச் சாக்கடை திட்டத்தை செயல்படுத்தவும் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பல்வேறு நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் மொத்தம் ரூ.11.07 கோடி மதிப்பீட்டில் நீர்நிலைகளை புனரமைக்கும் 17 பணிகளும், ரூ. 8.94 கோடி மதிப்பீட்டில் பசுமை வெளிகள், பூங்காக்களை உருவாக்குவதற்கான 27 பணிகளும் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

நாமக்கல் மாவட்டம் மோகனூர் மற்றும் ஈரோடு மாவட்டம் அந்தியூர் பேரூராட்சிகளுக்கு மொத்தம் ரூ.46.74 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டு திட்டங்கள் செயலாக்கப்படவுள்ளன.

மேலும், பல்வேறு பேரூராட்சிகளில் மொத்தம் ரூ.17.49 கோடி மதிப்பீட்டில் நீர்நிலைகளை புனரமைக்கும் 59 பணிகளும், ரூ.27.91 கோடி மதிப்பீட்டில் பசுமை வெளிகள் மற்றும் பூங்காக்களை உருவாக்குவதற்கான 110 பணிகளும் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப் படவுள்ளன.

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள ரூ.0.97 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம், அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.929.37 கோடி மதிப்பீட்டில் 230 பணிகளை செயலாக்க முதலமைச்சர் அவர்கள் நிருவாக அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட நகரங்கள், அவற்றின் குடிநீர் தேவையில் தன்னிறைவை பெறவும், கழிவு நீரை பாதுகாப்பான முறையில் சுத்திகரிக்கவும், நீர்நிலைகளை மேம்படுத்தவும் அதன் மூலம் குடிநீர் ஆதாரங்களை உறுதிப்படுத்தவும் ஏதுவாக அமையும். மேலும், பசுமை வெளிகள் மற்றும் பூங்காக்கள், இந்நகர மக்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கான வாய்ப்புகளை மேம்படுத்தவும் வழிவகுக்கும்.

மேற்கண்டவாறு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் செயலாளர் தெரிவித்துள்ளார்.

### புதுக்கோட்டை மாவட்டம்

## ஆலங்குடி தொகுதி - மாங்காட்டில் 1000 மரங்கள் நடும் பணி!

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைத்தார்!

புதுக்கோட்டை நவ.24-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் மாங்காடு ஊராட்சி தீத்தாணி குளக்கரையில் 1000 மரக்கன்றுகள் நட்டு குறுங்காடு உருவாக்கும் முயற்சியின் முன்னெடுப்பாக நடைபெற்ற மரம் நடு விழாவில் காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் கலந்து கொண்டு மரக்கன்றுகள் நட்டு மரம்நடு விழாவை தொடங்கி வைத்து உரையாற்றினார்.

அப்போது அவர் கடந்த 2018 நவம்பர் மாதம் 16ம் தேதியில் கஜா புயல் இப்பகுதியை துவம்சம் செய்தது அதிலிருந்து மக்கள் மீளாத் துயரத்தில் உள்ளனர். இப்பகுதியில் இருந்த மரங்கள் செடி கொடிகள் அனைத்தும் காணாமல் போய்விட்டன. ஆகவே இப்போது ஆங்காங்கே தெரிகின்ற குளங்கள் ஏரிகள் பொட்டல்களில் மரக்கன்றுகள் நட்டு அவற்றை பசுமை மாறாமல் பராமரிக்க உறுதியேற்போம் எனக்கூறினார். மேலும் அவர் பேசுகையில் வரும் காலங்களில் ஆயிரம் மரக்கன்றுகள் வீதம் ஆயிரம் இடங்களில் நடவு செய்து நமது தொகுதியை பசுமை பூமியாக மாற்ற டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் உறுதியேற்று செயல்படவும் என அமைச்சர் அழைப்பு விடுத்தார்.

விலை உயர்ந்த சந்தனம் தேக்கு, நாவல் மரம், அரச மரம், புங்கன், நெல்லி வேம்பு மற்றும் மா பலா உள்ளிட்ட பலன் தரக்கூடிய பலமரங்கள் இங்கே நடவு செய்யப்பட்டுள்ளது அவற்றை நமது வீட்டு மரங்களை பராமரிப்பது போல் பசுமை மாறாமல் பராமரித்து ஆடு மாடுகள் மேயாதவாறு முள்வேலி அமைத்து பாதுகாக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் மாநில திமுக சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் கார்த்திகேயன், மாவட்ட துணைச் செயலாளர் ஸ்ரீதேவி அண்ணாத்துரை,

ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கே.பி.கே.டி. தங்கமணி, பனங்குளம் ரவி, அறந்தாங்கி ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், கீரமங்கலம் பேரூராட்சி தலைவர் கே.சி.சிவக்குமார், எம்எம்.பாலு, சர்வேயர் எம்.நடேசன், பசுமை தேசம் சதீஷ் குமார், மாங்காடு மனோகரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் முன்னோடிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பொது மக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர், விழா ஏற்பாடுகளை ஊராட்சி மன்ற தலைவர் ஜானகி செல்வராஜன் செய்திருந்தார்.

### சேலம் கிழக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில்

## ஏற்காட்டில் மாபெரும் கைப்பந்து போட்டி!

### பொன்.கௌதமசிகாமணி எம்.பி. பரிசு வழங்கினார்!

சேலம், நவ. 24-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் கழக இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆலோசனைப்படி மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மாவட்ட அளவிலான மாபெரும் கைபந்து போட்டி மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் பிரண்ட்ஸ் ரமேஷ் தலைமையில் நடைபெற்றது. போட்டிக்கு சிறப்பு அழைப்பாளராக கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினரும் மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளருமான டாக்டர் பொன். கௌதம சிகாமணி கலந்துகொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசையும் கோப்பையையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஏற்காடு ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன், மாநில பொதுக்குழு உறுப்பினர் சந்திரமோகன், விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் முனைவர் தங்க பாண்டியன், லட்சுமண பெருமாள், செல்வகுமார், ஆவின் செல்வமணி மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் சங்கர்,

கோபி, சிலம்பரசன், ராஜகோபால், மாவட்ட பிரதிநிதி வெள்ளைச்சாமி, ஒன்றிய பொருளாளர் அருணாசலம், முன்னாள் மஞ்சகுட்டை பஞ்சாயத்து தலைவர் சம்பத், சிறுபான்மை பிரிவு மாவட்ட துணை அமைப்பாளர் சார்லஸ், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் கருணாநிதி, முன்னாள் ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி சாமிதுரை, இளைஞர் அணி வெங்கடேசன், சற்குணம் ஏற்காடு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர், ஆதிசங்கர், விஜய் மற்றும் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

விளையாட்டு போட்டி ஏற்பாட்டினை மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஏற்காடு ரமேஷ் பாபு செய்திருந்தார்.


தமிழ்நாடு அரசு

**தொழில் நுட்பக்கல்வித்துறை**

கலைஞர் 100 1924 - 2023

தொழில் நுட்பக் கல்வி வட்டம், சென்னை - 600 025

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி எண்.37த.பொ/வ.அ.3/தொநுகவ/2023-24 நாள் : 21.11.2023**

**ஒப்பந்தப்புள்ளி படிவம் : மொத்த தொகை / விலை விகித முறை (ஒரு உறை முறை)**

தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும், மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் தலைமைப்பொறியாளர், பொபது, தொழில் நுட்பக் கல்வி வட்டம், சென்னை – 600 025 அவர்களால் பதிவு பெற்ற தகுதி வாய்ந்த பொதுப்பணித்துறை ஒப்பந்ததாரர்களிடமிருந்து மின்னணு முறையில் கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தங்கள் கோரப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | தோராய மதிப்பீடு (சரக்கு மற்றும் சேவை வரியுடன் ரூபாய் இலட்சத்தில்) | முன் வைப்புத் தொகை ரூபாய் மற்றும் பணி முடிக்க வேண்டிய காலம் | தகுதியான ஒப்பந்ததாரர் | முன் வைப்புத் தொகை மின்னணு முறையில் செலுத்த வேண்டிய செயற் பொறியாளர் |
| --- | --- | --- | --- | --- | --- |
| 1 | மதுரை தமிழ்நாடு பாலிடெக்னிக் கல்லூரியில் 6 வகுப்பறைகள், 2 ஆய்வகங்கள் மற்றும் 5 கழிப்பறைத் தொகுப்புகள் கட்டும் பணி | 336.00 | 178000/- 9 மாதங்கள் | வகுப்பு 3 மற்றும் அதற்கு மேல் | செயற்பொறியாளர், பொபது தொழில் நுட்பக்கல்விக் கோட்டம், மதுரை |
| 2 | சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் 6 வகுப்பறைகள், 3 ஆய்வகங்கள் மற்றும் 3 கழிப்பறைத் தொகுப்புகள் கட்டும் பணி | 356.00 | 188000/- 12 மாதங்கள் | வகுப்பு 3 மற்றும் அதற்கு மேல் | |
| 3 | மதுரை ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் 12 வகுப்பறைகள் மற்றும் 2 கழிப்பறைத் தொகுப்புகள் கட்டும் பணி | 332.00 | 176000/- 9 மாதங்கள் | வகுப்பு 3 மற்றும் அதற்கு மேல் | |
| 4 | தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 12 வகுப்பறைகள் மற்றும் 1 கழிப்பறைத் தொகுப்பு கட்டும் பணி | 321.00 | 171000/- 9 மாதங்கள் | வகுப்பு 3 மற்றும் அதற்கு மேல் | |
| 5 | தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி அரசு பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் 6 வகுப்பறைகள் மற்றும் 1 ஆய்வகம் கட்டும் பணி | 215.00 | 118000/- 7 மாதங்கள் | வகுப்பு 3 மற்றும் அதற்கு மேல் | செயற்பொறியாளர், பொபது தொழில் நுட்பக்கல்விக் கோட்டம், திருநெல்வேலி |
| 6 | திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரியில் 14 வகுப்பறைகள் கட்டும் பணி | 352.00 | 186000/- 12 மாதங்கள் | வகுப்பு 3 மற்றும் அதற்கு மேல் | |
| 7 | தென்காசி மாவட்டம், சுரண்டை காமராஜர் அரசு கலைக் கல்லூரியில் 14 வகுப்பறைகள் கட்டும் பணி | 351.00 | 186000/- 12 மாதங்கள் | வகுப்பு 3 மற்றும் அதற்கு மேல் | |
| 8 | புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தாலுக்கா அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் 5 வகுப்பறைகள் மற்றும் 5 ஆய்வகம் கட்டும் பணி | 443.00 | 232000/- 12 மாதங்கள் | வகுப்பு 3 மற்றும் அதற்கு மேல் | செயற்பொறியாளர், பொபது தொழில் நுட்பக்கல்விக் கோட்டம், திருச்சி |
| 9 | திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 10 வகுப்பறைகள் கட்டும் பணி | 271.00 | 146000/- 8 மாதங்கள் | வகுப்பு 3 மற்றும் அதற்கு மேல் | |
| 10 | பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 14 வகுப்பறைகள் கட்டும் பணி | 354.00 | 187000/- 12 மாதங்கள் | வகுப்பு 3 மற்றும் அதற்கு மேல் | |
| 11 | திருச்சி 22 துவாக்குடி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் 8 வகுப்பறைகள், 5 ஆய்வகங்கள் மற்றும் கழிப்பறைத் தொகுப்பு கட்டும் பணி | 485.00 | 253000/- 11 மாதங்கள் | வகுப்பு 3 மற்றும் அதற்கு மேல் | |

1. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள், மின்னணு வழியாக ஒப்பந்தப்புள்ளி கோருதல் மற்றும் அறிவுறுத்தல்கள் குறித்து http://tntenders.gov.in இணையதளத்தில் தெரிந்துகொள்ளலாம். 2.ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பதிவேற்றம் செய்ய வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : 27.12.2023 காலை 11.00 மணி வரை (மின்னணு முறை) (சர்வர் சிஸ்டம் கடிகாரம்) 3.மின்னணு ஒப்பந்த புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 28.12.2023 காலை 11.30 மணி அளவில் (சர்வர் சிஸ்டம் கடிகாரம்) 4.மின்னணு ஒப்பந்தத்தில் கலந்துகொள்ள மின்னணு கையொப்பம் கட்டாயமாகும். ஒப்பந்தப்புள்ளி விவரங்களில் ஏற்படும் மாற்றங்கள் – திருத்தம் மேற்காணும் இணைய தளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

செ.ம.தொ.இ / 6156 / ஒப்பந்தப்புள்ளி / 2023 **தலைமைப் பொறியாளர்,** பொபது., தொழில் நுட்பக் கல்வி வட்டம், சென்னை – 600 025.




இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற 70–வது கூட்டுறவு வார விழாவில் பிற்படுத்தப்பட்ட நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், மாவட்ட ஆட்சித் தலைவர் பா.விஷ்ணு சந்திரன் இராமநாதபுரம் நகர் மன்ற தலைவர் ஆர்.கே. கார்மேகம், துணைத் தலைவர் டி.ஆர்.பிரவீன் தங்கம், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உ. திசை வீரன்,இணைப்பதிவாளர் முத்துக்குமார் உள்ளிட்டோர் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

### ஆ.இராசா எம்.பி. பங்கேற்பு! கழக மாணவர் அணி சார்பில் – வடக்கு மண்டல

## மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களுக்கு 3 நாள் கருத்தியல் பயிலரங்கம்!

### மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் அறிவிப்பு!

தென்காசி, நவ.24-

தி.மு.க.மாணவர் அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுக்கான மூன்று நாள் கருத்தியல் பயிலரங்கம் தென்காசியில்நடைபெறுகிறது என தி.மு.க. மாணவர் அணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் தெரிவித்திருப்பதாவது.

தந்தை பெரியார்,பேரறிஞர் அண்ணா,முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் சிந்தனை, சொல்,செயல் வடிவமாய் விளங்கும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு திராவிட இயக்க சிந்தனை, கொள்கை, லட்சியம், கோட்பாடுகள் ஆகிய கருத்தியலில் வலிமைமிக்கவர்களாகவும்,இளைய தலைமுறையான,மாணவ சமுதாயத்தினரிடம் திராவிட இயக்க சிந்தனை, கொள்கை ஆகியவற்றினை விதைக்கக் கூடியவர்களாக விளங்கிட வேண்டும், என்பதற்காகவும்,அரசியலில் களமாடக் கூடிய முன்கள போர் வீரர்களாய் மாணவர் அணியினர் விளங்கிட வேண்டும் என்று தி.மு.க. மாணவர் அணியின் வடக்கு மண்டல மாவட்ட அமைப்பாளர் துணைஅமைப்பாளர்களுக்கு மூன்று நாள் கருத்தியல் பயிலரங்கம் ஏலகிரி மலையில் சிறப்பாக நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து இரண்டாவது பயிலரங்கம் மதுரை வடக்கு,மதுரை மாநகர்,மதுரை தெற்கு,சிவகங்கை, தேனி வடக்கு, தேனி தெற்கு, விருதுநகர் வடக்கு,விருதுநகர் தெற்கு, இராமநாதபுரம்,தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி தெற்கு, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்திய,தென்காசி வடக்கு,தென்காசி தெற்கு, கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு, சென்னை கிழக்கு, சென்னை தெற்கு ஆகிய 19 மாவட்டங்களின் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் களுக்கு இன்று (24.11.2023) முதல் (26.11.2023) வரை மூன்று நாட்கள் தென்காசி மாவட்டம் குற்றாலம் கிரீன் ராயல் ஹோட்டல் மற்றும் ரிசார்ட்ஸ்ல் கருத்தியல் பயிலரங்கம் நடைபெற உள்ளது.அங்கேயே தங்குவதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

இன்று 24.11.2023 காலை 10 மணிக்கு பயிலரங்க தொடக்க விழாவிற்கு கழக துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. சிறப்பு விருந்தினராக பங்கேற்க உள்ளார்.

திராவிட இயக்கக் கொள்கைகள், லட்சியங்கள், கருத்துகள்,இயக்கத்தின் வரலாறு, இயக்கத்தலைவர்களின் வரலாறு, கழக ஆட்சியில் இயற்றப்பட்ட சமூகநீதி, சமூக வளர்ச்சி,சமூக சீர்திருத்தங்கள், சமத்துவத்திற்கான சட்டங்கள்,கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், தொழில் வளர்ச்சி ஆகியவற்றின் வளர்ச்சிக்கான சட்டங்கள்,திட்டங்கள் அதனால் தமிழ் சமூகத்தில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள்,அரசியல், பாலின சமத்துவம், எல்லோருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் ஆட்சி முறையின் சாதனைகள் ஆகியவற்றினை குறித்து நன்கு தெரிந்து அரசியலில் களமாட, கருத்தியலில் வலிமை மிக்கவர் களாய் விளங்கிட மூன்று நாள் கருத்தியல் பயிலரங்கம் பயனளிக்கும் என்ற நோக்கத்தில் இக்கருத்தியல் பயிலரங்கம் நடைபெற உள்ளது. தாங்கள் பயிலரங்கத்தில் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தி.மு.க. மாணவர் அணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ.தெரிவித்துள்ளார்.

மேலும் தி.மு.க. மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களுக்கான மூன்று நாள் கருத்தில் பயிலரங்கம் குற்றாலத்தில் நடைபெறுவதை முன்னிட்டு பட்டியல் சரிபார்ப்பு விவரம் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் வருமாறு.

1. பயிலரங்கத்திற்கு வருகை தரும் மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுக்கு ஒரு மாவட்ட கழகத்திற்கு ஒரு வில்லா எனும் வகையில் ஒதுக்கீடு செய்தல். ஒருங்கிணைப்பாளர்அலெக்ஸ் அப்பாவு.

2. பயிலரங்கத்திற்கான வாட்ஸ் அப் குரூப்பில் பயிலரங்கம் இடம் தொடர்பான தகவல்களை தெரிவித்தல் ஒருங்கிணைப்பாளர் வி.ஜி.கோகுல், அலெக்ஸ் அப்பாவு.

3. பயிலரங்க அரங்கத்தில் ஒவ்வொரு மேசைக்கும் கழக மாவட்டங்களில் பெயர் பலகை. ஒருங்கிணைப்பாளர்சேலம் ரா. தமிழரசன்.

4. பகிரங்க வளாக நுழைவு ஆர்ச் பேனர் பயிலரங்க மேடைக்கான பேனர் கீழ்த்தள நுழைவு வாயில் ஆர்ச் பேனர் பயிலரங்க அரங்கத்தின் ஏற்பாடுகள் அரங்க நுழைவாயில் ஆர்ச் பேனர் ஒருங்கிணைப்பாளர்ஜெ.கே.ரமேஷ்.

5. டிசைன்ஸ்: டிசர்ட் டிசைன், டிசர்ட் சைஸ் மாவட்ட அமைப்பாளர்களை தொடர்பு கொள்ளுதல்,ஐ.டி.கார்டு,ஸ்கிரிப்பிங் பேட்,பேனர்ஸ்,போடியம் ஸ்டிக்கர், பயிலரங்க அழைப்பிதழ்உள்ளிட்டவை. (நினைவுப் பரிசு வாய்ப்பு இருப்பின்) ஒருங்கிணைப்பாளர் எஸ்.மோகன்.

6. கலைஞர் டிவி விளம்பரம் மற்றும் முரசொலி விளம்பரம் ஒருங்கிணைப்பாளர்எஸ்.மோகன்.

7. பயிலரங்க தொடக்க விழா செய்திக் குறிப்பு அனைத்து ஊடகங்கள் தயாரிப்பு ச.கேசவன்,செய்தி அனுப்புதல்:சேலம் ரா.தமிழரசன், அலெக்ஸ் அப்பாவு.

8. சிறப்பு விருந்தினருக்கான பட்டு வேட்டி மற்றும் புத்தகம் ஒருங்கிணைப்பாளர் சு. வெங்கடேசன் பகுதி செயலாளர்.

9. வருகை பதிவேடுஒவ்வொரு அமர்வுக்குண்டான பிரதிகள் ஒருங்கிணைப்பாளர்ச.கேசவன்.

10. printer and paper ஒருங்கிணைப்பாளர் ஜெ. கே.ரமேஷ்.

11. வருகை பதிவேடு ஒவ்வொரு அமர்வுக்கும் கையொப்பம் பெறுதல் ஒருங்கிணைப்பாளர் பகுதி செயலாளர் சு.வெங்கடேசன்.

இவ்வாறு பயிலரங்க சரிபார்ப்பு பட்டியலில் கூறப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவொற்றியூர் க.வீராசாமி

### நவம்பர் 24 (2008)



திருவொற்றியூர் நகரத்தில் ஆரம்பகால கழகத் தோழர்.

திருவொற்றியூர் நகரக் கழக அவைத்தலைவராக, மாவட்டக் கழக பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர். கழகத்தின் மூத்த தலைவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பை பெற்றவர்.

திருவொற்றியூர் நகரமன்ற உறுப்பினராகவும், துணைத் தலைவராகவும், அசோக்லேலண்ட் வீடு கட்டும் கூட்டுறவு சங்கம் மற்றும் நாணய சங்கத்தின் தலைவராகவும் இருந்து திறம்பட பணியாற்றியவர்.

வடசென்னை மாவட்ட தொ.மு.ச. மாவட்ட தலைவராக பணியாற்றி தொழிலாளர்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

# தஞ்சை தெற்கு மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணி

## மாவட்டச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. அறிவிப்பு!



கழகத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு, புதிய வாக்காளர் சேர்த்தல், நீக்குதல் பணி வரும் நவம்பர் 25,26ஆம் தேதிகளில் நடைபெறும் சிறப்பு முகாம்களில் கழகத் தோழர்கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேர்தல் ஆணையத்தால் வெளியிடபட்டுள்ள வரைவு வாக்காளர் பட்டியலை (27-10-2023) அடிப்படையாக கொண்டு ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் BLA 2, கிளை கழகச் செயலாளர்கள் சிறப்பு முகாம் நாட்களில் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் தங்களை முழுமையாக கவனம் செலுத்தி, வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

### 176 பட்டுக்கோட்டை சட்டமன்ற தொகுதி
### தேர்தல் பார்வையாளர்: திரு.சுப. சரவணன் அவர்கள்

| வ.எண் | ஒன்றியம்/நகரம்/பேரூர் | வாக்குச் சாவடிகள் | ஒன்றிய,நகர,பேரூர் பொறுப்பாளர்கள் | மாவட்ட ஆய்வு பொறுப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | மதுக்கூர் கிழக்கு | 32 | ஆர்.இளங்கோ 9842264129 | 1.க.சுப்ரமணியன்<br>மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர்<br>2.அ.செல்வநாயகி<br>மாவட்ட மகளிரணி அமைப்பாளர்<br>3.சதிஷ்<br>தகவல் தொழில்நுட்ப அணி |
| 2 | மதுக்கூர் மேற்கு | 36 | வீ.கோவிந்தராசு 8754632095 | 1.எஸ்.எச்.அஸ்லாம்<br>மாவட்ட பொருளாளர்<br>2.கா.அசோக்ராணி<br>மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர்<br>3.விக்னேஷ்<br>தகவல் தொழில்நுட்ப அணி |
| 3 | மதுக்கூர் பேரூர் | 14 | D.A.இராஜகோபாலன் 9865668857 | 1.ஞா.மைக்கேலம்மாள்<br>மாவட்ட துணைச் செயலாளர்<br>2.எஸ்.ஷாஜகான்<br>மாவட்ட அயலக அணி அமைப்பாளர்<br>3.குணசேகரன்<br>தகவல் தொழில்நுட்ப அணி |
| 4 | பட்டுக்கோட்டை கிழக்கு | 30 | ஆர்.பி.முருகானந்தம் 9943980999 | 1.கோ.கணேசன்<br>மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர்<br>2.மாணிக்கவாசகம்<br>மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி |
| 5 | பட்டுக்கோட்டை மேற்கு | 17 | பா.ராமநாதன் 9443630716 | 1.K.முருகன்<br>மாவட்ட மீனவரணி அமைப்பாளர்<br>2. ஆ.அறிவழகன்<br>மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி<br>3.வீரமணி<br>தகவல் தொழில்நுட்ப அணி |
| 6 | பட்டுக்கோட்டை தெற்கு | 21 | சு.சத்தியவிஜயன் 7812815152 | 1.த.பன்னீர்செல்வம்<br>மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர்<br>2.ஆ.சாகுல்ஹமீது<br>மாவட்ட சிறுபான்மையினர் அணி அமைப்பாளர்<br>3.ரியாஸ் அகமது<br>தகவல் தொழில்நுட்ப அணி |
| 7 | பட்டுக்கோட்டை வடக்கு | 30 | என்.பி.பார்த்திபன் 9094747000 | 1அழகிரி R.சுப்பையாராஜா<br>மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர்<br>2.ரா.பாலமணிகண்டன்<br>மாவட்ட மாணவரணி அமைப்பாளர்<br>3.சுரேஷ்<br>தகவல் தொழில்நுட்ப அணி |
| 8 | பட்டுக்கோட்டை நகரம் | 65 | S.R.N.செந்தில்குமார் 7010473501 | குழ.செ.அருள்நம்பி<br>மாவட்ட விவசாய அணி அமைப்பாளர்<br>அ.அப்துல் மஜீது<br>பொதுக்குழு உறுப்பினர்<br>3.கோகுல்நாத்<br>தகவல் தொழில்நுட்ப அணி |
| 9 | அதிராம்பட்டினம் | 27 | இராம.குணசேகரன் 9787656668 | 1.இராம.அண்ணாமலை<br>மாவட்ட தொழிலாளரணி அமைப்பாளர்<br>2.கௌ.கௌசல்யா<br>பொதுக்குழு உறுப்பினர்<br>3.தேவக்குமார்<br>தகவல் தொழில்நுட்ப அணி |

### 177 பேராவூரணி சட்டமன்ற தொகுதி
### தொகுதி தேர்தல் பார்வையாளர்: திரு.G.மனோகரன் அவர்கள்,

| வ. எண் | ஒன்றியம்/நகரம்/பேரூர் | வாக்குச் சாவடிகள் | ஒன்றிய,நகர,பேரூர் பொறுப்பாளர்கள் | மாவட்ட ஆய்வு பொறுப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | பேராவூரணி தெற்கு | 48 | க.அன்பழகன் 9443407007 | 1.ஆர்.பி.ரமேஷ்<br>மாவட்ட துணைச்செயலாளர்<br>2.பொன்.சத்தியமூர்த்தி<br>மாவட்ட துணைச்செயலாளர்<br>3.கவியரசன்<br>தகவல் தொழில்நுட்ப அணி |
| 2 | பேராவூரணி வடக்கு | 41 | கோ.இளங்கோவன் 9994538100 | 1.அ.மு.ரூசுவெல்ட்<br>பொதுக்குழு உறுப்பினர்<br>2.காளிதாஸ்பாரதி<br>மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி<br>3.வெங்கடேசன்<br>தகவல் தொழில்நுட்ப அணி |
| 3 | பேராவூரணி பேரூர் | 19 | N.S.சேகர் 9843346334 | 1.S.L.சிவக்குமார்<br>மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர்<br>2.பா.கைலாசம்<br>மாவட்ட பொறியாளார் அணி அமைப்பாளர் |
| 4 | திருவோணம் தெற்கு | 39 | சோம.கண்ணப்பன் 9788348696 | 1.N.வெங்கடேசன்<br>மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர்<br>2.அ.மதியழகன்<br>மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு அமைப்பாளர்<br>3.தி.கற்பகமூர்த்தி<br>மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர்<br>4.மதியழகன்<br>தகவல் தொழில்நுட்ப அணி |
| 5 | சேதுபாவாசத்திரம் வடக்கு | 53 | மு.கி.முத்துமாணிக்கம் 6379386636 | 1.N.R.அறிவழகன்<br>மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர்<br>2.ஆர்.ஏகாம்பரம்<br>வழக்கறிஞர்<br>3.சேக் அப்துல்லா<br>தகவல் தொழில்நுட்ப அணி |
| 6 | சேதுபாவாசத்திரம் தெற்கு | 40 | வை.ரவிச்சந்திரன் 6369091986 | 1.சுப.சேகர்<br>மாவட்ட அவைத்தலைவர்<br>2.A.சசிக்குமார்<br>மாவட்ட அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர்<br>3.அஜய் ஆண்டனி<br>தகவல் தொழில்நுட்ப அணி |
| 7 | பெருமகளூர் பேரூர் | 7 | R.மாரிமுத்து 9025032983 | 1.சொ.விஜயக்குமார்<br>மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர்<br>2.கா.கதிரவன்<br>மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் |
| 8 | பட்டுக்கோட்டை மேற்கு | 13 | பா.ராமநாதன் 9443630716 | 1.K.முருகன்<br>மாவட்ட மீனவரணி அமைப்பாளர்<br>2.ஆ.அறிவழகன்<br>மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி<br>3.வீரமணி<br>தகவல் தொழில்நுட்ப அணி |

**கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ.**
செயலாளர்
தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க.



கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி வருகிற டிசம்பர் 17ஆம் தேதி சேலத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணி இரண்டாவது மாநில மாபெரும் மாநாட்டில் பங்கேற்று மாநில உரிமைகளை மீட்போம் என்று அழைப்புவிடும் வகையில் மதுரை வடக்கு மாவட்டம் மேலூர், மதுரை கிழக்கு, சோழவந்தான் தொகுதிகளில் இருசக்கர வாகன பிரச்சார பயணத்தில் மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மூன்று தொகுதிகளிலும் இருசக்கர வாகனத்திலேயே பிரச்சார பயணம் மேற்கொண்டு உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு நடைபெறும் வாடிவாசல் முன்பாக ஜல்லிக்கட்டு காளைகளுடன் பிரச்சார பயண குழுவினருக்கு வரவேற்பு கொடுத்த போது எடுத்த படம். உடன் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், இளைஞரணி மாநில துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, கழக நிர்வாகிகள், இளைஞர் அணி பயணக்குழுவினர் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

தஞ்சை வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட திருவிடைமருதூர், கும்பகோணம், பாபநாசம் ஆகிய தொகுதிகளுக்கான


# பாக முகவர்கள் (BLA2) நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை!

*தஞ்சாவூர், நவ.24 -*

தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட திருவிடை மருதூர், கும்பகோணம் பாபநாசம் ஆகிய தொகுதிகளுக்கான பாக முகவர்கள், நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க தஞ்சை வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட திருவிடை மருதூர், கும்பகோணம், பாபநாசம் ஆகிய தொகுதிகளுக்கான பாக முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டங்கள் பின்வருமாறு நடைபெற உள்ளது.



இக்கூட்டங்களில் மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், மாநிலங்களவை உறுப்பினர் மு.சண்முகம், கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன், திருவிடைமருதூர், சட்டமன்ற உறுப்பினரும், அரசு தலைமை கொறடாவுமான முனைவர் கோவி.செழியன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கும்பகோணம் சட்டமன்ற தொகுதியில் 29.11.2023, புதன் அன்று காலை 10.00 மணியளவில் அசூர் பைபாஸ் சாலையில் உள்ள டி.எஸ் மஹாலில் தலைமைக் கழக தொகுதி பார்வையாளர்கள் வண்ணை. அரங்கநாதன் தலைமையில் நடைபெறும்.

பாபநாசம் சட்டமன்ற தொகுதியில் 29.11.2023 புதன் கிழமை அன்று மாலை 04.00 மணியளவில் திருக்கருக்காவூர் பி.எம்.ஏ மஹாலில், தலைமைக் கழக தொகுதி பார்வையாளர், உ.மதிவாணன் தலைமையில் நடைபெறும்.

திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதியில் 30.11.2023 வியாழன் கிழமை அன்று காலை 10.00 மணியளவில் ஆடுதுறை ராயல் மஹாலில், தலைமைக் கழக தொகுதி பார்வையாளர் எஸ்.கே.வேதரத்தினம் தலைமையில் நடைபெறும்.

மேற்கண்ட கூட்டங்களை அந்தந்த மாநகர, ஒன்றிய செயலாளர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திடவும், இகூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள், அந்தந்த தொகுதிக்குட்பட்ட தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர்க் கழகச் செயலாளர்கள், கண்காணிப்பாளர்கள், ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள் வட்ட வார்டு, கிளை கழகச் செயலாளர்கள் பி.எல்.ஏ.2க்கள், குறிப்பிட்ட நேரத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை வெளியிட்டுள்ளார்.












ஈரோடு வடக்கு – தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் கழக மூத்த முன்னோடிகள், கொரோனா மற்றும் விபத்துகளால் குடும்ப உறுப்பினர்களை இழந்தவர்கள், மாற்றுத்திறனாளிகள் என கழகத்தைச் சேர்ந்த 2600 பேருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, தலா ரூ.10 ஆயிரம் பொற்கிழி மற்றும் நிதியுதவியை, பெருந்துறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில், கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். கழக துணைப் பொதுச்செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி., ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சு.முத்துசாமி, வடக்கு மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம் உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.

திராவிட இயக்க தீரர்
கோவை மாவட்ட தி.மு.க. முன்னாள் வட்ட, நகர, மாவட்டச் செயலாளர்
கோவை S.A.இராஜமாணிக்கம் Ex., M.L.C. அவர்களின்
102-வது ஆண்டு பிறந்தநாள் விழா



ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட
திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் மாவட்டச் செயலாளர்

நாள் : 24 - 11 - 2023, வெள்ளிக்கிழமை

சுயமரியாதை இயக்க ஆரம்ப கால தொண்டர், திராவிட முன்னேற்றக் கழகத்தில் வட்டச் செயலாளர் பொறுப்பில் தொடங்கி, நகரச் செயலாளர், மாவட்டச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை ஏற்று கோவை மாவட்டத்தில் கழகம் வளர்க்க அரும்பாடுபட்டவர்.


கோவை மாவட்டத்தில் தலைவர் கலைஞர் தங்கியிருந்தபோது, அன்றாடம் கலைஞர் அவர்களை சந்தித்து உரையாடக்கூடிய வாய்ப்பைப் பெற்றவர்.

நகர மன்ற உறுப்பினர், தமிழக சட்ட மன்ற மேலவை உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியவர்.

மும்முனைப் போராட்டம், கருப்புக் கொடி போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் பங்கேற்றவர்.

– தலைமைக் கழகம், தி.மு.க.

( ஒவ்வொரு வருடமும் ஜூலை 3-ம் நாள் தலைமை கழகம் வெளியிடும் மேற்கூறிய நினைவுகளுக்கு நன்றி! )





தங்களின் திராவிட இயக்க உணர்வுகளே எங்களின் உரம்!
தங்களின் ஆசிகளே எங்கள் வரம்!

தங்களின் 102–வது பிறந்த நாளில் தங்களை பெருமகிழ்வுடன் வணங்குகின்றோம்!

S.A.R.இளங்கோவன் M.Sc., (Agri.,) ஏற்றுமதியாளர், தொலைபேசி : +96555 11055. கோவை



நவம்பர் 27 இளமையின் உதயநாள்


# திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் - இளந்தலைவர்

வரலாற்று இயக்கத்தின் இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் **உதயநிதி ஸ்டாலின்** அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு

# மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

நவம்பர் - 27 அன்று மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, வட்ட, வார்டு, ஊராட்சி, கிளைக் கழகங்களில் கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கப்படுகிறது.





மு.அமைச்சர் - திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர்

## ஆவடி சா.மு.நாசர் M.L.A. அறிவிப்பு!

ஆ.கிருஷ்ணசாமி M.L.A. — தலைமை செயற்குழு உறுப்பினர் / மாநில ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர்
சி.ஜெரால்டு — மாநில மாணவர் அணி இணைச் செயலாளர்
பிரபு கஜேந்திரன் — மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்
சன்.பிரகாஷ் — ஆவடி மாநகரச் செயலாளர்
ஜி.உதயகுமார் — ஆவடி மாநகராட்சி மேயர்
K.J.ரமேஷ் — தலைமை செயற்குழு உறுப்பினர்
ம.ராஜி — மாவட்ட அவைத்தலைவர்
V.J.சீனிவாசன் — மாவட்ட துணைச் செயலாளர்
S.ஜெயபாலன் — மாவட்ட துணைச் செயலாளர்
S.காயத்ரி ஸ்ரீதரன் — மாவட்ட துணைச் செயலாளர்
பா.நரேஷ்குமார் — மாவட்டப் பொருளாளர்
த.எத்திராஜ் — தலைமை பொதுக்குழு உறுப்பினர்
C.ராஜேந்திரன் — தலைமை பொதுக்குழு உறுப்பினர்
கு.விமல் வர்ஷன் — தலைமை பொதுக்குழு உறுப்பினர்
எம்.முத்தமிழ் செல்வன் — தலைமை பொதுக்குழு உறுப்பினர்
V.குமார் — தலைமை பொதுக்குழு உறுப்பினர்
J.மகாதேவன் — தலைமை பொதுக்குழு உறுப்பினர்
S.காஞ்சனா சுதாகர் — தலைமை பொதுக்குழு உறுப்பினர்

## மாவட்ட இளைஞர் அணி

தலைமை : **K.சுரேஷ்குமார்** மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்

| நாள் | நிகழ்ச்சி விவரம் |
|---|---|
| 26 - 11 - 2023, ஞாயிற்றுக்கிழமை, நடுக்குத்தகை | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 2000 மகளிர்களுக்கு சேலை வழங்குதல். முதியோர் பகல் நேர பராமரிப்பு மையத்தில் மதியம் அறுசுவை உணவு வழங்குதல் மற்றும் A.P.J.அப்துகலாம் பூங்காவில் 46 மரக்கன்றுகள் நடுதல். |
| 3 - 12 - 2023, ஞாயிற்றுக்கிழமை, திருநின்றவூர் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி இரத்ததான முகாம் நடத்துதல் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு நோட்டுப்புத்தகம், கல்வி உபகரணங்கள் வழங்குதல். |

## மாவட்ட மருத்துவ அணி

தலைமை : **G.ராஜேஷ்குமார்** மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர்

| நாள் | நிகழ்ச்சி விவரம் |
|---|---|
| 26 - 11 - 2023, ஞாயிற்றுக்கிழமை, இம்மானுவேல் பள்ளி | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி இலவச மருத்துவ முகாம் நடத்துதல் மற்றும் இலவச மருந்துகள் வழங்குதல். |
| 27 - 11 - 2023, ஞாயிற்றுக்கிழமை | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி மருத்துவ முகாம் நடத்தி 300 நபர்களுக்கு பிரியாணி வழங்குதல் மற்றும் 200 பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு இலவச கல்வி உபகரணங்கள் வழங்குதல். |

## ஆவடி தெற்கு பகுதி நாள் : 27 - 11 - 2023, திங்கட்கிழமை

| வா.எ. | வ.செ. | நிகழ்ச்சி விவரம் |
|---|---|---|
| 31 | சக்திவேல் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி மூன்று நகர் ரத்ததான முகாம் மற்றும் நடுநிலைப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகம் வழங்குதல். |
| 33 | விஜயகுமார் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி கோணாம்பேடு அரசு நடுநிலைப் பள்ளி 100 மாணவ, மாணவிகளுக்கு மழை கோட், நோட்டு புத்தகம் வழங்குதல். 300 நபர்களுக்கு அன்னதானம். |
| 34 | ஆவடி பாலா | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி சின்னம்மன் கோயில் தெரு அங்கன்வாடி குழந்தைகளுக்கு சாப்பாட்டு தட்டு, பாய் மற்றும் அன்னதானம். 500 நபர்களுக்கு அன்னதானம் |
| 35 | யுவராஜ் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி நபிசிரசன்ட் மெட்ரிகுலேஷன் பள்ளி 100 மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகம் வழங்குதல் மற்றும் பள்ளி பை வழங்குதல். 300 நபர்களுக்கு அன்னதானம். |
| 40 | விஜயன் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி M.A.கிருஷ்ணசாமி மேல் நிலைப் பள்ளி, TNHB, ஆவடி 100 மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகம் மற்றும் 300 நபர்களுக்கு அன்னதானம். |
| 41 | மனோகர் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி அரசு துவக்கப் பள்ளி, TNHB ஆவடி 100 மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகம் மற்றும் 500 நபர்களுக்கு அன்னதானம் வழங்குதல். |
| 42 | சத்யாரவி | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி ஜேபி எஸ்டேட், ஓம் சக்தி கோயில் அருகில் பள்ளி 200 மாணவ, மாணவிகளுக்கு இலவச நோட்டு புத்தகம் வழங்குதல் மற்றும் 500 நபர்களுக்கு அன்னதானம். |
| 43 | இளங்கோ | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி கோவர்த்தனகிரி அரசு நடுநிலைப் 100 பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இலவச நோட்டு புத்தகம் மற்றும் 300 நபர்களுக்கு பிரியாணி. |
| 44 | சோழா கண்ணன் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி பெரியார் நகர், 4வது தெரு, முதியோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு அன்னதானம் மற்றும் 60 நபர்களுக்கு இலவச வேட்டி சேலை வழங்குதல். |
| 46 | குமார் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி RCM பள்ளி, பெரியார் நகர் பள்ளி 150 மாணவ, மாணவிகளுக்கு இலவச நோட்டு புத்தகம் மற்றும் பள்ளி பை வழங்குதல். 500 நபர்களுக்கு பிரியாணி வழங்குதல். |
| 47 | வின்சென்ட் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி பருத்திப்பட்டு ஆதி திராவிட பள்ளி 100 மாணவ, மாணவிகளுக்கு இலவச நோட்டு புத்தகம் மற்றும் 500 நபர்களுக்கு பிரியாணி வழங்குதல். |
| 48 | மைக்கேல் மணி | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி கோவர்த்தனகிரி அங்கன்வாடி 30 குழந்தைகளுக்கு மினி சேர், விளையாட்டு பொருட்கள் மற்றும் 300 நபர்களுக்கு பிரியாணி. |

தலைமை : **C.ராஜேந்திரன்** ஆவடி தெற்கு பகுதிக் கழகச் செயலாளர்

## பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம் நாள் : 27 - 11 - 2023, திங்கட்கிழமை

| நாள் | ஊராட்சி | நிகழ்ச்சி விவரம் |
|---|---|---|
| 27-11-2023, திங்கட்கிழமை காலை 10 மணி | சித்துக்காடு | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி கொத்தியம்பாக்கம் ஆரம்ப பள்ளி மாணவர்களுக்கு நோட்டு, புத்தகம் மற்றும் பேனா வழங்குதல். |
| 29-11-2023, புதன்கிழமை காலை 10 மணி | திருமணம் | 1000 முதியோர்களுக்கு சேலை மற்றும் வேட்டிகள் வழங்குதல். |
| 1-12-2023, வெள்ளிக்கிழமை காலை 10 மணி | கருணாகரசேரி | 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல். |
| 3-12-2023, ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி | அண்ணம்பேடு | 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல். |
| 5-12-2023, செவ்வாய்கிழமை காலை 10 மணி | நெமிலிச்சேரி | 250 பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல். |
| 7-12-2023, வியாழன்கிழமை காலை 10 மணி | நடுக்குத்தகை | 500 முதியோர் பகல் நேர உணவகத்தில் மதிய உணவு வழங்குதல். |
| 9-12-2032, சனிக்கிழமை காலை 10 மணி | கொசவன் பாளையம் | 300 முதியோர்களுக்கு சேலை மற்றும் வேட்டிகள் வழங்குதல். |
| 11-12-2023, திங்கட்கிழமை காலை 10 மணி | கூடபாக்கம் | 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல். |
| 13-12-2023, புதன்கிழமை காலை 10 மணி | கொரட்டூர் பட்டூர் | 200 பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தங்கள் மற்றும் பேனா வழங்குதல். |
| 15-12-2023, வெள்ளிக்கிழமை காலை 10 மணி | நேமம் | 300 பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தங்கள் வழங்குதல். |
| 18-12-2023, திங்கட்கிழமை மதியம் 12 மணி | குத்தம்பாக்கம் | 200 மாணவர்களுக்கு மகாத்மா காந்தி விடுதியில் அறுசுவை உணவு வழங்குதல். |
| 19-12-2023, செவ்வாய்கிழமை மதியம் 12 மணி | வெள்ளவேடு | 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல். |
| 21-12-2023, வியாழக்கிழமை காலை 10 மணி | மேல்மணம்பேடு | 300 பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் மற்றும் பேனா வழங்குதல். |
| 23-12-2023, சனிக்கிழமை காலை 10 மணி | பட்டூர் | 500 பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் மற்றும் பேனா வழங்குதல். |

தலைமை : **D.தேசிங்கு** பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர்

## ஆவடி மேற்கு பகுதி நாள் : 27 - 11 - 2023, திங்கட்கிழமை

| வா.எ. | வ.செ. | நிகழ்ச்சி விவரம் |
|---|---|---|
| 1 | K.பார்த்தசாரதி | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி பள்ளி மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகம், பேனா பென்சில் வழங்குதல் - 500 நபர்களுக்கு<br>இடம் : உழைப்பாளர் நகர் உயர்நிலைப்பள்ளி |
| 2 | A.ஐசய்யா | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி பள்ளி மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகம், பேனா பென்சில் வழங்குதல் - 500 நபர்களுக்கு<br>இடம் : முத்தாபுதுப்பேட்டை MES OFFICE அருகில் |
| 3 | D.இளங்கோவன் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி பள்ளி மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகம். பேனா பென்சில் வழங்குதல் மற்றும் அங்கன்வாடி குழந்தைகளுக்கு இலவச கைபலகை (Slate) வழங்குதல் - 500 நபர்களுக்கு<br>இடம் : மிட்டனமல்லி பாலாஜி பேக்கிரி அருகில் உள்ள காந்தி ரோடு |
| 4 | வெ.முனியசாமி | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி பள்ளி மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகம். பேனா, பென்சில் வழங்குதல் மற்றும் அங்கன்வாடி குழந்தைகளுக்கு இலவச மரக்கன்றுகள் வழங்குதல் - 500 நபர்களுக்கு<br>இடம் : CRPF நகர் தி.மு.க. அலுவலகம் |
| 5 | பு.கிருஷ்ணமூர்த்தி | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி பள்ளி மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகம். பேனா, பென்சில் வழங்குதல் மற்றும் பிருந்தாவன் நகரில் அமைந்துள்ள (Holly Trust) ஆதரவற்ற முதியோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்குதல் - 500 நபர்களுக்கு<br>இடம் : பிருந்தாவன் நகர் பேருந்து நிலையம் |
| 11 | வே.சுரேஷ்பாபு | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி இலவச வேட்டி சேலை, மற்றும் மரக்கன்று வழங்குதல் - 500 நபர்களுக்கு<br>இடம் : பூம்பொழில் நகர், அண்ணா தெரு, தி.மு.க அலுவலகம் |
| 12 | G.ரவிச்சந்திரன் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி பள்ளி மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகம். பேனா, பென்சில் வழங்குதல் - 500 நபர்களுக்கு<br>இடம் : கலைஞர் நகர் மெயின் ரோடு |
| 15 | சே.ராஜலிங்கம் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி பள்ளி மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகம், பேனா, பென்சில் இலவச வேட்டி சேலை மரக்கன்றுகள் வழங்குதல் - 500 நபர்களுக்கு<br>இடம் : கக்கன்ஜி நகர், அண்ணா மறுமலர்ச்சி மன்றம் |
| 16 | R.கருணாகரன் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி பள்ளி மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகம். பேனா, பென்சில் வழங்குதல். - 500 நபர்களுக்கு<br>இடம் : Dr.பீமாராவ் நகர், பட்டாபிராம் |
| 17 | S.Y.தாஸ் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி பள்ளி மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகம். பேனா, பென்சில் வழங்குதல் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு இலவச பேக் வழங்குதல் - 500 நபர்களுக்கு<br>இடம் : ஆவடி மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி சத்திரம், பட்டாபிராம் |
| 18 | கு.சேகர் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி பள்ளி மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகம். பேனா, பென்சில் வழங்குதல் - 500 நபர்களுக்கு<br>இடம் : நேரு நகர் பள்ளி, பட்டாபிராம் |
| 19 | மா.குணசேகரன் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி பள்ளி மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகம். பேனா, பென்சில் வழங்குதல் மற்றும் (Hope Charitable Trust) ஆதரவற்றோர் இல்லத்திற்கு மதிய உணவு வழங்குதல் - 500 நபர்களுக்கு<br>இடம் : பஜனைகோயில் தெரு, அன்னதானம், அன்னம்பேடு. |

தலைமை : **பொன்.விஜயன்** ஆவடி மேற்கு பகுதிச் செயலாளர்

## பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் நாள் : 27 - 11 - 2023, திங்கட்கிழமை

| வ.எ. | ஊராட்சி | நிகழ்ச்சி விவரம் |
|---|---|---|
| 1 | பாரிவாக்கம் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 1000 நபர்களுக்கு புடவை மற்றும் பிரியாணி வழங்குதல். |
| 2 | வயலாநல்லூர் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 500 நபர்களுக்கு புடவை மற்றும் பிரியாணி வழங்குதல். |
| 3 | ஆயில்சேரி | கழக கொடியேற்றி இனிப்பு வழங்குதல் மற்றும் புதிய கல்வெட்டு திறப்பு விழா நடத்துதல். |
| 4 | நசரத்பேட்டை | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி விளையாட்டு போட்டிகள் நடத்தி 300 மாணவர்கள் பரிசுகள் வழங்குதல். |
| 5 | அகரமேல் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 300 நபர்களுக்கு புடவை மற்றும் மரக்கன்றுகள் வழங்குதல். |
| 6 | காட்டுப்பாக்கம் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 500 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல். |
| 7 | காட்டுப்பாக்கம் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி இரத்ததான முகாம் நடத்துதல். |
| 8 | வரதராஜபுரம் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி அரசு நடுநிலைப்பள்ளி, அங்கன்வாடி 200 பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு பிரியாணி மற்றும் நோட்டு, புத்தகம் வழங்குதல். |
| 9 | பாணவேடுதோட்டம் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 300 மகளிர்க்கு புடவை வழங்குதல். |
| 10 | சென்னீர்குப்பம் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி ரத்ததான முகாம் நடத்துதல். |
| 11 | செம்பரம்பாக்கம் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 300 நபர்களுக்கு பிரியாணி வழங்குதல். |
| 12 | கண்ணப்பாளையம் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி அரசு பள்ளி மாணவர்களுக்கு நோட்டு, பேனா மற்றும் அறுசுவை பிரியாணி, 200 நபர்களுக்கு புடவை வழங்குதல். |
| 13 | கோலப்பஞ்சேரி | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி அரவிந்த் மனநலம் குன்றிய மாணவர் விடுதியில் பிரியாணி வழங்குதல். |
| 14 | காவல்சேரி | கழக கொடியேற்றி இனிப்பு வழங்குதல் 100 மரக்கன்றுகள் நடுதல். |
| 15 | சோராஞ்சேரி | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி பொது மக்களுக்கு பிரியாணி வழங்குதல். |

தலைமை : **ப.ச.கமலேஷ்** பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர்

## ஆவடி கிழக்கு பகுதி நாள் : 27 - 11 - 2023, திங்கட்கிழமை

ஆவடி கிழக்கு பகுதி சார்பில் 2000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்.

| வா.எ. | வ.செ. | நிகழ்ச்சி விவரம் |
|---|---|---|
| 6 | பி.டிசோசா | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 300 நபர்களுக்கு புடைவைகள் வழங்குதல். |
| 7 | V.ராஜேந்திரன் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 400 பள்ளி குழந்தைகளுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல். |
| 8 | துளசிங்கம் சக்திவேலன் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 500 நபர்களுக்கு புடவை வேட்டி வழங்குதல். |
| 9 | G.உதயகுமார் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 500 நபர்களுக்கு புடவை மற்றும் 400 பள்ளி குழந்தைகளுக்கு நோட்டு புத்தகம் வழங்குதல். |
| 10 | M.P.துருவன் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 400 நபர்களுக்கு புடவைகள் வழங்குதல். |
| 25 | N.கிருஷ்ணகுமார் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 200 நபர்களுக்கு புடவைகள் வழங்குதல். |
| 26 | S.பிரபுவேல் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 250 நபர்களுக்கு புடவை மற்றும் 25 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை வழங்குதல். |
| 27 | D.கோபால் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 300 நபர்களுக்கு புடவைகள் வழங்குதல். |
| 28 | V.M.நாகராஜ் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 300 நபர்களுக்கு புடவை, 200 நபர்களுக்கு வேட்டி, 100 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை வழங்குதல். |
| 29 | P.G.பாண்டியன் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 300 நபர்களுக்கு புடவைகள் வழங்குதல். |
| 30 | S.செல்வம் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 300 நபர்களுக்கு புடவைகள் வழங்குதல். |
| 32 | R.சுதாகரன் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 200 பள்ளி குழந்தைகளுக்கு நோட்புத்தகங்கள் வழங்குதல். |

தலைமை : **வி.பேபிசேகர்** ஆவடி கிழக்கு பகுதிச் செயலாளர்

## ஆவடி வடக்கு பகுதி நாள் : 27 - 11 - 2023, திங்கட்கிழமை

| வா.எ. | நாள் | நிகழ்ச்சி விவரம் |
|---|---|---|
| 13 | 1-3-2023 | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 200 பள்ளி மாணவ மாணவியர்களுக்கு நோட்டு புத்தகம் வழங்குதல் மற்றும் 100 மகளிர்க்கு புடவை வழங்குதல். |
| 14 | | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி ஆவடி மாநகராட்சி அண்ணாநகர் நடுநிலை பள்ளியில் மருத்துவ முகாம், 300 மாணவ மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் பிரியாணி வழங்குதல். |
| 20 | | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி தண்டுரை அரசு மேல்நிலைப் பள்ளியில் 200 மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகம் வழங்குதல் 300 நபர்களுக்கு பிரியாணி வழங்குதல். |
| 21 | | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி சத்யா நகரில் ஆர்.கே. மனநிலை பாதிக்கப்பட்டோர் புதுவாழ்வு மையத்தில் 100 நபர்களுக்கு பிரியாணி வழங்குதல் தண்டுரை அரசு மேல்நிலைப் பள்ளியில் 200 மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகம் வழங்குதல் மற்றும் பிரியாணி வழங்குதல் 21-வது வார்டு பொதுமக்களுக்கு இலவச கண் மருத்துவ முகாம் நடத்துதல். |
| 22 | | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 200 பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு நோட்டு புத்தகம் மற்றும் 300 நபர்களுக்கு பிரியாணி வழங்குதல். |
| 23 | | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 200 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல். |
| 24 | | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 300 பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு நோட்டு புத்தகம் மற்றும் பிரியாணி வழங்குதல். |
| 36 | | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 300 நபர்களுக்கு பிரியாணி வழங்குதல். |
| 37 | | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி சேக்காடு சி.எஸ்.ஐ. தொடக்க பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகம் மற்றும் பிரியாணி வழங்குதல். |
| 38 | | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி இம்மானுவேல் பள்ளி, நடராஜன் பள்ளி மற்றும் அங்கன்வாடி மாணவ, மாணவிகள் 300 நபர்களுக்கு நோட்டு புத்தகம் மற்றும் பிரியாணி வழங்குதல். |
| 39 | | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி காமராஜ் நகர் அரசு நடுநிலைப் பள்ளி 200 மாணவர்களுக்கு நோட்டு புத்தகம், பேனா வழங்கதல். |
| 45 | | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 200 பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகம் வழங்குதல், 500 நபர்களுக்கு பிரியாணி வழங்குதல், |

தலைமை : **ஜி.நாராயணபிரசாத்** ஆவடி வடக்கு பகுதிக் கழகச் செயலாளர்

## திருவள்ளூர் மேற்கு ஒன்றியம் நாள் : 27 - 11 - 2023, திங்கட்கிழமை

திருவள்ளூர் மேற்கு ஒன்றிய கழகம் சார்பாக அனைத்து ஊராட்சிகளிலும் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி, மாணவர்களுக்கு நோட்டுப்புத்தகம் வழங்குதல், ஏழைகளுக்கு நலத்திட்டங்கள் மற்றும் உணவு வழங்குதல், பிரியாணி வழங்குதல், விடுதியில் கட்டில், பெட் வழங்குதல்.

25-11-2023, சனிக்கிழமை மருத்துவ முகாம் நடத்துதல்.

தலைமை : **ஆர்.ஜெயசீலன்** திருவள்ளூர் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர்

## திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம் நாள் : 27 - 11 - 2023, திங்கட்கிழமை

திருவள்ளூர் கிழக்கு ஒன்றிய கழகம் சார்பாக அனைத்து ஊராட்சிகளிலும் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி, கசுவா, சேவாலயா பள்ளியில் உள்ள அனைத்து ஆதரவற்ற மாணவர்களுக்கும் சிற்றுண்டி வழங்குதல், பள்ளி குழந்தைகளுக்கு நோட்டுப்புத்தகம் மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்குதல், பாலவிஹார் மனநலகுன்றிய பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்குதல், மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் மற்றும் வேட்டி, சேலை வழங்குதல்.

தலைமை : **சே.பிரேம் ஆனந்த்** திருவள்ளூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர்

## திருவேற்காடு நகரம் நாள் : 27 - 11 - 2023, திங்கட்கிழமை

| வா.எ. | நாள் | நிகழ்ச்சி விவரம் |
|---|---|---|
| 6 | 24-11-2023 | வெள்ளிக்கிழமை மதியம் 12 மணிக்கு கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி அரசு ஆதிதிராவிடர் நல பள்ளி, அயனம்பாக்கம் மாணவ மாணவிகளுக்கு பள்ளி சீருடை, கல்வி உபகரணங்கள் மற்றும் அறுசுவை உணவு வழங்குதல். |
| 1 | 25-11-2023 | சனிக்கிழமை காலை 10 மணிக்கு கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி ஏழை, எளியோர்களுக்கு வேட்டி, சேலை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல். |
| 2 | 26-11-2023 | ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல். |
| 3 | 27-11-2023 | திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி ஏழை, எளியோர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல். |
| 4 | 28-11-2023 | செவ்வாய்கிழமை காலை 10 மணிக்கு கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி விளையாட்டு போட்டி நடத்துதல். |
| 5 | 29-11-2023 | புதன்கிழமை காலை 10 மணிக்கு கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி ரத்ததான முகாம் நடத்துதல். |
| 7 | 30-11-2023 | வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி மருத்துவ முகாம் நடத்துதல். |
| 8 | 1-12-2023 | வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி ஏழை, எளியோர் 1000 நபர்களுக்கு அரிசி, சேலை, வீட்டு உபகரணங்கள் மற்றும் அன்னதானம் வழங்குதல். |
| 9 | 2-12-2023 | சனிக்கிழமை காலை 10 மணிக்கு கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி முதியோர்களுக்கு வேட்டி, சேலை மற்றும் 500 நபர்களுக்கு அன்னதானம் வழங்குதல். |
| 10 | 3-12-2023 | ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி ஏழை, எளியோர்களுக்கு நலத்திட்ட மற்றும் அன்னதானம் வழங்குதல். |
| 11 | 4-12-2023 | திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி மகளிர்களுக்கு சேலை வழங்குதல். |
| 12 | 5-12-2023 | செவ்வாய்கிழமை காலை 10 மணிக்கு கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல். |
| 13 | 6-12-2023 | புதன்கிழமை காலை 10 மணிக்கு கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி சுகாதார மையத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்குதல். |
| 14 | 7-12-2023 | வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி மகளிர் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல். |
| 15 | 8-12-2023 | வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி பள்ளி மாணவர்களுக்கு நோட்டு, புத்தகம் வழுங்குதல். |
| 16 | 9-12-2023 | சனிக்கிழமை காலை 10 மணிக்கு கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல். |
| 18 | 10-12-2023 | ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி ஆதரவற்றோர் இல்லத்தில் உணவு வழங்குதல். |
| 17 | 11-12-2023 | திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி அரசு பள்ளி மாணவ மாணவியர்க்கு நோட்டு புத்தகம், கல்வி உபகரணங்கள் மற்றும் அறுசுவை உணவு வழங்குதல். |

தலைமை : **N.E.K.மூர்த்தி** திருவேற்காடு நகரக் கழகச் செயலாளர்

## திருவள்ளூர் வடக்கு ஒன்றியம் நாள் : 27 - 11 - 2023, திங்கட்கிழமை

திருவள்ளூர் வடக்கு ஒன்றிய கழகம் சார்பாக அனைத்து ஊராட்சிகளிலும் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி, 500 நபர்களுக்கு புடவை வழங்குதல், 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல், கட்வெட்டு திறப்பு விழா மற்றும் அன்னதானம் வழங்குதல், சி.எஸ்.ஐ.ஆலய வளாகத்தில் மரக்கன்றுகள் நடுதல், அரசு பள்ளியில் நோட்டுப்புத்தகம், பேனா வழங்குதல், முதியோர் இல்லத்தில் போர்வை வழங்குதல்.

2-12-2023, சனிக்கிழமை - குதிரை ரேக்ளா வெள்ளோட்டம் நடத்துதல் ( R.R.கண்டிகை )

தலைமை : **புஜ்ஜி D.ராமகிருஷ்ணன்** திருவள்ளூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர்

## எல்லாபுரம் மத்திய ஒன்றியம் நாள் : 27 - 11 - 2023, திங்கட்கிழமை

| வ.எ. | ஊராட்சி | நிகழ்ச்சி விவரம் |
|---|---|---|
| 1 | ஆயிலச்சேரி | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 300 நபர்களுக்கு பிரியாணி வழங்குதல். |
| 2 | கன்னிகாபுரம் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி பொது மருத்துவ முகாம் நடத்துதல். |
| 3 | கோடுவெளி | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 500 நபர்களுக்கு பிரியாணி வழங்குதல். |
| 4 | குருவாயல் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 800 பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகம் பேனா, பேன்சில் வழங்குதல். |
| 5 | சேத்துபாக்கம் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 200 முதியோர்களுக்கு சேலை வழங்குதல். |
| 6 | வெங்கல் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 800 பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகம் பேனா பென்சில் மற்றும் பிரியாணி வழங்குதல். |
| 7 | செம்பேடு | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 100 இளைஞர்களுக்கு T-Shirt வழங்குதல். |
| 8 | தாமரைபாக்கம் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி ரத்ததானம் முகாம் மற்றும் கண் பரிசோதனை முகாம் நடத்துதல். |
| 9 | கொமக்கம்பேடு | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி முதியோர்களுக்கு சேலை மற்றும் மரக்கன்றுகள் வழங்குதல். |
| 10 | மாகரல் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல். |

தலைமை : **கோடுவெளி தங்கம் முரளி** எல்லாபுரம் மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர்

## திருநின்றவூர் நகரம் 27 - 11 - 2023, திங்கட்கிழமை

திருநின்றவூர் நகரக் கழகம் சார்பாக அனைத்து வார்டுகளிலும் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 250 நபர்களுக்கு சிற்றுண்டி வழங்குதல், அன்னதானம் வழங்குதல், 500 நபர்களுக்கு பிரியாணி வழங்குதல், மற்றும் மருத்துவ முகாம் நடத்துதல்.

தலைமை : **தி.வை.இரவி** திருநின்றவூர் நகரக் கழகச் செயலாளர்

## பூவிருந்தவல்லி நகரம் நாள் : 27 - 11 - 2023, திங்கட்கிழமை

பூவிருந்தவல்லி நகர சார்பாக BLIND SCHOOL அனைத்து பள்ளி மாணவ, மாணவியருக்கு பிரியாணி வழங்குதல்.

| வா.எ. | நிகழ்ச்சி விவரம் |
|---|---|
| 1 | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 500 நபர்களுக்கு மதிய உணவு பிரியாணி வழங்குதல். |
| 2 | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 200 நபர்களுக்கு காலை அறுசுவை உணவு வழங்குதல். |
| 3 | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி திருமால் நகர், நடுநிலை பள்ளியில் 100 பள்ளி மாணவ மாணவியருக்கு நோட்டு, புக், பேனா, பென்சில் ஆகியவை வழங்குதல். |
| 4 | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி மகளிர் விடுதி மாணவியர்கள் 500 நபர்களுக்கு மதிய உணவு பிரியாணி வழங்குதல். |
| 5 | கழக கொடியேற்றி 200 நபர்களுக்கு இனிப்பு வழங்குதல் |
| 6 | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 200 நபர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்குதல். |
| 7 | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 100 நபர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்குதல். |
| 8 | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 200 நபர்களுக்கு மதிய உணவு பிரியாணி வழங்குதல். |
| 9 | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 100 பள்ளி மாணவ மாணவியருக்கு நோட்டு, புக், பேனா, பென்சில் ஆகியவை வழங்குதல், |
| 10 | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி அம்மா நகரில் 100 பள்ளி மாணவ மாணவியருக்கு நோட்டு, புக், பேனா, பென்சில் ஆகியவை வழங்குதல். |
| 11 | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 500 நபர்களுக்கு பிரியாணி வழங்குதல். |
| 12 | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி அங்கன்வாடி பள்ளியில் 60 குழந்தைகளுக்கு நோட்டு, புக், பேனா, பென்சில் ஆகியவை வழங்குதல், |
| 13 | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 300 நபர்களுக்கு மதிய உணவு பிரியாணி வழங்குதல். |
| 14 | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி GOD OF JOHN முதியோர் இல்லத்தில் பிரியாணி வழங்குதல். |
| 15 | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி இந்து ஆரம்ப பள்ளியில் 100 பள்ளி மாணவ, மாணவியருக்கு நோட்டு, புக், பேனா, பென்சில் ஆகியவை வழங்குதல். |
| 16 | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி BLIND SCHOOL மாணவிகள் 50 நபர்களுக்கு இலவச புடவை வழங்குதல். |
| 17 | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 300 நபர்களுக்கு மதிய உணவு பிரியாணி வழங்குதல். |
| 18 | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 300 நபர்களுக்கு இலவச புடவை வழங்குதல். |
| 19 | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 300 நபர்களுக்கு மதிய உணவு பிரியாணி வழங்குதல். |
| 20 | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 300 நபர்களுக்கு இலவச புடவை, வேட்டி வழங்குதல். |
| 21 | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 200 நபர்களுக்கு மதிய உணவு பிரியாணி வழங்குதல். |

பூவிருந்தவல்லி நகர வர்த்தகர் அணி சார்பாக இந்து ஆரம்ப பள்ளியில் 300 குழந்தைகளுக்கு நோட்டு, புக், பேனா, பென்சில் ஆகியவை வழங்குதல்.

பூவிருந்தவல்லி நகர இலக்கிய அணி சார்பாக 200 நபர்களுக்கு பிரியாணி வழங்குதல்.

பூவிருந்தவல்லி நகர ஆதிதிராவிடர் நல அணி சார்பாக 200 நபர்களுக்கு பிரியாணி வழங்குதல்.

தலைமை : **ஜி.ஆர்.திருமலை** பூவிருந்தவல்லி நகரக் கழகச் செயலாளர்

## திருமழிசை பேரூர் நாள் : 27 - 11 - 2023, திங்கட்கிழமை

| வா.எ. | வா. செ. | நிகழ்ச்சி விவரம் |
|---|---|---|
| 1 | M.முருகன் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 50 பள்ளி மாணவ மாணவியர்களுக்கு நோட்டு புத்தகம் வழங்குதல் |
| 2 | கே.ரகு | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 50 பள்ளி மாணவ மாணவியர்களுக்கு நோட்டு புத்தகம் வழங்குதல் |
| 3 | K.வேலு | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 200 நபர்களுக்கு அறுசுவை உணவு மற்றும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு நோட்டு புத்தகம் வழங்குதல். |
| 4 | K.குமரேசன் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 200 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல். |
| 5 | V.மோகன் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 50 பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் அறுசுவை உணவு 50 மகளிர்க்கு புடவை வழங்குதல். |
| 6 | கண்ணன் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 50 பள்ளி மாணவ மாணவியர்களுக்கு நோட்டு புத்தகம் வழங்குதல். |
| 7 | கு.சீனிவாசன் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 50 பள்ளி மாணவ மாணவியர்களுக்கு நோட்டு புத்தகம் வழங்குதல். |
| 8 | D.திருபாகரன் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 200 நபர்களுக்கு அறுசுவை உணவு (ம) புடவை வேட்டி வழங்குதல். |
| 9 | G.கிருஷ்ணன் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 50 பள்ளி மாணவ மாணவியர்களுக்கு நோட்டு புத்தகம் வழங்குதல். |
| 10 | V.சதீஷ் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 100 நபர்களுக்கு அறுசுவை உணவு, 100 பள்ளி மாணவர்களுக்கு புத்தக பை மற்றும் நோட்டு புத்தகங்கள் மற்றும் 100 மகளிர்களுக்கு புடவை வழங்குதல். |
| 11 | V.ஹரிகிருஷ்ணன் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 100 நபர்களுக்கு பிரியாணி வழங்குதல். |
| 12 | V.அருண் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 100 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல் மற்றும் 100 மரக்கன்றுகள் நடுதல். |
| 13 | S.பாலமுருகன் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 50 பள்ளி மாணவ மாணவியர்களுக்கு நோட்டு புத்தகம் வழங்குதல். |
| 14 | N.தென்னரசு | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 200 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல், 100 மகளிர்களுக்கு புடவை வழங்குதல், 100 மாணவர்களுக்கு நோட்டு புத்தகம் வழங்குதல். |
| 15 | கங்காதரன் | கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி 50 பள்ளி மாணவ மாணவியர்களுக்கு நோட்டு புத்தகம் வழங்குதல். |

தலைமை : **தி.வே.முனுசாமி** திருமழிசை பேரூர் கழகச் செயலாளர்






திராவிட மாடல் ஆட்சியில்
இந்து சமய அறநிலையத்துறை
திருக்கோயில்கள் சார்பில்
ஆயிரம் காலத்துப்பயிராய்
1,100ஆவது திருமணம்
தாய்வீட்டு சீர்வரிசை தந்து
நடத்தி வைக்க வருகை தரும்
தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களே வருக. வருக..
அழைத்து மகிழும்
பி.கே.சேகர்பாபு
இந்து சமயம் (ம) அறநிலையத்துறை அமைச்சர்
சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர்

## இந்தியாவில் வேறு எந்த இயக்கமும் செய்யாதது: கழகத்தின் மூத்த முன்னோடிகளுக்கு

# பொற்கிழியாக 2 ஆண்டுகளில் 45 கோடி ரூபாய் வழங்கி சாதனை!

## ஈரோட்டில் பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!




ஈரோடு, நவ.24–

**“கழகத்தின் மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழியாக 2 ஆண்டுகளில் ரூ. 45 கோடி வழங்கி தி.மு.கழகம் சாதனை படைத்துள்ளது” என்று கழக இளைஞர் அணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஈரோட்டில் கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சியில் உரையாற்றும் போது கூறினார்.**

**ஈரோட்டில் கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி செவ்வாய்க் கிழமை காலை நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு இளைஞர் அணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கினார்.**

**அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:**

ஒருங்கிணைந்த ஈரோடு மாவட்டக் கழகம் சார்பாக கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகள், கொரோனா மற்றும் விபத்துகளால் குடும்பத்தை இழந்த, குடும்ப உறுப்பினர்களை இழந்தோர், மாற்றுத் திறனாளிகள் என கழகத்தினர் மொத்தம் 2,600 பேருக்கு பொற்கிழி மற்றும் நிதி உதவி வழங்குகின்ற இந்த நிகழ்ச்சியில் பங்கு பெறுவதில் நான் மிகுந்த பெருமை அடைகின்றேன். மகிழ்ச்சி அடைகின்றேன்.

எவ்வளவோ மாவட்டங்களுக்குச் சென்றாலும் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு சென்றாலும் பல்வேறு ஊர்களுக்கு சென்றாலும், இந்த ஈரோடு மாவட்டத்திற்கு வருகின்றபோது தந்தை பெரியாரின் பாசறைக்குத் திரும்பி வருவதைப் போல் ஓர் உணர்வு ஏற்படுகிறது.

அந்தப் பெருமையான உணர்வுடன் தான் உங்களையெல்லாம் சந்திக்க நான் வருகை தந்திருக்கின்றேன். இதே ஈரோடு மாவட்டத்திற்கு பல்வேறு பலமுறை நான் வந்திருக்கின்றேன். கழகத்தின் உறுப்பினராக, இளைஞர் அணிச் செயலாளராக, சட்டமன்ற உறுப்பினராக இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டுமென்றால், அமைச்சராகப் பொறுப்பேற்ற பின், முதல் சுற்றுப்பயணமே இந்த ஈரோடு மாவட்டத்திற்குதான் நான் வந்திருந்தேன்.

### மக்களின் தீர்ப்பு!

அமைச்சர் பொறுப்பேற்று சில மாதங்களில், ஈரோடு கிழக்குத் தொகுதிக்கு இடைத்தேர்தல் வந்தது. அப்போது இந்த ஈரோடு கிழக்குத் தொகுதிக்கு வந்து இரண்டு நாட்கள் இங்கே தங்கி இருந்து, தேர்தல் பிரச்சாரத்தை நம்முடைய அமைச்சர் முத்துசாமி அண்ணன் தலைமையில், அவரின் வழிகாட்டுதலில் இரண்டு நாட்கள் பிரச்சாரத்தில் ஈடுபட்டேன்.

கழக அரசின் சாதனைகளுக்கு மக்கள் அளிக்கக்கூடிய தீர்ப்பாக இந்த ஈரோடு கிழக்குத் தொகுதியில் கிட்டத்தட்ட 68 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் நம்முடைய கூட்டணி வேட்பாளர் அண்ணன் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் அவர்களை நீங்களெல்லாம் சேர்ந்து உழைத்து வெற்றி பெற வைத்தீர்கள். மீண்டும், உங்களுக்கு நன்றி சொல்வதற்காக அடுத்தமுறை வந்திருந்தேன்.

### பிரச்சாரப் பேரணி!

இன்றைக்கு அதையெல்லாம்விட ஒரு சிறப்பான நிகழ்ச்சி. கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குகின்ற நிகழ்ச்சி. கடந்த வாரம் கன்னியாகுமரியில், இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டிற்கு `மாநில உரிமைகள் மீட்பு மாநாடு' என்ற முழக்கத்தை முன்வைத்து, இருசக்கர வாகனப் பேரணியை கன்னியாகுமரியில் தொடங்கி வைத்தோம்.

தமிழ்நாட்டை நான்கு மண்டலமாகப் பிரித்து `திருவள்ளுவர் மண்டலம்', `அண்ணா மண்டலம்', `கலைஞர் மண்டலம்', நிறைவாக `பெரியார் மண்டலம்' என நான்கு மண்டலாகப் பிரித்து அந்த வாகன பேரணியைத் துவங்கி வைத்தோம். அப்போது இந்த ஈரோடு மாவட்டத்தை மனதில் வைத்துத்தான் இந்த மேற்கு மாவட்டப் பகுதிகளை `பெரியார் மண்டலம்' என பெயர் வைத்து, அந்த இளைஞர் படையை அந்த பிரச்சாரத்திற்கு நாங்கள் அனுப்பி வைத்தோம்.

### பெரியார் மண் ஈரோடு!

தந்தை பெரியார் அவர்கள் பிறந்து வளர்ந்த ஊர் இந்த ஈரோடு. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்த ஈரோடு மாவட்டத்தில் தங்கி பெரியாரிடம்தான் நேரடிப் பயிற்சி பெற்றார்கள். தமிழ்நாட்டை, தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்திய அளவில் `பெரியார் மண்' என்றுதான் பெருமையாகக் குறிப்பிடுகிறார்கள். அப்படி `பெரியார் மண்' என்று குறிப்பிடுகிறார்கள் என்றால், அதற்கு காரணம் இந்த ஈரோடுதான்.

எனவே, அப்பேற்ப்பட்ட சிறப்பு வாய்ந்த மண்ணில் உங்களையெல்லாம் சந்திப்பதில், நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். பெருமை அடைகின்றேன். இன்னும் சொல்லப்போனால், கடந்த இரண்டு வருடங்களாக தமிழ்நாட்டின் எந்தப் பகுதிக்கு எந்த நிகழ்ச்சிக்கு எந்த மாவட்டத்திற்கு போவதென்றாலும் அங்கு இருக்கக் கூடிய மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், கழகத்தின் மூத்த முன்னோடிகள் என்னிடத்தில் தேதி கேட்கும்போது,

`நீங்கள் எங்கள் மாவட்டத்திற்கு வர வேண்டும். அது திருமண நிகழ்ச்சி, இளைஞர் அணி நிகழ்ச்சி, கழகத்தின் எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் நீங்கள் எங்கள் மாவட்டத்திற்கு வர வேண்டும்' என்று அழைப்பு விடுக்கும்போது, நான் அவர்களிடம் வைக்கின்ற ஒரே அன்புக் கட்டளை, கோரிக்கை நான் உங்கள் மாவட்டத்திற்கு வருகிறேன். எத்தனை நிகழ்ச்சிகளில் வேண்டுமானாலும் நான் கலந்துகொள்கின்றேன். ஆனால், என்னுடைய திருப்திக்காக, என்னுடைய மகிழ்ச்சிக்காக நீங்கள் ஒரு நிகழ்ச்சி நடத்த வேண்டும். அது என்னவென்றால், கழகத்தின் கழகத்திற்காக உழைத்து இரத்தம் சிந்திய மூத்த முன்னோடிகளை அழைத்து, அவர்களை கௌரவப் படுத்தி அவங்களுக்காக ஒரு பொற்கிழி வழங்குகின்ற நிகழ்ச்சியை நடத்தினால் நான் உங்கள் மாவட்டத்திற்கு வருகிறேன். அப்படி சொல்லித்தான் கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றேன்.

### முத்தாய்ப்பான நிகழ்ச்சி!

அதிலே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், இந்த ஈரோடு இந்த நிகழ்ச்சி எல்லாவற்றுக்கும் ஒரு முத்தாய்ப்பாக சிறப்புவாய்ந்த ஒரு நிகழ்ச்சி. கழகத்திற்காக உழைத்த கிட்டத்தட்ட 2,600 மூத்த முன்னோடிகளுக்குப் பொற்கிழி வழங்குகின்ற நிகழ்ச்சி. அது மட்டுமல்ல, இந்த மேடையே மிகச் சிறப்பாக அண்ணன் முத்துசாமி அவர்களும், அண்ணன் நல்லசிவம் அவர்களும் மிகச் சிறப்பாக அமைத்திருக்கிறார்கள்.

வந்த உடனே கழகத்தினுடைய நம்முடைய தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமான பேராசிரியர் தாத்தா அவர்களின் படங்களுக்கு மரியாதை செலுத்திவிட்டு, அதேபோல மிகச் சிறப்பாக கலைஞரின் சிலையை இங்கே அமைத்திருக்கிறார்கள். அவ்வளவு சிறப்பாக இந்த மேடையை அமைத்து, உங்களை எல்லாம் சந்திப்பதற்கு ஒரு வாய்ப்பளித்த மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் முத்துசாமி அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

### தலைவர் வாழ்த்து!

அதுமட்டுமல்ல நம்முடைய தலைவர் அவர்கள் இரண்டு மாதங்களுக்கு முன்பு இதேபோல் ஒரு நிகழ்ச்சி அவருடைய தொகுதி கொளத்தூரில், கழகத்தின் மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குகின்ற நிகழ்ச்சி. அவர் அங்கு உரையாற்றும்போது குறிப்பிட்டு பேசினார்கள். `தம்பி உதயநிதி அவர்கள் தமிழ்நாடு முழுக்க கழகத்தினுடைய மூத்த முன்னோடிகளுக்கு எல்லாம் தமிழ்நாடு முழுவதும் பொற்கிழி வழங்கி வந்து கொண்டிருக்கிறார். அதற்கு என்னுடைய வாழ்த்துகள்.

இது எப்படியென்றால் ஒரு தந்தை மகனுக்கு சொல்கிற வாழ்த்து கிடையாது. ஒரு தலைவனாக தொண்டனுக்கு நான் சொல்கின்ற வாழ்த்து' என்று குறிப்பிட்டு சொன்னார்.

அந்த வாழ்த்துகள் அத்தனையும் நம்முடைய மாவட்ட கழகச் செயலாளர் அண்ணன் முத்துசாமி அவர்களுக்கும், தமிழ்நாடு முழுவதும் இப்படி சிறப்பான நிகழ்ச்சிகளை, பொற்கிழி வழங்குகின்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருக்ககூடிய அத்தனை மாவட்டக் கழக செயலாளர்களுக்கும் அந்த வாழ்த்துகளை நான் காணிக்கையாக்குகின்றேன்.

அறிவாலயத்திலிருந்து கழகத்தின் மூத்த முன்னோடிகளுக்கு கலைஞர் அறக்கட்டளை மூலமாக மாதம் எட்டு பேருக்கு 25 ஆயிரம் ரூபாய் மருத்துவச் செலவு அவர்களுடைய குடும்பத்தில், இருக்கக்கூடிய கல்விச் செலவு பராமரிப்புச் செலவு என்று இதுவரை கலைஞர் அறக்கட்டளையின் மூலமாக 5 கோடியே 50 லட்சம் ரூபாய் வரை நிதி உதவி வழங்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, இளைஞர் அணியின் சார்பாகவும், கடந்த ஆறு மாதங்களாக தலா 25 ஆயிரம் ரூபாய் என இதுவரை 50 லட்சம் ரூபாய் வரை கழகத்தின் இளைஞர் அணி சார்பாக நிதி உதவி அளித்து இருக்கின்றோம்.

இதுவரை நான் இந்த இரண்டு ஆண்டுகளில், கழகத்தின் 42 கழக மாவட்டங்களில் கலந்துகொண்டு, சுமார் 44 கோடியே 74 லட்சம் ரூபாய் கழகத்தின் மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி இருக்கின்றோம்.

### என்னுடைய கடமையாகக் கருதுகிறேன்!

தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவிலேயே எந்த இயக்கமும் செய்யாததை நமது திராவிட முன்னேற்றக் கழகம் செய்திருக்கின்றது. நாங்கள் எல்லாம் கழகத்திற்காக இப்போது ஓடி ஓடி பிரச்சாரம் செய்து கூட்டங்களில் கலந்துகொண்டு வியர்வையை சிந்துகிறோம் என்றால், கழகத்திற்காக பல ஆண்டுகளாக உழைத்திருக்கக் கூடிய நீங்கள் இரத்தம் சிந்தியவர்கள், கழகத்தின் மூத்த முன்னோடிகளாகிய நீங்கள். எனவே, இது ஒரு சாதாரண நிகழ்வு கிடையாது.

இது ஒவ்வொரு தாத்தாவுக்கும் பாட்டிக்கும் ஒரு பேரனாக நான் செய்கின்ற கடமையாகத்தான் நான் பெருமையோடு இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கின்றேன். நான் உங்களுடைய ஆசிகளையும், உங்களுடைய வாழ்த்துகளையும் பெற வந்திருக்கின்றேன். எதற்காக வாழ்த்து என்றால், இங்கே அண்ணன் முத்துசாமி அவர்கள் சொன்னார்கள். 2018ஆம் ஆண்டு ஈரோட்டில் மிகப்பெரிய ஒரு மாநாட்டை நடத்திக் காட்டியவர் தான் முத்துசாமி அண்ணன் அவர்கள். இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு, டிசம்பர் மாதம் (அடுத்த மாதம்) 17ஆம் தேதி சேலத்தில் நடைபெற உள்ளது. அதற்கு கழகத்துக்காக உழைத்த மூத்த முன்னோடிகள், நீங்கள் எங்கள் இளைஞர் அணியை வாழ்த்த வேண்டும். அந்த வாழ்த்துகளையும் வாங்குவதற்காகத் தான், நான் இங்கு வந்திருக்கின்றேன்.

### மாநாட்டை வெற்றி பெறச் செய்வீர்!

இதனை முடித்துவிட்டு, அடுத்த நிகழ்ச்சி செயல்வீரர்கள் கூட்டம். ஈரோடு மாவட்டத்தில் இருக்கக்கூடிய கழகத்தின் இளைஞர் அணி தம்பிமார்களையெல்லாம் சந்தித்து, அந்த மாநாட்டிற்கு அழைக்க வந்திருக்கின்றேன். எனவே, நீங்கள் இந்த ஈரோடு மாநாட்டில் கலந்து கொண்டிருப்பீர்கள். இன்னும் சொல்லப்போனால், கழகத்தின் முதல் இளைஞர் அணி மாநாடு நெல்லையில் நடந்தது.

அதில் இங்கு இருக்கக்கூடிய பல பேர் கலந்து கொண்டிருப்பீர்கள். இருந்தாலும், உங்களை எல்லாம் சந்தித்து உங்களுடைய வாழ்த்துகள் இல்லாமல் எங்களுடைய இளைஞர் அணி மாநாடு வெற்றி பெறாது.

எனவே, உங்களுடைய வாழ்த்துகளையும் வாங்குவதற்காக நீங்கள் அத்தனை பேரும் உங்கள் குடும்பத்தோடு கலந்துகொண்டு இளைஞர் அணி மாநாட்டையும், நீங்கள் வெற்றிபெற வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதற்காக உங்களையெல்லாம் சந்திக்க நான் வந்திருக்கின்றேன்.

### அ.தி.மு.க.வின் புளிசோறு மாநாடு!

இப்போது சேலத்தில் இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு நடத்தப் போகிறோம். மதுரையில் ஒரு மூன்று மாதங்களுக்கு முன்பு ஒரு மாநாடு நடந்தது. உங்களுக்கு தெரியும். அது என்ன மாநாடு என்று நான் சொல்லவே தேவையில்லை. உங்களுக்கே தெரியும். `புளிசோறு மாநாடு'. ஒரு மாநாடு எப்படி நடத்தக்கூடாது என்பதற்கு எடுத்துக்காட்டாக மதுரையில் அப்படி ஒரு மாநாடு நடந்தது.

ஆனால், நம்முடைய இளைஞர் அணி மாநாடு இந்தியாவிலேயே இப்படி ஒரு மாநாடு சிறப்பான எழுச்சியான மாநாடு நடந்ததில்லை என்கிற அளவில் மக்களிடம் காட்டுவதற்காகத்தான், உணர்த்துவதற்காகத்தான் நம்முடைய இளைஞர் அணி மாநாடு சேலத்தில் நடைபெற இருக்கின்றது.

### முதல்வரின் நான்கு திட்டங்கள்!

கடந்த இரண்டரை ஆண்டுகளாக நம்முடைய தலைவர் அவர்கள் ஒரு நல்லாட்சி செய்து கொண்டிருக்கிறார். தேர்தல் வாக்குறுதியில் சொன்ன ஒவ்வொன்றையும் நிறைவேற்றி வந்து கொண்டிருக்கிறோம். அதுவும், குறிப்பிட்டு சொல்ல வேண்டும் என்றால், ஒரு நான்கே நான்கு திட்டங்கள். அந்த நான்கு திட்டங்களை கழகத்தின் மூத்த முன்னோடிகள் நீங்கள், உங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கின்ற போதெல்லாம் மக்களிடம் கொண்டு போய் அதை சேர்க்க வேண்டும். அதைப் பற்றி நீங்கள் பேச வேண்டும்.

அந்த நான்கு திட்டத்தை மட்டும் உங்களிடம் சொல்லி என்னுடைய உரையை நிறைவுசெய்ய விரும்புகின்றேன். முதல் திட்டம் தேர்தல் அறிக்கையில் சொன்ன திட்டம். மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து வசதி. தலைவர் போட்ட முதல் கையெழுத்து முதல் ஐந்து கையெழுத்துகளில் முதல் கையெழுத்து மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி.ஒவ்வொரு மகளிரும் மாதம் ஆயிரம் ரூபாய் சேமிக்கிறார்கள். வருஷத்துக்கு 12 ஆயிரம் ரூபாய்.

அடுத்தது புதுமைப்பெண் திட்டம். இது தேர்தல் அறிக்கையில் சொல்லாத திட்டம். அரசுப் பள்ளியில் படித்து உயர்கல்வி படிக்க வேண்டுமென்றால், ஒவ்வொரு பெண்ணுக்கும் அவர்கள் எந்தக் கல்லூரியில் சேர்ந்தாலும், அவர்களின் வங்கிக் கணக்கில் மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகையாக வரவு வைக்கப்படும் புதுமைப்பெண் திட்டம்.

அடுத்து இன்னொரு திட்டம், இதுவும் தேர்தல் அறிக்கையில் சொல்லாத திட்டம். இதை இப்போது ஒட்டு மொத்த இந்தியாவும் எப்படி இந்த திட்டத்தைச் செயல்படுத்துகிறார்கள் என்று ஆச்சர்யத்தோடு பார்க்கிறார்கள்.

இப்போது பக்கத்து மாநிலங்களும் இதைச் செயல்படுத்தத் தொடங்கி விட்டார்கள். அது, என்ன திட்டம் என்றால், காலை உணவுத் திட்டம். அரசுப் பள்ளியில் படிக்கக்கூடிய குழந்தைகள் ஒன்றாம் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய குழந்தைகள் அத்தனை பேருக்கும் பள்ளிக்கூடத்திற்கு வந்தால், காலை உணவுத் திட்டம்.

ஒரு காலத்தில் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பும்போது பெற்றோர்கள் வருத்தத்துடன் அனுப்புவார்கள். காலையில் 8:00 மணிக்கு எழுந்து சமைக்க நேரம் இருக்காது. குழந்தையைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டும். பசியோடு போயிருக்கானே, சரியாகச் சாப்பிட்டானா என்று ஒரு வருத்தத்தோடு பெற்றோர்கள் இருப்பார்கள். ஆனால், இப்போது தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து பெற்றோர்களும் தைரியமாக தங்களுடைய குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறார்கள்.

என்னுடைய குழந்தையைப் பார்த்துக் கொள்வதற்கு நம்முடைய முதலமைச்சர் இருக்கிறார். நம்முடைய திராவிட மாடல் அரசு இருக்கிறது என்று, அந்த தைரியத்தோடு அனுப்புகிறார்கள்.கிட்டத்தட்ட 17 லட்சம் மாணவர்கள் இந்தத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு நாளும் பயன்பெற்று வருகிறார்கள். இவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பாக, நம்முடைய தேர்தல் அறிக்கையில் சொன்ன ஒரு திட்டம். மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். இதைச் செயல்படுத்தி, இப்போது மூன்றாவது மாதமாக மாதம் ஆயிரம் ரூபாய் கிட்டத்தட்ட ஒரு கோடியே 14 லட்சம் மகளிர் இந்தத் திட்டத்தின் மூலம் பயன் பெறுகிறார்கள்.

இந்த நான்கு திட்டங்களைப் பற்றி நீங்கள் அடிக்கடி உங்களுக்குக் கிடைக்கின்ற நேரத்திலெல்லாம் இதை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். சென்ற 2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் எப்படி அடிமை அ.தி.மு.க.வை வீட்டுக்கு அனுப்பினோமோ, அதேபோல் வருகின்ற 2024ஆம் ஆண்டு தேர்தலில் அடிமைகளுடைய எஜமானர்களையும், ஓனர்களையும் வீட்டிற்கு அனுப்பவேண்டிய நேரம் வந்துவிட்டது.

நம்முடைய தலைவர் சொன்ன மாதிரி, நம்முடைய இந்தியா, இந்தியாவாக இருக்கவேண்டும் என்றால், நம்முடைய இந்தியா கூட்டணி வெற்றிபெற்றாக வேண்டும். அதற்கு கழகத்திற்காக உழைத்த மூத்தமுன்னோடிகள் நீங்கள் அத்தனை பேரும் அந்தப் பணியை சிறப்பாக மேற்கொண்டு செய்திட இளைஞர் அணி சார்பில் வாழ்த்துகள்.

இந்த வெற்றி, இந்தியாவிற்கான வெற்றி, ஒன்றிய பாசிச பா.ஜ.க.விடமிருந்து நம்முடைய இந்தியாவைக் காப்பாற்ற வேண்டும் என்றால், நீங்கள் அத்தனைபேரும் உங்கள் பிரச்சாரத்தை மேற்கொண்டு, 2024ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை நீங்கள் தேடித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேஎன்.

### கழகத்தின் வரலாறே நீங்கள் தான்!

நான் இந்தக் கழகத்தின் மூத்த முன்னோடிகளையெல்லாம் பார்க்கும்போது சொல்வது ஒன்றே ஒன்றுதான். உங்களுக்கு இன்று கையில் பத்தாயிரம் ரூபாய் பொற்கிழி வழங்கப்பட்டிருக்கிறது. நீங்கள் அதைவிட மிகப் பெருமையாக எதை கருதுவீர்கள் என்றால், உங்களின் தோளில் போட்டு இருக்கிறீர்களே, அந்தக் கருப்பு சிவப்பு துண்டு, அதைத்தான் நீங்கள் பெருமையாகக் கருதுவீர்கள் என்பது எனக்குத் தெரியும், உங்களுடைய உணர்வு எனக்கு புரியும்.

இந்த மாதிரி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்போது எனக்கு மிகவும் பெருமையாக இருக்கும். ஏனென்றால், கழகத்தின் வரலாறே நீங்கள்தான். நீங்கள் இல்லாமல் இந்த கழகம் கிடையாது. நீங்கள் இல்லாமல் கலைஞர் கிடையாது.

இன்றைக்கு கலைஞரின் நூற்றாண்டில் கலைஞரின் பெருமையைப் பேசுகிறோம். கலைஞர் ஐந்து முறை தமிழகத்தை ஆண்டவர். கலைஞர் ஐந்து முறை தமிழகத்தை ஆண்டார் என்றால், அதற்கு முக்கிய காரணம் நீங்கள்தான். நீங்கள் இல்லாமல் திமுக கிடையாது. நீங்கள் இல்லாமல் கலைஞர் கிடையாது.

இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கழகத் தலைவர் அவர்கள் தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கிறார் என்றால் அதற்கும் முக்கியமான காரணம் நீங்கள்தான். ஆனால், அதே நேரத்தில் உங்களை எல்லாம் பார்க்கும்போது, கொஞ்சம் பொறாமையாகவும் இருக்கும்.

### பாதமலர்களைத் தொட்டு வணங்குகிறேன்!

ஏன் பொறாமை என்றால், நான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நேரில் பார்த்திருக்கிறேன். அவருடன் கூட்டத்திற்கு போயிருக்கிறேன். அவருடைய பேச்சைக் கேட்டிருக்கிறேன். இனமான பேராசிரியருடைய கூட்டங்களுக்கு சென்றிருக்கிறேன். அவருடைய பேச்சை நேரில் பார்த்திருக்கிறேன். கேட்டிருக்கிறேன். உங்களை எல்லாம் பார்க்கும் பொழுது,

நான் தந்தை பெரியார் அவர்களை நேரில் பார்த்தது கிடையாது. பேரறிஞர் அண்ணாவை நான் நேரில் பார்த்தது கிடையாது. ஆனால், இங்கே இருக்கக்கூடிய பலர் ஏன் இன்னும் எல்லாருமே நீங்கள், தந்தை பெரியாரை நேரில் பார்த்திருப்பீர்கள். அவருடன் பிரச்சாரக் கூட்டங்களுக்கு சென்றிருப்பீர்கள். போராட்டக் களத்திற்குச் சென்றிருப்பீர்கள்.

பேரறிஞர் அண்ணாவை நீங்கள் அத்தனை பேரும் நேரில் பார்த்திருப்பீர்கள். அவருடன் சேர்ந்து பிரச்சாரத்திற்குப் போய் இருப்பீர்கள். கழகக் கூட்டங்களிலெல்லாம் கலந்து கொண்டிருப்பீர்கள். எனவே, அதனால்தான் உங்களை எல்லாம் பார்க்கும் போது தந்தை பெரியாரின் மறு உருவமாக, பேரறிஞர் அண்ணாவின் மறு உருவமாக, நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞரின் மறு உருவமாக, இனமான பேராசிரியர் தாத்தா அவர்களின் மறு உருவமாக உங்களை எல்லாம் நான் பார்க்கின்றேன்.

எனவே, உங்களுடைய பாத மலர்களை எல்லாம் தொட்டு வணங்கி வந்திருக்கக்கூடிய உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வணக்கத்தையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் கிருஷ்ணகிரி நகரக் கழகச் செயலாளர் எஸ்.கே. நவாப், நகர்மன்ற தலைவர் பரிதா நவாப் ஆகியோரின் மகன் அமீர் சுஹேல், மாதுளா ஆகியோரின் திருமண விழாவை கிருஷ்ணகிரியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று நடத்தி வைத்து, முதலமைச்சர் அவர்களின் வாழ்த்துச் செய்தியை எடுத்துரைத்து வாழ்த்தினர். அமைச்சர் அர.சக்கரபாணி, மாவட்டச் செயலாளர்கள் தளி ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ., தே.மதியழகன் எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், டி.செங்குட்டுவன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் முருகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் இம்மணவிழாவில் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு அரசின் சார்பில், உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் 103வது பிறந்த நாளையொட்டி நேற்று (23.11.2023), சென்னை அசோக் நகரில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ. கருணாநிதி, ஏ.எம்.வி.பிரபாகரராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் மற்றும் குடும்பத்தினர் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

### திண்டுக்கல் மாவட்டத்தில் தங்கு தடையின்றி குடிநீர் கிடைக்க நடவடிக்கை!

# மக்களின் சிரமங்களைத் தீர்க்க பல திட்டங்களை தீட்டி வருகிறார் நம் முதல்வர்!

## ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி பேச்சு!

திண்டுக்கல், நவ. 24-

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, அம்ருத் திட்டத்தின் கீழ், திண்டுக்கல் மாவட்டம், சித்தையன்கோட்டை பேரூராட்சியில் ரூ.16.37 கோடி மதிப்பீட்டிலும், நிலக்கோட்டை பேரூராட்சியில் ரூ.37.18 கோடி மதிப்பீட்டிலும் குடிநீர் விநியோக மேம்பாட்டுப் பணிகள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் சித்தையன்கோட்டையில் ரூ.62.50 இலட்சம் மதிப்பீட்டில் நேரடி நெல் கொள்முதல் நிலையம், சித்தையன் கோட்டையில் ரூ.8.39 இலட்சம் மதிப்பீட்டில் நாடகமேடை அமைப்பதற்கு நேற்று முன்தினம் (22.11.2023) அடிக்கல் நாட்டினார். திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப. வேலுச்சாமி முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து, அந்த திட்டங்களின் பயன்கள் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடையும் வகையில் செயல்படுத்தி வருகிறார். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சி காலத்தில், பெண்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்கள் கொண்டு வரப்பட்டன. பெண்களுக்கு சொத்தில் சம உரிமை கொண்டுவரப்பட்டது. திண்டுக்கல் மற்றும் நிலக்கோட்டை பகுதி பெண்கள் கல்வியில் மேம்பாடு அடைய வேண்டும் என்பதற்காக பெண்கள் கல்லூரிகள் தொடங்கப்பட்டன.

**புதுமைப் பெண் திட்டம்!**

அந்த வழியில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெண்கள் மேம்பாட்டுக்காக தந்தை பெரியார், கலைஞர் வழியில் செயல்பட்டு வருகிறார். 6 முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்து, உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப் பெண் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

பெண்களுக்கு சமுதாயத்தில் சம உரிமை கிடைக்க வேண்டும் என்பதற்காக குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தமிழகம் முழுவதும் 1.15 கோடி குடும்பத் தலைவிகள் பயனடைந்து வருகின்றனர். விடுபட்ட வர்களுக்கு தகுதியிருப்பின் அவர்கள் மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு அவர்களுக்கும் இந்தத் தொகை வழங்க 3வது முறையாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

100 நாள் வேலைத் திட்டத்தில் 2006-11 ஆண்டு காலத்தில் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிகளவில் சம்பளம் வழங்கப்பட்டது. இத்திட்டத்தில் தற்போது, ரூ.250க்கும் அதிகமாக சம்பளம் வழங்க உத்தரவிடப்பட்டு, ரூ.294 வரை வழங்கப்பட்டு வருகிறது.

ஏழை, எளிய மக்கள் வாழ்க்கையில் மேம்பாடு அடைய வேண்டும், கிராமங்களில் வசிக்கும் மக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக நல்ல திட்டங்களை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உறுதியாக உள்ளார்.

**மக்கள் தொகைக்கு ஏற்ப குடிநீர்!**

திண்டுக்கல் மாவட்டத்திற்கு பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டு வருகின்றன. குறிப்பாக குடிநீர் திட்டப் பணிகள் பல்வேறு இடங்களில் நடைபெற்று வருகின்றன. மக்கள்தொகை பெருக்கத்திற்கு ஏற்ப குடிநீர் திட்டப்பணிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

சித்தையன்கோட்டை பேரூராட்சி பகுதியில் சுமார் 4,350 குடியிருப்புகள் உள்ளன. மக்கள் தொகை சுமார் 14,300. குடிநீர் இணைப்புகள் சுமார் 1,500 உள்ளன. இந்தப்பகுதி மக்களுக்கு ஆத்துார் காமராஜர் நீர்தேக்கம் அருகில் உள்ள திறந்தவெளி கிணறு மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 5 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் உள்ளன. அவற்றின் மொத்த கொள்ளளவு 6.20 இலட்சம் லிட்டர் ஆகும். இதன்மூலம் தினமும் 1.30 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

சித்தையன்கோட்டை பேரூராட்சி பகுதியில் மக்கள்தொகை பெருக்கத்திற்கேற்ப குடிநீர் விநியோகிக்க வேண்டும் என்பதற்காக குடிநீர் விநியோக மேம்பாட்டு பணிகள் அம்ரூத் திட்டத்தின் கீழ் ரூ.16.37 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன. அதற்கான பணிகள் இன்று அடிக்கல் நாட்டி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 2 திறந்தவெளி கிணறுகள் அமைக்கப்படவுள்ளன. மின் மோட்டார் மற்றும் மின் உதிரி பாகங்கள் பொருத்தப்படவுள்ளன. இரண்டு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்கப்படவுள்ளது. 36 கி.மீட்டர் துாரத்திற்கு குடிநீர் பகிர்மான குழாய்கள் மாற்றப்படவுள்ளன. இத்திட்டப்பணிகள் நிறைவுபெற்று, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வரும்போது, வீட்டு குடிநீர் இணைப்புகள் 3,500 ஆக உயர்த்தப்பட்டு 24 மணி நேரமும் குடிநீர் வழங்கப்படவுள்ளது. ஒவ்வொரு வீட்டிற்கும் தினமும் ஒரு நபருக்கு 135 லிட்டர் அளவிற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகிக்கப்படும். சித்தையன்கோட்டையில் ரூ.8.39 இலட்சம் மதிப்பீட்டில் நாடகமேடை கட்டப்படவுள்ளது.

அதேபோல், நிலக்கோட்டை பேரூராட்சி பகுதியில் சுமார் 9,500 குடியிருப்புகள் உள்ளன. மக்கள் தொகை சுமார் 24,400. குடிநீர் இணைப்புகள் சுமார் 3,900 உள்ளன. இந்தப்பகுதி மக்களுக்கு அணைப்பட்டி பேரணை வைகை ஆற்று படுகையில் நீர் உறிஞ்சும் கிணறு குடிநீர் திட்டம் மற்றும் நத்தம் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 13 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் உள்ளன. அவற்றின் மொத்த கொள்ளளவு 11.30 இலட்சம் லிட்டர் ஆகும். இதன்மூலம் தினமும் 2.16 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.



நிலக்கோட்டை பேரூராட்சி பகுதியில் மக்கள் தொகை பெருக்கத்திற்கேற்ப குடிநீர் விநியோகிக்க வேண்டும் என்பதற்காக குடிநீர் விநியோக மேம்பாட்டு பணிகள் அம்ரூத் திட்டத்தின் கீழ் ரூ.37.18 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன. அதற்கான பணிகள் இன்று அடிக்கல் நாட்டி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் நீர் உறிஞ்சும் கிணறு, தலைமட்ட தொட்டி அமைக்கப்பட்டது. மின் மோட்டார் அறை, சுற்றுச்சுவர், நீர்மூழ்கி மோட்டார் மற்றும் மின் உதிரி பாகங்கள் பொருத்தப்படவுள்ளன. ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட தொட்டி, 6.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்கப்படவுள்ளன. குடிநீர் பகிர்மான குழாய்கள் மாற்றப்படவுள்ளன.

இத்திட்டப்பணிகள் நிறைவுபெற்று, பொது மக்கள் பயன்பாட்டிற்கு வரும்போது, வீட்டு குடிநீர் இணைப்புகள் சுமார் 8,170 ஆக உயர்த்தப்பட்டு 24 மணி நேரமும் குடிநீர் வழங்கப்படவுள்ளது. ஒவ்வொரு வீட்டிற்கும் தினமும் ஒரு நபருக்கு 135 லிட்டர் அளவிற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகிக்கப்படும்.

**ரூ.500 கோடியில் திட்டம்!**

மேலும் திண்டுக்கல், ஆத்துார், நிலக்கோட்டை பகுதிகளுக்கு வைகை அணையில் இருந்து குடிநீர் கொண்டுவருவதற்காக ரூ.500 கோடியில் ஒரு குடிநீர் திட்டம் அமைக்க வலியுறுத்தி வருகிறேன். அனுமதி கிடைத்தவுடன்இத்திட்டப் பணிகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்படும்.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக அரசு சார்பில் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இயற்கை சீற்றங்களினாலும், எதிர்பாரா நிலையில் பருவம் தவறி பெய்யும் மழையினால், கொள்முதல் செய்யப்பட்ட நெல் மற்றும் கொள்முதல் நிலையங்களில் கொள்முதலுக்காக காத்திருக்கும் விவசாயிகளின் நெல் நனைந்து வீணாகாதபடி பாதுகாப்பதற்காக கொள்முதல் நிலையங்கள் திறந்த வெளியில் இல்லாமல் மேற்கூரையுடன் உள்ள கொள்முதல் நிலையங்களாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதன்படி, திண்டுக்கல் மாவட்டத்தில் 10 கொள்முதல் நிலையங்களுக்கு நிரந்தர கட்டடம் கட்ட அனுமதியளிக்கப்பட்டுள்ளது. ஆத்துார் வட்டத்தில் சித்தரேவு, ஆத்துார், சித்தையன்கோட்டை, பழனி வட்டத்தில் அ.கலையம்புத்துார், விளாம்பட்டி, அக்கரைப்பட்டி, கோவிலம்மாபட்டி, கீரனுார், பெரியம்மாபட்டி, நிலக்கோட்டை வட்டத்தில் மட்டப்பாறை ஆகிய கொள்முதல் நிலையங்களில் கட்டடம் கட்ட தேர்வு செய்யப்பட்டு, தலா ரூ.62.50 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.6.25 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, 9 கொள்முதல் நிலையங்களில் கட்டடப்பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது சித்தையன்கோட்டை கொள்முதல் நிலையத்திற்கு கட்டடம் கட்டுவதற்கு இன்று (22.11.2023) அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் 2021-22ஆம் ஆண்டில் 19,845 மெ.டன் நெல், 2022 23ஆம் ஆண்டில் குருவை பருவத்தில் 2,790 மெ.டன், சம்பா பருவத்தில் 9057 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும், 12.10.2022ல் 576 கொள்முதல் பணியாளர்கள் பருவ கால பணியில் இருந்த நிரந்தர பணியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கொள்முதல் நிலையங்களில் எடைபோட்டு வைத்து, லாரியில் ஏற்ற கூலியாக 40 கிலோ மூடைக்கு ரூ.3.25லிருந்து, ரூ.10.00 உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. மேலும், திண்டுக்கல் மேற்கு வட்டம், சுள்ளெறும்பு கிராமம் மற்றும் குஜிலியம்பாறை வட்டத்தில் தலா 1000 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு கட்டப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

**ஒற்றுமை மாநிலம் தமிழ்நாடு!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழக மக்களின் சிரமங்களை தீர்க்கும் வகையில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மக்கள் ஒற்றுமையாக வாழும் மாநிலமாக தமிழகம் விளங்குகிறது. சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட்டு அமைதிப் பூங்காவாக தமிழகம் திகழ்கிறது. அந்த வகையில் நியாயமான, நேர்மையான முறையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பதற்காக இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில் ஜனநாயக அரசு, மக்களுக்கு நன்மை செய்யும் அரசை செயல்படுத்தி வருகிறார். சமத்துவம், சகோதரத்துவம், எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் பெரியார் கண்ட கனவை கலைஞர் நிறைவேற்றிய வழியில் நிறைவேற்றி வருகிறார்.

இது உங்களது அரசு, உங்களுக்கான அரசு, உங்களுக்கு சேவை செய்வதற்காக நாங்கள் இருக்கிறோம். மக்கள் நல அரசுக்கு என்றென்றும் உறுதுணையாக இருக்க வேண்டும், என ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் மு.பாஸ்கரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பெ.திலகவதி, பேரூராட்சிகள் உதவி இயக்குநர் திருமதி ரா.மனோரஞ்சிதம், சித்தையன்கோட்டை பேரூராட்சித் தலைவர் திருமதி மு.போதும்பொண்ணு, நிலக்கோட்டை பேரூராட்சித் தலைவர் திருமதி க.சுபாஷினிபிரியா, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மண்டல மேலாளர் ம.பாலமுருகன், பேரூராட்சிகள் உதவி செயற்பொறியாளர் திருமதி வெற்றிச்செல்வி, சித்தைய'ன் கோட்டை பேரூராட்சி துணைத்தலைவர் மு.ஜாகீர்உசேன், நிலக்கோட்டை பேரூராட்சி துணைத்தலைவர் பி.முருகேசன், செயல் அலுவலர்கள் திருமதி பூங்கொடி முருகு, சிவக்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### புகைப்படக் கலைஞர் கோவை சுப்பு ஏற்பாட்டில்

# கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பு புகைப்படக் கண்காட்சி!

## வேலூரில் அமைச்சர் துரைமுருகன் திறந்து வைக்கிறார்!

வேலூர், நவ. 24 -

பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்பு புகைப்படக் கண்காட்சி நாளை (25.11.2023 - சனிக்கிழமை) காலை 10 மணிக்கு வேலூர் டவுன் ஹாலில் நடைபெறுகிறது.

இப்புகைப்படக் கண்காட்சியை கழகப் பொதுச் செயலாளரும் நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்து சிறப்பிக்கிறார்.

இதில் மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், கழக முன்னணியினர், மாவட்ட,ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

நூற்றாண்டு விழா புகைப்பட கண்காட்சியை புகைப்படக் கலைஞர் கோவை சுப்பு ஏற்பாடு செய்துள்ளார்.



கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி டிசம்பர் 17ஆம் தேதி இளைஞர் அணி மாநில மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கும் படி இருசக்கர வாகன பிரச்சார பயணம் மதுரை வந்தபோது மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. தலைமையில் வரவேற்றனர். உடன் கழக நிர்வாகிகள் பொன் முத்துராமலிங்கம், வ. வேலுச்சாமி, பெ.குழந்தை வேலு, மா.ஜெயராம், ஒச்சு பாலு, மூவேந்திரன், இளைஞர் அணி சௌந்தர்ராஜன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



## திருக்கோயில்களுக்கு அறநிலையத்துறை செய்யும் சாதனைகளைப் பொறுத்துக் கொள்ள முடியாமல்

# திட்டமிட்டுஅவதூறுகளைப்பரப்புவதா?

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆதாரங்களுடன் ஆணித்தரமான பேட்டி!

*சென்னை, நவ. 24 -*

**“திருக்கோவில்களுக்கு அறநிலையத்துறை செய்யும் சாதனைகளைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் அவதூறுகளைப் பரப்புகிறார்கள்” என்று இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (22.11.2023) ஆணையர் அலுவலகத்தில் செய்தியாளர்களை சந்தித்து இந்து சமய அறநிலையத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகள் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது :-

முதலமைச்சர் தலைமையிலான அரசு பொறுப்பேற்று இரண்டரை ஆண்டுகள் முடிவுற்ற நிலையில், இந்து சமய அறநிலையத்துறை ஆற்றியிருக்கின்ற அரும்பணிகளுக்கு களங்கம் கற்பிக்கும் வகையில் சமூக வலைதளங்களான முகநூல் மற்றும் வாட்ஸ் ஆப்களில் பரப்பப்படுகின்ற அவதூறுகளையும், இந்து சமய அறநிலையத்துறை உருவாக்கப்பட்ட 1959 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை கண்டிராத, சாதிக்காத சாதனைகளை இந்த 30 மாதங்களில் அளவிட முடியாத அளவிற்கு ஒவ்வொரு நிகழ்வுகளும், முந்தைய நிகழ்வுகளை முறியடித்து நிறைவேற்றி வருகின்ற தருவாயில் கோயபல்ஸ் பிரச்சாரத்தின்படி ஒரு பொய்யை திரும்ப திரும்ப சொல்லி அதை உண்மையாக்க முயற்சித்து, களங்கம் கற்பிப்பவர்களுக்கு இந்த துறை ஆற்றியிருக்கின்ற சாதனைகளை பத்திரிக்கை மற்றும் ஊடகத் துறையினருக்கு எடுத்து கூறுவதற்காக செய்தியாளர்களை இன்றைய தினம் சந்திக்கின்றோம்.

### நீதிக்கட்சி காலத்தில் இந்து சமய அறநிலைய வாரியம்!

இந்து சமய அறநிலையத்துறை உருவாக்கப்பட்ட நோக்கமே, திருக்கோயில்களுக்காக முன்னோர்கள் நன்கொடையாக அளித்த சொத்துக்கள் மற்றும் அதன் வருமானங்கள் தவறான வழியில் செல்கிறது என்பதை அன்றைய ஆட்சியாளர்களிடம் எடுத்து கூறியதை தொடர்ந்து 1818 ஆம் ஆண்டு ஒரு ஒழுங்குமுறை சட்டத்தை கொண்டு வந்தார்கள். நீதி கட்சி காலத்தில் 1927 ஆம் ஆண்டு திருக்கோயில் களுக்கு இந்து சமய அறநிலைய வாரியம் அமைக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 1951 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையத் துறை சட்டங்கள் உருவாக்கப்பட்டு, நீதிமன்றத்தில் அச்சட்டங்கள் குறித்து விவாதித்து இறுதியாக திருத்தங்களுக்கு பின் 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையத்துறை சட்டம் கொண்டுவரப்பட்டது. 1960 ஆம் ஆண்டு டாக்டர் சி.பி. ராமசாமி ஐயர் தலைமையில் அமைக்கப்பட்ட ஆணையத்தின் பரிந்துரையில் தமிழ்நாட்டில் உள்ளதுபோல் அனைத்து மாநிலங்களிலும் இந்து சமய அறநிலையங்களை நிர்வகிக்க தனி சட்டம் இயற்றலாம் என பரிந்துரைக்கப்பட்டது. இப்படி அந்த காலத்தில் திருக்கோயில் களை நிர்வகித்தவர்கள் பரம்பரை அறங்காவலர்களாக இருந்தவர்கள் தவறான முறையில் திருக்கோயில் சொத்துக்களையும், அதன் வருமானங்களையும் பயன்படுத்துவதை முறைப் படுத்துவதற்காகவே இந்து சமய அறநிலைய சட்டமே உருவாக்கப்பட்டது.

### கழக ஆட்சியில் எண்ணற்ற சாதனைகள்!

புதிதாக பொறுப்பேற்ற திராவிட முன்னேற்ற கழக அரசு இந்து சமய அறநிலையத்துறையில் எண்ணற்ற சாதனைகளை நிகழ்த்தி வருகிறது. ஆட்சிக்கு வந்தவுடன் தமிழ்நாடு முதுவதும் உள்ள திருக்கோயில்கள் சம்பந்தமான குறைகளை தெரிவிக்கும் வகையில் “குறைகளை பதிவிடுக” என்ற திட்டத்தை கொண்டுவந்தோம். அதன்மூலம் பெறப் பட்ட புகார்களை சம்பந்தப்பட்ட இணை ஆணையர்களுக்கு அனுப்பி குறைகளை நிவர்த்தி செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. அதன் தொடர்ச்சியாக திருக்கோயில்களுக்கு சொந்தமான சொத்து விவரங்கள் அடங்கிய 4 கோடி பக்கங்கள் ஸ்கேன் செய்யப்பட்டு பதிவேற்றம் செய்யும் பணிகள் நிறை வடைந்துள்ளது.



48 முதுநிலை திருக்கோயில்களிலும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு அவை இந்து சமய அறநிலையத் துறை தலைமை அலுவலகத்திலிருந்து கண்காணித்து, வழிபாடுகள் மற்றும் பக்தர்களுக்கான வசதிகள் சம்பந்தமாக குறைகள் கண்டறியப்பட்டால் அவை உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.

முதலமைச்சர் அவர்களை தலைவராக கொண்டு இந்து சமய அறநிலையத்துறை உயர்மட்ட குழு அமைக்கப்பட்டது. ஆட்சி பொறுப்பேற்ற பிறகு மாவட்டங்களிலுள்ள திருக்கோயில்களுக்கு அறங்காவலர்களை நியமனம் செய்திடும் பணிகளை துரிதப்படுத்தும் வகையில் 38 வருவாய் மாவட்டங்களிலும் மாவட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் 9 கலைக் கல்லூரிகள், ஒரு பல்வகை தொழில்நுட்ப கல்லூரி, 25 பள்ளிகளை சிறந்த முறையில் நிர்வகிப்பதற்காக உயர்மட்ட கல்விக் குழுவினை உருவாக்கியிருக்கின்றோம். அந்த வகையில் அக்கல்வி நிறுவனங்களில் பயிலும் 25 ஆயிரம் மாணவ, மாணவியருக்கு உயர்தர கல்வி மற்றும் அடிப்படை வசதிகளை செய்து தந்துள்ளோம்.

### பக்தர்கள் சிறப்பான முறையில் தரிசனம் செய்ய ஏற்பாடு!

அதேபோல திருவிழா காலங்களில் குறிப்பாக திருச்செந்தூர் கந்த சஷ்டி விழா, பழனி தைப்பூசம், பங்குனி உத்திரம், மதுரையில் கள்ளழகர் ஆற்றில் இறங்கும் வைபவம், திருவண்ணாமலை கார்த்திகை தீபம், ஸ்ரீரங்கம், வைகுண்ட ஏகாதசி போன்ற முக்கிய திருவிழாக் களில் லட்சக்கணக்கான மக்கள் கூடுகின்ற போது அதற்கான பணிகளை முன்கூட்டியே திட்டமிட்டு அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, போக்குவரத்து வசதி பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்ற முன்னேற்பாடு பணிகளை மேற்கொள்ள முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி அனைத்து பணிகளையும் ஒருங்கிணைத்து பக்தர்கள் சிறப்பான முறையில் தரிசனம் செய்திட உரிய ஏற்பாடுகளை செய்து வருகின்றோம்.

அண்மையில் நடைபெற்ற திருச்செந்தூர் சூரசம்ஹார நிகழ்வின் போது ஒரே நாளில் 8 லட்சம் பக்தர்களும், கந்த சஷ்டி விழா நடைபெற்ற ஏழு நாட்களிலும் சுமார் 20 லட்சம் பக்தர்களும் வருகை தந்தார்கள். அத்திருக்கோயிலில் திருப்பணி கள் நடைபெற்று வந்தாலும் 26 இடங்களில் தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டு சுமார் 30,000 க்கும் மேற்பட்ட பக்தர்கள் தங்கி விரதம் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இத்தனை லட்சம் பக்தர்கள் கூடிய அந்நிகழ்வில் சிறு அசம்பாவிதமும் நிகழாத வண்ணம் அனைத்து ஏற்பாடுகளும் செய்து தந்த ஆட்சி முதலமைச்சர் அவர்களின் ஆட்சியாகும்.

### திருச்செந்தூர் கோவிலில் ரூ.300 கோடியில் பணிகள்!

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவு திட்டம் (Master Plan) ஏற்படுத்தப்பட்டு 15 திருக்கோயில்களில் ரூ.1,462 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகளும், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளும் நடைபெற்று வருகின்றன. திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிர மணிய சுவாமி திருக்கோயிலில் மட்டும் திருக்கோயில் நிதி மற்றும் உபயதாரர் பங்களிப்புடன் சேர்த்து ரூ.300 கோடிக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உலகம் முழுவதும் உள்ள பக்தர்கள் பிரமிக்கும் வகையில் ஒருங்கிணைந்த வரைவு திட்டத்தில் பணிகளை செய்து வருகிறோம்.

முதலமைச்சர் , 1,000 ஆண்டுகளுக்கு மேல் தொன்மையான திருக்கோயில் களை புனரமைத்து திருப்பணி மேற்கொள்ள 2022 - 2023 ஆம் ஆண்டில் ரூ.100 கோடியும், 2023 24 ஆம் ஆண்டிற்கு ரூ.100 கோடியும் ஆக மொத்தம் ரூ.200 கோடியினை அரசு மானியமாக வழங்கியுள்ளார்கள். ஒரு கால பூஜை திட்டத்தில் திருக்கோயில்களுகான வைப்பு நிதி ஒரு லட்சம் ரூபாயிலிருந்து 2 லட்சமாக உயர்த்தி முதலமைச்சர் ரூ.129 கோடி யினை ஒரே தவணையில் அரசு மானியமாக வழங்கினார்கள். தற்போது ஒருகால பூஜை திட்டத்தில் 17 ஆயிரம் திருக்கோயில்கள் பயன்பெற்று வருகின்றன. இத்திட்டத்திற்காக ரூ.200 கோடி அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஒரு கால பூஜை திட்டத்தின் கீழ் பயன்பெறும் திருக்கோயில்களின் அர்ச்சகர்களுக்கு மாதாந்திர ஊக்கத் தொகையாக ரூ.1,000 இவ்வரசு பொறுப் ப்பேற்றபின் முதன்முறை யாக வழங்கப்பட்டு வருகிறது.

### 5000 கோவில்களில் ரூ.100 கோடியில் திருப்பணிகள்!

கிராமப்புற திருக்கோயில்கள் மற்றும் ஆதிதிராவிடர்கள் பழங்குடியினர் வசிக்கின்ற பகுதியில் இருக்கின்ற திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள வழங்கப் பட்டு வந்த நிதியுதவி ரூ.2 லட்சமாக உயர்த்தப்பட்டு இதுவரை 2,500 கிராமப்புற திருக்கோயில்கள், 2,500 ஆதிதிராவிடர்கள் பழங்குடியினர் வசிக்கின்ற பகுதியிலே இருக்கின்ற திருக்கோயில்கள் என ஆகமொத்தம் 5,000 திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ. 100 கோடி நிதியுதவியாக வழங்கியவர் முதலமைச்சர் .

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 490 திருக்கோயில்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவினங்களுக்காக வழங்கப்பட்டு வந்த அரசு மானியம் 3 கோடி ரூபாயை 6 கோடி ரூபாயாக உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் அதற்கான காசோலையை கடந்தாண்டு வழங்கினார்கள். தற்போது அரசு மானியத்தை ரூ.8 கோடியாக உயர்த்தி வழங்கவுள்ளார்கள். அதேபோல புதுக்கோட்டை தேவஸ்தான 227 திருக்கோ யில்களுக்கான அரசு மானியம் ஒரு கோடியிலிருந்து மூன்று கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. அது தற்போது ரூ.5 கோடியாக உயர்த்தி வழங்கப்படவுள்ளது. மேலும், தஞ்சாவூர் தேவஸ்தான 88 திருக்கோயில் களுக்கு இதுவரை அரசு மானியம் வழங்கப்படாத நிலையில் முதன்முதலில் ரூ.3 கோடியை அரசு மானியமாக வழங்கியவர் முதலமைச்சர் .

### இறைவழிபாடு செய்வோருக்கு உறுதுணையாக இருப்போம்!

இந்து சமய அறநிலையத்துறை ஆற்றி இருக்கின்ற பணிகளை சொல்ல வேண்டுமெனில் ஒரு நாள் போதாது. அந்த வகையில் பல்வேறு சாதனைகளை, ஆன்மிக புரட்சிகளை இந்த ஆட்சி செய்து கொண்டு வருகின்றது. மேலும், முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு இறை வழிபாடு மேற்கொள்ளுகின்ற இறை அன்பர்களுக்கு உறுதுணையாக இந்து சமய அறநிலையத்துறை இருக்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

“காய்த்த மரத்தில் தான் கல்லடி படும்” என்பார்கள். தமிழகத்தை பொறுத்தளவில் ஒன்றிய அரசு, இந்துக்களுக்கு எதிரான ஆட்சி இந்த ஆட்சி என்பதை போல ஒரு பிம்பத்தை உருவாக்க முற்பட்டார்கள். இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றில் இதுவரையில் செய்யப்படாத பல்வேறு சாதனைகளை செய்து வருகின்ற ஆட்சி முதல்வர் தலைமையில் அமைந்திருக்கின்ற ஆட்சி என்பதற்கு பல்வேறு சாதனை பட்டியல்களை உங்களிடம் ஏற்கனவே தெரிவித்து இருக்கின்றோம். நினைத்தது நடைபெறவில்லை என்பதற்காக உயர் பொறுப்பில் இருக்கின்ற ஒருவர் குற்றச்சாட்டை கூறுகின்ற போது ஆதாரப்பூர்வமாக குற்றத்தை கூறினால் அந்த குற்றத்தின் மீது நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு அரசு தயாராக இருக்கின்றது. “வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ” என்ற வகையில் உயர் பொறுப்பில் இருப்பவர்கள் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை கூறுவது நிச்சயம் கண்டிக்கத்தக்க ஒன்று.

### கடத்தப்பட்ட சிலைகள் மீட்பு!

முதலமைச்சர் பொறுப்பேற்ற பிறகுதான் திருக்கோயில்களுக்கு சொந்தமான சுமார் ரூ.5,500 கோடி மதிப்பிலான சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்து இருக்கின்றோம். அதேபோல 1,165 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்தி இருக்கின்றோம். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் 8,001 திருக்கோயில் களில் மாநில வல்லுநர் குழுவால் திருப்பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. இது ஒரு வரலாற்றுச் சாதனையாகும். கடந்த கால ஆட்சியில் 5 ஆண்டுகளில் 1,500 திருக்கோயில்களுக்கு தான் திருப்பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்களில் திருப்பணி மேற்கொள்ள ரூ.200 கோடி மானியம் வழங் கிய ஆட்சி இந்த ஆட்சி.

### படுதோல்வி அடைந்தார்கள்!

அதே போல் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் கடத்தப்பட்ட சிலைகள், கலைப் பொருட்கள், உலோகத் திருமேனிகள் என 400 இனங்கள் இதுவரையில் மீட்ட ப்பட்டிருக்கின்றன. உலோகத் திருமேனிகளை பாதுகாப்பதற்கு ரூ.162 கோடி மதிப்பீட்டில் 1,843 பாதுகாப்பு அறைகள் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு அதில் 250 உலோக திருமேனி பாதுகாப்பு அறைகள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. இப்படி தெய்வங்களையும் பாதுகாத்து, தெய்வத்திற்கு சொந்தமான இடங்களையும் பாதுகாத்து ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெ டுத்து, திருக்கோயில்களில் திருப்பணி கள் மேற்கொண்டு குடமுழுக்குகள் நடத்தி வரும் இந்த ஆட்சி இறை சொத்தை மீட்கின்ற ஆட்சி தானே தவிர இறை சொத்துக்களை களவாடுவதற்கு உதவுகின்ற ஆட்சி இல்லை என்பதை உயர்ந்த பொறுப்பிலே இருக்கின்ற அந்த அம்மையாருக்கு தெரிவித்துக் கொள்கிறேன். இந்து சமய அறநிலையத்துறை மீது யார் குற்றம் சாட்டினாலும், அதற்கு வெளிப்படைத்தன்மையோடு பதில் கூற துறை தயாராக இருக்கின்றது. இந்த ஆட்சி ஏற்பட்டதிலிருந்து இது இந்துக்களுக்கு எதிரான ஆட்சி என்ற ஒரு பிம்பத்தை உருவாக்க முயற்சித்தார்கள். அதில் நினைத்தது போல் எள்ளளவும் வெற்றியடைய முடியவவில்லை, படுதோல்வியே அடைந்தார்கள்.

### 1100 இணைகளுக்கு திருமணம்!

முதலமைச்சர் இந்த துறையின் சார்பில் நடைபெற்ற 54 நிகழ்ச்சிகளில் பங்கேற்று சிறப்பித்துள்ளாகள். நாளைய மறுதினம் திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் 1,100 வது இணைகளுக்கான திருமணங்களை நடத்தி வைக்கவுள்ளார்கள். ஆகவே, முதலமைச்சர் ஆன்மீகத்தை தன்னுடைய இரு கரங்களால் அரவணைப்பதால் இதை பொறுத்துக் கொள்ள முடியாதவர்கள் இந்துக்களின் ஓட்டு ஒன்றுகூட தங்கள் பக்கம் வராது என்று நம்பிக்கையை இழந்துவிட்ட காரணத்தால், தொடர்ந்து இது போன்ற அவதூறுகளை பரப்புகிறார்கள். எந்த குற்றச்சாட்டாக இருந்தாலும் நேரடியாக கேட்டால் அதற்குண்டான விளக்கமும், தவறு நடந்திருந்தால் அதன் மீது நடவடிக்கை எடுக்கவும் இந்த அரசும், இந்து சமய அறநிலை யத்துறையும் எல்லா காலங்களிலும் தயாராக இருக்கிறது.

எங்கு பார்த்தாலும் தெய்வங்களுக்கு உண்டான அனைத்து திருவிழாக்களும் மகிழ்ச்சியோடு நடைபெற்று வருவதை பொறுத்துக் கொள்ள முடியாததால் தான் இப்படிப்பட்ட அவதூறுகளை அள்ளி வீசுகிறார்கள். இந்த அவதூறுகளை கண்டு சற்றும் சளைக்காமல் மேலும் முன்பை விட அதிக வேகத்தோடு இறையன்பர்களுக்கும் திருக் கோயில்களுக்கும் செய்ய வேண்டிய அனைத்து பணிகளையும் முனைப்போடு இந்த ஆட்சி செய்யும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

### மானியங்கள் அதிகமாக வழங்கப்பட்டுள்ளன!

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு இதுவரையில் துறைக்கு ரூ.621 கோடி அரசின் சார்பில் மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது. திருக்கோயில்களின் உண்டியல் பணம் மற்றும் திருக் கோயிலைச் சார்ந்த இடங்களில் வருகின்ற வருவாய்க்கு அப்பாற்பட்டு இதுபோன்று அரசின் சார்பிலும் அதிகமான மானியம் வழங்கிய ஒரே ஆட்சி இதுவே ஆகும். கடந்த காலங்களில் ஒப்பிட்டு பார்த்தால் முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையில் நடைபெறுகின்ற இந்த ஆட்சியில் தான் மானியங்கள் அதிகமாக இந்து சமய அறநிலையத்துறைக்கு வழங்கப்பட்டிருக்கின்றது என்பது புலனாகும்.

திருவண்ணாமலையில் நடைபெறுகின்ற திருக் கார்த்திகை தீபத் திருவிழாவில் கடந்தாண்டு 32 லட்சம் பக்தர்கள் மகா தீபத்திற்கு வருகை தந்திருந்தார்கள். முதலமைச்சர் இது போன்ற திருவிழா க்களின்போது முன்னரே திட்ட மிட்டு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தியதன் அடிப்படையில் கடந்தாண்டு செய்யப்பட்டிருந்த அனைத்து ஏற்பாடுகளினால் சிறு குறையை கூட காண முடியவில்லை. அதே போல இந்தாண்டு நடைபெறவுள்ள தீபத்திருவிழாவிற்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களும், நானும் இணைந்து மாவட்ட நிர்வாகம், காவல்துறை, வருவாய்த்துறை, தீயணைப்புத் துறை, சுகாதா ரத்துறை மற்றும் நகராட்சி நிர்வாகம் அனைத்தையும் ஒருங்கிணைத்து ஆலோசனை கூட்டம் நடத்தினோம். இந்தாண்டு சுமார் 40 லட்சம் பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. பாதுகாப்பு பணிகளுக்காக சுமார் 14,000 காவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். 16 இடங்களில் தற்காலிக பேருந்து நிலையங்களும், 36 இடங்களில் மருத்துவ முகாம்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. 300க்கும் மேற்பட்ட இடங்களில் கழிப்பிட வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

### அமைச்சர் வேலு தலைமையில் தூய்மைப் பணி!

நேற்றைய தினம் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் அருணை தூய்மை பணி அமைப்பின் சார்பில் 100 க்கும் மேற்பட்டோர் கிரிவல பாதையை தூய்மைப்படுத்தி இருக்கின்றார்கள். பௌர்ணமி தினங்களில் ரூ.50 சிறப்பு தரிசன கட்டணம் முழுமையாக ரத்து செய்யப்பட்டு பொது தரிசனத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே பக்தர்களின் எண்ணிக்கை கூடினாலும் அனைத்து வசதிகளையும் கடந்த ஆண்டை விட இந்தாண்டு இருமடங்காக்கி இறை தரிசனத்திற்கும், பௌர்ணமி கிரிவலத்திற்கும், தீப தரிசனத்திற்கும் அனைத்து ஏற்பாடுகளையும் அரசும் இந்து சமய அறநிலையத்துறையும் மற்ற துறைகளோடு ஒருங்கிணைந்து செயல்படுத்தி வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நீதிமன்றங்களின் தீர்ப்புக்களை மதித்து, அதனை உடனடியாக நிறைவேற்றுகின்ற ஆட்சி இந்த ஆட்சியாகும். உதாரணத்திற்கு திருக்கோயிலில் செல்போன்களை பயன்படுத்தக் கூடாது என்ற உத்தரவுக்கிணங்க திருச்செந்தூரிலும் பழனியிலும் செல்போன்களை பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டி ருக்கின்றது. அறங்காவலர்களை நியமிப்பது முதல் இந்து சமய அறநிலையத்துறையில் புதிய பணியிடங்களை நிரப்புவது, தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தின் மூலம் நியமிக்கின்ற பதவிகள் வரை அனைவரும் இந்துக்கள் தான். இந்துக்கள் அல்லாத ஒருவரைக் கூட எந்த பதவிலும் இதுவரை நியமித்ததில்லை. அறங்காவலர் பதவிகளில் இந்துக்கள் அல்லாத ஒருவர்கூட நியமிக்கப்படவில்லை. அரசியலுக்கு அப்பாற்பட்டு யாரால் திருக்கோயி லுக்கு நன்மைகள் கிடைக்குமோ அவர்களை தான் இந்த அரசு அறங்காவலர்களாகவும், அறங்காவலர் குழு தலைவராகவும் நியமித்துக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் இந்துக்கள் அல்லாத யாரையும் இந்த துறையில் அறங்காவலர்களாகவோ, நியமன பதவிகளிலோ நியமிக்கப்பட வில்லை என்பதை உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன்.

### 38 மாவட்டங்களுக்கு அறங்காவலர் குழு!

38 மாவட்டங்களுக்கும் மாவட்ட அறங்காவலர் குழு நியமிக்கப்பட்டு விட்டது. அதேபோல் முதுநிலை திருக்கோயில்கள் 80 மேற்பட்ட கோயில்களுக்கு அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ள னர். இந்து சமய அறநிலையத்துறை சட்டப்பிரிவு 46(2), 46(1) மற்றும் 49(1) ஆகியவற்றின் கீழ் இருக்கின்ற திருக்கோயில்களில் 5,000க்கும் மேற்பட்ட திருக்கோயி ல்களுக்கு அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டு இருக்கின்றார்கள். பிற திருக்கோ யில்களுக்கு அறங்காவலர்களை நியமிக்கும் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த நியமனங்களில் எந்த விதமான தவறும் நடைபெற கூடாது என்பதற்காக அதிக கவனம் செலுத்துவதால் சற்று தாமதம் ஏற்படுகின்றது. வரும் காலங்களில் அப்பணிகளை விரைவுபடுத்தி அறங்கா வலர்கள் நியமிக்கப்படு வார்கள்.

நீதிமன்றத்தின் உத்தரவுக்கிணங்க, சிதம்பரம் நடராஜர் திருக்கோயிலை ஆய்வு செய்வதற்காக இந்து சமய அறநிலையத்துறை சார்பில் மூன்று அலுவலர்களையும். தொல்லியல் துறையின் சார்பில் மூன்று அலுவலர்களையும் கொண்ட குழு அமைக்கப்பட்டு இருக்கின்றது, வெகு விரைவில் அந்த குழு சிதம்பரம் நடராஜர் திருக்கோயிலில் ஆய்வு பணிகளை மேற்கொள்ள இருக்கிறது.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டியளித்தார்.

இந்த சந்திப்பின்போது சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ. முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம் மற்றும் கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா குறித்த ஆலோசனைக் கூட்டம் தொகுதி பொறுப்பாளர் மாரியப்பன் கென்னடி முன்னிலையில் நடைபெற்றதில் மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் பாக முகவர்கள் உள்ளனர்.

---

# தமிழ்நாடு முன்னாள் ஆளுநர் பாத்திமா பீவி மறைவு!

கொல்லம், நவ. 24 -

தமிழ்நாடு முன்னாள் ஆளுநர் பாத்திமா பீவி மறைவெய்தினார். அவருக்கு வயது 96.

தமிழ்நாடு முன்னாள் ஆளுநர் பாத்திமா பீவி உடல்நலக் குறைவால் நேற்று மறைவெய்தினார். கேரள மாநிலம் கொல்லத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் நேற்று மறைவெய்தினார்.

உச்சநீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதி என்ற பெருமையும் இவருக்கு உண்டு.

கேரள மாநிலம் பத்தனம் திட்டாவில் கடந்த 1927 ஏப்., 30ல் பிறந்தார். திருவனந்தபுரம் அரசு சட்டக் கல்லூரியில்



இளங்கலை சட்டப்படிப்பை முடித்தார். பின்னர் 1950ல் வழக்கறிஞராக பணியை துவக்கினார். தொடர்ந்து 1958ல் கேரள கீழ்நிலை நீதித்துறை பணியில் சேர்ந்த இவர் 1968ல் துணை நீதிபதியாக பதவி உயர்வு பெற்றார்.

1972ல் முதன்மை நீதித்துறை மாஜிஸ்திரேட்டாகவும், 1974ல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதியாகவும் பதவி வகித்தார். 1983ல் கேரள உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். 1989ல் உச்சநீதிமன்ற நீதிபதியாகவும் பதவி வகித்தார். தமிழகத்தின் 11வது ஆளுநராக கடந்த 1997 முதல் 2001 வரை பதவி வகித்தார். நாடு முழுவதும், நீதித் துறையில் பெண்களின் முன்னேற்றத்துக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் பாத்திமா பீவி. தேசிய மனித உரிமைகள் ஆணைய உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவண்ணாமலை தர்மலிங்கம்

**நவம்பர் 24 (1986)**



**மாவட்டச் செயலாளராகவும், திருவண்ணாமலை நகர்மன்றத் தலைவராகவும், அன்றைய வடஆற்காடு மாவட்டத்தின் தூண்களில் ஒருவராகவும் விளங்கினார்.**

**1957ஆம் ஆண்டில் தி.மு.க. முதல்முறையாக பொதுத் தேர்தல்களில் போட்டியிட்டபோது கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.**

**அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரிடம் மிக நெருங்கிப் பழகியவர்.**

**நெருக்கடிநிலை காலத்தில் ஓராண்டு மிசா கைதியாக சிறைவாசம் அனுபவித்தவர்.**

**கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## கடலூர் மண்டலம், கடலூர் மேற்கு மாவட்டம் முழுவதும் 2வது இளைஞரணி மாநாடு விளக்க

# இருசக்கர வாகனப் பிரச்சாரப் பேரணி - வருகை தரும் முழு விவரம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ. கணேசன் அழைப்பு!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, இளைஞர் நலன் - விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்பு செயலாக்கத் திட்டத் துறை அமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின் படி, வருகின்ற 17.12.2023 அன்று சேலத்தில் நடைபெறும் தி.மு.க இளைஞரணி இரண்டாவது மாநில மாநாட்டிற்கு, அழைப்பு விடுத்து கலைஞர் மண்டலம் சார்பாக, இரு சக்கர வாகனப் பிரச்சாரப் பேரணி, இன்று (24.11.2023 - வெள்ளிக்கிழமை) கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி, விருத்தாசலம், நெய்வேலி ஆகிய தொகுதிக்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளுக்கும் 25.11.2023 (சனிக்கிழமை) அன்று பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளுக்கும் இரு சக்கர வாகனப் பிரச்சாரப் பேரணி கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல்படி வருகை தர உள்ளது. அதுசமயம், இந்நிகழ்ச்சிகளை சம்பந்தப்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இளைஞரணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திடவும்.

மேலும், இந்நிகழ்ச்சிகளில் கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் ஊராட்சி பிரதிநிதிகள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிமன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள், ஒன்றிய குழு உறுப்பினர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், இளைஞரணி மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

### கடலூர் மேற்கு மாவட்டத்தில் இருசக்கர வாகனப் பேரணி விபரம்

**24.11.2023 வெள்ளிக்கிழமை**

| நேரம் | கடலூர் மேற்கு மாவட்டம். நிகழ்ச்சி நடைபெறும் இடம் | நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் ஒன்றிய / நகரம் / பேரூர் |
|---|---|---|
| மதியம் 12:45 | ராமநத்தம் பேருந்து நிலையம் கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் கலந்துகொண்டு துவக்கி வைக்கிறார் | மங்களூர் கிழக்கு ஒன்றியம், மங்களூர் மேற்கு ஒன்றியம், மங்களூர் வடக்கு ஒன்றியம் |
| மதியம் 01:00 | வாகையூர் | மங்களூர் கிழக்கு ஒன்றியம் |
| மதியம் 01:15 | ஆக்கனூர் | மங்களூர் கிழக்கு ஒன்றியம் |
| மதியம் 01:30 | பாளையம் | மங்களூர் கிழக்கு ஒன்றியம் |
| மதியம் 01:30 | இடைச்செருவாய் | மங்களூர் கிழக்கு ஒன்றியம் |
| மதியம் 01:40 | கீழ்ச்செருவாய் | மங்களூர் கிழக்கு ஒன்றியம் |
| மதியம் 01:50 | திட்டக்குடி நகரம் | திட்டக்குடி நகரம் |
| மதியம் 02:00 | திட்டக்குடி - உணவு இடைவேளை | |
| மதியம் 02:10 | ஆவினங்குடி | |
| மதியம் 03:00 | பெண்ணாடம் | பெண்ணாடம் பேரூராட்சி |
| மதியம் 03:30 | முருகன்குடி | நல்லூர் தெற்கு ஒன்றியம் |
| மாலை 03:40 | கருவேப்பிலங்குறிச்சி | விருத்தாசலம் தெற்கு ஒன்றியம் |

**விருத்தாசலம் சட்டமன்ற தொகுதி**

| | | |
|---|---|---|
| மாலை 04:00 | விருத்தாசலம் சித்தலூர் ரவுண்டானா வரவேற்பு | விருத்தாசலம் நகரம் |
| மாலை 04:15 | விருத்தாசலம் கடைவீதி | விருத்தாசலம் நகரம் |
| மாலை 04:20 | விருத்தாசலம் பாலக்கரை | விருத்தாசலம் நகரம் |
| மாலை 04:25 | விருத்தாசலம் பேருந்து நிலையம் வழியாக காட்டுக்கூடலூர் சென்றடைதல் | விருத்தாசலம் நகரம் |
| மாலை 04:30 | காட்டுக்கூடலூர் சென்றடைதல். | |

**நெய்வேலி சட்டமன்றத் தொகுதி.**

| | | |
|---|---|---|
| மாலை 04:35 | காட்டுக் கூடலூர் வழியாக | நெய்வேலி சட்டமன்ற தொகுதி. |
| மாலை 04:40 | முத்தாண்டிக்குப்பம் | |
| மாலை 04:45 | கொள்ளுக்காரன்குட்டை | |
| மாலை 05:00 | சத்திரம் | |
| மாலை 05:20 | கீழூர் | |
| மாலை 05:30 | நெய்வேலி நகரத்தை சென்றடைதல், நெய்வேலி நகரத்தில் ஊர் வலமாக சென்று வருதல். | |
| இரவு 07:00 | நெய்வேலி நகரத்தில் இரவு தங்குதல் | |

**பண்ருட்டி சட்டமன்ற தொகுதி**

| | | |
|---|---|---|
| 25.11.2023 (சனிக்கிழமை) பகல் 12:00 | பண்ருட்டி பேருந்து நிலைய நான்கு முனை சந்திப்பு | பண்ருட்டி சட்டமன்ற தொகுதி |
| பகல் 12:10 | வ.உ.சி தெரு | |
| பகல் 12:15 | இராஜாஜி சாலை | |
| பகல் 12:20 | தட்டாஞ்சாவடி | |
| பகல் 12:30 | நெய்வேலி நகரத்தை சென்றடைதல், நெய்வேலி நகரத்தில் ஊர்வலமாக | |

இந்த இரு சக்கர வாகன பிரச்சாரப் பேரணியில் தொரப்பாடி பேரூர், மேல்பட்டாம்பாக்கம் பேரூர், அண்ணாகிராமம் ஒன்றியம், நெல்லிக்குப்பம் நகர கழக நிர்வாகிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் சி.வெ.கணேசன்**
செயலாளர்
கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

---

## தி.மு.க. நெசவாளர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

### ஆறாவது பட்டியல்
### தி.மு.க. நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. நெசவாளர் அணியின் மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கும்பகோணம் மாநகரம்**

**தலைவர் :** பி.எஸ்.கோதண்டராமன், எண்.160, ஏ.ஆர்.ஆர். ரோடு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்

**துணைத்தலைவர்:** கே.வி.சங்கர், ராஜராம் காலனி, அரசலாறு வழி நடப்பு, எலுமிச்சங்காபாளையம், கும்பகோணம் தஞ்சாவூர் மாவட்டம்

**அமைப்பாளர் :** எம்.ஆர்.சந்திரசேகரன், எண் 7,8, மஞ்சக்கார தெரு, கும்பகோணம் தஞ்சாவூர் மாவட்டம்

**துணை அமைப்பாளர்கள்:** பி.எல்.ராஜா, எண்.13, ஜே.பி.கீழ் வீதி, கும்பகோணம் தஞ்சாவூர் மாவட்டம்

எம்.குமார், எண் 8டி, செட்டி புதுத்தெரு, ஏ.ஆர்.ஆர்.ரோடு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்

பி.எஸ்.சதீஸ்குமார், 2/204 ஏ.ஆர்.ஆர்.ரோடு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்

எல்.ஆர்.மோகன், எண்.58சி. துவரங்குறிச்சி கீழத்தெரு கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்

என்.பி.ஜீவன், எண்.6/99, சௌராஷ்டிரா புதுத்தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்

**சிவகாசி மாநகரம்**

**தலைவர்:** தர்மர், எண்.925, அண்ணா காலனி, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்

**துணைத்தலைவர்:** குருசாமி, எண் 21 ஏ, சங்கரப்பா நாயுடு தெரு, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்

**அமைப்பாளர்** கார்த்திக், எண் 201/2, விநாயகர் காலனி, சிவகாசி, விருதுநகர் மாவட்டம்

**துணை அமைப்பாளர்கள்:** கருத்தப்பாண்டி, 201/2, விநாயகர்காலனி, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்

சுடலைமணி, எண் 86, பட்டாவூரணி பெரியண்ணன் ரோடு, சிவகாசி, விருதுநகர் மாவட்டம்

விக்ரமாதித்தன், 144ஏ, அய்யப்ப நாடார் சந்து திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்

நாகராஜ், எண்.988, முருகன் காலனி பள்ளப்பட்டு ரோடு, விருதுநகர் மாவட்டம்

பொன்ராஜ், எண்.89/78ஏ, வடக்குத் தெரு, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்

**கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்**

தி.மு.க. நெசவாளர் அணியின் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட துணை அமைப்பாளராக ஏற்கனவேநியமிக்கப்பட்ட பி.சி. சபரி அவர்கள்அப்பொறுப்பிலிருந்துவிடுவிக்கப்படுகிறார்.

மேலு ம்கீழ்கண்டவர்கள்கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட நெசவாளர் அணியின் துணை அமைப்பாளராக நியமிக்கப்படு கிறார்கள்.

**துணை அமைப்பாளர்கள்** எம். நாமதேவன் பாரண்டப்பள்ளி, மத்தூர், கிருஷ்ணகிரி.

என். நாகராஜ், காட்டேரி, ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி. கே.கே. சிவக்குமார், கொம்பட்டு, கோவிந்தபுரம், ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி. கே. அனுமந்தராஜ் இட்டிக்கல்அகரம், கிருஷ்ணகிரி. எ.கே. சரவணன்வேல், வேட்டியம்பட்டி, கிருஷ்ணகிரி.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட நெசவாளர் அணி நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணி யாற்றிடவேண்டுமெனகேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை 18.
நாள் : 21.11.2023

**நன்னியூர் இராஜேந்திரன்**
தலைவர்
தி.மு.க. நெசவாளர் அணி

---

# ஒட்டப்பிடாரத்தில் ரூ.28 லட்சத்தில் புதிய வகுப்பறை கட்டிடங்கள்!

## ஜி.வி.மார்க்கண்டேயன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

ஒட்டப்பிடாரம், நவ. 24 -

ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், மீனாட்சிபுரம் ஊராட்சி, விட்லாபுரம் கிராமம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் குழந்தை நேயப்பள்ளி உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.28.00 லட்சம் மதிப்பீட்டில் புதிய இரண்டு வகுப்பறை கட்டிடங்களை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன் திறந்து வைத்தார்.

நிகழ்வில் ஒட்டப்பிடாரம் ஒன்றிய பெருந்தலைவர் ரமேஷ் ஒட்டப்பிடாரம் துணை ஒன்றிய பெருந் தலைவர், ஒட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் காசிவிஸ்வநாதன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவபாலன், கிரி, பள்ளி தலைமை ஆசிரியை சுதா, தூத்துக்குடி வடக்கு மாவட்ட முன்னாள் இளைஞர் அணி துணை அமைப்பாளர் இம்மானுவேல், தூத்துக்குடி வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ராதாகிருஷ்ணன், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர் மற்றும் கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---

## தி. மு. க. தொழிலாளர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

### (நான்காவது பட்டியல்)

### தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி.ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி, மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. தொழிலாளர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கரூர் மாவட்டம்**

**தலைவர்:** ரா. ஜெய்சங்கர், 28/41, முத்துபூபாலசமுத்திர அக்ரஹாரம், குளித்தலைஅஞ்சல், குளித்தலைதாலுகா, கரூர் 639104.

**துணைத் தலைவர்:** பி. ராமகிருஷ்ணன் 102, மானார்பட்டி, மொடக்கூர்மேல்பாகம், அரவக்குறிச்சிதாலுகா, கரூர்மாவட்டம் 639207.

**அமைப்பாளர்:** கே. சுப்பிரமணியன் வாங்கல்பழையூர், வாங்கல்அஞ்சல், மண்மங்கலம்தாலுகா, கரூர் - 639116.

**துணை அமைப்பாளர்கள்** கி. சரவணன் 1/11, எஸ்.பி. நகர், கிழக்குதெரு, அரவக்குறிச்சிஅஞ்சல், அரவக்குறிச்சிதாலுகா, கரூர்-639201.

கே. குணசேகரன், வெள்ளாளபட்டி, மேலூர்முதல்தெரு, புலியூர்அஞ்சல், கரூர்தாலுகா, கரூர் - 639114.

எஸ்.பி. ரவி 9, விஜபிநகர், கணபதிபாளையம்வடக்கு, தாந்தோணிமலைஅஞ்சல், கரூர்தாலுகா, கரூர் - 639005.

கே. குமார், 1/96, முனியப்பனூர் கடைவீதி, மண்மங்கலம் தாலுகா, கரூர் - 639116. ஆர். சந்திரசேகரன் 389/6, சரஸ்வதிநகர், ஆண்டாங்கோவில் கிழக்கு அஞ்சல், மண்மங்கலம் தாலுகா, கரூர் - 639002.

ஆர். கணேஷ்குமார் தில்லைநகர், ராமாகவுண்டன்புதூர், ஆண்டாங்கோவில் கிழக்கு அஞ்சல், மண்மங்கலம் தாலுகா, கரூர் - 639002.

**தஞ்சை மாநகரம்**

**அமைப்பாளர்** ஜி. விஜயகமல் சடையப்பாவாத்தியார் சந்து, மானோஜிப்பாவீதி, தஞ்சாவூர்.

**துணைஅமைப்பாளர்கள்** ஆர். பாலகிருஷ்ணன் பழைய நெல்லுமண்டி தெரு, தஞ்சாவூர்.

வி. ராஜன் எஸ்.என்.எம். மோகன்ராம் நகர், தஞ்சாவூர்.

பி. தினேஷ்குமார் குடைக்காரத் தெரு, கரந்தை, தஞ்சாவூர்.

க. செல்வகுமார் குஜியான் குளம்கீழகரை, கரந்தை, தஞ்சாவூர்.

ஆர். சரவணன் 5, பெரியார் நகர், எம்.சி. சாலை, தஞ்சாவூர்.

**காஞ்சிபுரம் மாநகரம்**

**தலைவர்** ஜெ. குமார் 22பி/1சாத்தான் குட்டை தெரு, காஞ்சிபுரம்

. **துணைத்தலைவர்** என். வெங்கடேசன் 22ஜெ, நாகலுத்துதெரு, காஞ்சிபுரம்.

**அமைப்பாளர்** கே. காண்டீபன் அஞ்சூர், தேனாம்பாக்கம், காஞ்சிபுரம்.

**துணை அமைப்பாளர்கள்** எஸ். பாஸ்கர், 9எ, காமாட்சிநகர், டோல்கேட், சின்னகாஞ்சிபுரம்.

எஸ். ஏழுமலை 26, ராகவேந்திரநகர், செவிலிமேடு, காஞ்சிபுரம். ஜி. ஏகாம்பரம் ஓரிக்கை மற்றும் அஞ்சல், காஞ்சிபுரம்.

பி. கோபால் நாராயண பாளைய தெரு, காஞ்சிபுரம். பி. முத்து தேரடிதெரு, பெரிய காஞ்சிபுரம்.

**சென்னை வடகிழக்கு மாவட்டம்**

**துணை அமைப்பாளர்** எம்.ஜி. கார்த்திக் 1/1035, குமரவேல் தெரு, பவானிநகர், சென்னை.

**புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்**

**துணை அமைப்பாளர்கள் :** ம. பன்னீர், வளவம்பட்டி, புதுக்கோட்டை மாவட்டம்.

கா. வேலு, துருசுப்பட்டி, கந்தர்வக்கோட்டை தாலுகா, புதுக்கோட்டை.

துரை. மாரிமுத்து மெய்க்குடிப்பட்டி, கந்தர்வக் கோட்டை தாலுகா புதுக்கோட்டை.

**கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்**

**துணை அமைப்பாளர்கள்** அ. மாது, நாராயணநகர், ஊத்தங்கரை பேரூர், கிருஷ்ணகிரி.

சி. சின்னப்பன் பர்கூர், கிருஷ்ணகிரி.

மரகதவேல் மருதேரி, போச்சம்பள்ளி, கிருஷ்ணகிரி.

அருள்முருகன் விளாங்காமுடி, போச்சம்பள்ளி, கிருஷ்ணகிரி.

சிவன் பாலேகுளி, பெல்லாரம்பள்ளி, கிருஷ்ணகிரி.

பி. சக்திவேல் சண்முகசெட்டி தெரு, காவேரிபட்டிணம், கிருஷ்ணகிரி.

**தேனி தெற்கு மாவட்டம்**

**துணை அமைப்பாளர்கள்** ஜி.கே. பாண்டி ராஜகோபாலன் பட்டி, ஆண்டிப்பட்டி தாலுகா, தேனிமாவட்டம்.

செ. பெருமாள் கோவில்பாளை, தங்கம்மாள்புரம் அஞ்சல், ஆண்டிப்பட்டிதாலுகா, தேனி மாவட்டம்.

வீரமணி வார்டு 9, பஞ்சாயத்து யூனியன் ரோடு, சின்னமனூர், தேனிமாவட்டம்.

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

**துணை அமைப்பாளர்கள்** க. மணிகண்டன் 164ஏ, முதல்தெரு, பண்டாரகுளம், சங்கர்நகர், திருநெல்வேலி

மீ. அப்துல்ஹமீது 149/2, ஆசிரியர்காலனி, பேட்டை, திருநெல்வேலி.

ஆர். அர்ஜுனன் 344, பெரியார்நகர், சத்தமல்லி, திருநெல்வேலி

**. திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்**

**தலைவர்** நா. சரவணன் 19/10, 9வது புதுத்தெரு, திருவண்ணாமலை. துணைத்தலைவர் உ. உதயமுத்து 8/7, 3வதுவடக்குத் தெரு, திருவண்ணாமலை.

**தாம்பரம் மாநகரம்**

**துணைஅமைப்பாளர்கள்** சி. மதியழகன் 12, 5வதுதெரு, ஆதம்நகர், நாகல்கேனி, சென்னை - 600044.

கே. ஜெகநாதன் 14, அந்தோணியர் தெரு, சபஸ்டியர்புரம், இரும்புலியூர், கிழக்குதாம்பரம், சென்னை - 600059.

எம். ராஜாங்கம் 6/5, அப்துல்ரசாக் தெரு, மேற்குதாம்பரம், சென்னை - 600045.

எல். பிரபாகரன் 53, அகரம்மெயின் ரோடு, பதுவஞ்சேரி, சென்னை - 600126.

ஏ. ஆறுமுகம் 7/1, சித்திவினாயகர் கோயில் தெரு, சானடோரியம், சென்னை - 600047.

மா. கபிலன் பி6, எப்2, அஷ்வதா பிளாட்ஸ், கஸ்தூரிபாய்தெரு, சிட்லப்பாக்கம், சென்னை - 600064.

**காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்**

தி.மு.க. தொழிலாளர் அணியின் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட வி.விஜயகுமார் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக ஏற்கனவே துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட **பெப்சி ஜெ. கண்ணன்** (18, திருவள்ளூர் தெரு, ராஜீவ்காந்தி நகர், ஊரப்பாக்கம், செங்கல்பட்டு - 603210) அவர்கள் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார். மேலும், கூடுதலாக **என்.எஸ். இளங்கோ,** (152, டி.டி.சி. நகர், ஆதனூர், குன்றத்தூர், காஞ்சிபுரம்) அவர்கள் தொழிலாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட தொழிலாளர் அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை 18.
நாள் : 21.11.2023

**பி.டி.சி.ஜி.செல்வராஜ்**
செயலாளர்,
தி.மு.க. தொழிலாளர் அணி









சேலம் மாநகரில் டிசம்பர் 17 ஆம் தேதி நடைபெற உள்ள இளைஞரணி மாநாட்டு திடலையும் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளையும் கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு அவர்களுடன் கழக இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் பார்வையிட்டார். இதில் கழக முன்னணியினர் பங்கேற்றனர்.






சேலம் மாநகரில் நடைபெற்ற சேலம் மத்திய – கிழக்கு – மேற்கு மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் கழக இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். உடன் கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், மாவட்டச் செயலாளர்கள் ஆர்.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.சிவலிங்கம், இரா.செல்வகணபதி மற்றும் மூன்று மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் உடனுள்ளனர்.

# திராவிட சினிமா

33

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில், திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**




படங்கள் உதவி : ஞானம்



# பொய்களுக்கு எதிரான ‘ராஜா தேசிங்கு’

‘ராஜா தேசிங்கு’ திரைப்படம் அதனளவில் பலவிதத்திலும், கவனத்திற்குரியதாகும். எம்.ஜி.ஆர். இந்தக் கால அளவில், மலைக்கள்ளன் (1954) வெற்றிக்குப் பிறகு படத் தேர்வுகளை கவனமாக செய்யத் துவங்கியிருந்தார். அதாவது கலைஞரது வார்ப்பான ‘சாகச வீரன்’, ‘மக்கள் நலன் பேணும் சமூக நோக்கு கொண்ட இளைஞன்’ எனும் மாதிரியை அவரது ஆதர்சமான ‘சாகச வீரன்’ அல்லது ‘அரசகுமாரன் நாயகன்’ எனும் வடிவில் வளர்த்தெடுக்கத் திட்டமிட்டுச் செயல்பட்டார்.

**அதற்காக அவர் தேர்ந்த கதைக்களங்கள் கவனத்திற்குரியவை. குலேபகாவலி (1955), ‘அலிபாபாவும் நாற்பது திருடர்களும்’ (1955), ‘சக்கரவர்த்தித் திருமகள்’ (1956), ராஜராஜன் (1957), ‘மகாதேவி’ (1957) , ‘நாடோடி மன்னன்’ (1958), ‘பாக்தாத் திருடன்’ (1959), 1960-ஆம் ஆண்டில் மட்டும் ‘ராஜா தேசிங்கு’, ‘மன்னாதி மன்னன்’, ‘அரசிளங்குமரி’ ஆகிய மூன்று படங்கள்.**



டி.ஆர்.ரகுநாத்

இந்தப் படங்களின் திரைக் கதை வசனம் எழுதியவர்களில் கண்ணதாசன் முதன்மையான இடம் பெறுகிறார். **அவரது பங்களிப்பில் உருவானவை ‘மதுரை வீரன்’, ‘மகாதேவி, ‘மன்னாதி மன்னன்’, ‘ராஜா தேசிங்கு’ ஆகியவை. இவர் தவிர இளங்கோவன் அவர்களின் பங்களிப்பில் ராஜராஜன், சக்கரவர்த்தித் திருமகள் ஆகியவை.**

இந்தத் திரைப்படங்களின் கதைக்களங்களில் ஒரு மாற்றான போக்கைக் காண முடிகிறது. **குலேபகாவலி, அலிபாபாவும் நாற்பது திருடர்களும், பாக்தாத் திருடன்** ஆகியவற்றின் நிகழ்வுக் களங்கள் அந்நிய நிலங்கள். நாயகர்களும் திராவிடத் தமிழ் அடையாளம் பொருந்தப்படாத வர்கள். ஆனால், கவர்ச்சிகரமான சாகச நாயகர்கள்.

## வளர்த்தெடுக்கப்பட்ட பிம்பம்

தமிழ்த் திரையுலகில் உடலை கவர்ச்சியாக வெளிப்படுத்தியவர் எம்.ஜி.ஆர். மட்டுமே என்பதைச் சொல்லத் தேவையில்லை. இந்த நாயகப் பாத்திரங்களின் உடை வடிவமைப்பில் அதற்கான கவனம் செலுத்தப்பட்டது.

எம் ஜி ஆர் எனும் கவர்ச்சிகரமான இளைஞன் என்ற பிம்பம் கவனமாக வளர்த்தெடுக்கப்பட்டது. இந்த நோக்கத்தின் போக்கில் அவர் சார்ந்ததான அரசியல் கருத்தியல் நிலைப்பாடுகள் இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டன.

திராவிட சினிமா குறித்த ஆய்வில் என்னளவிலேயே பல ஆர்வமூட்டும் திறப்புகளை எதிர்கொள்கிறேன். இந்த ‘வாசிப்புகள்’ என்னைப் போலவே இன்னும் பலருக்கும் செய்தியாகவும், கருத்தியல் அறிமுகத் தளமாகவும் இருக்குமென நம்புகிறேன்.

திராவிட சிந்தனையும், இந்து ராஷ்ட்டிர சிந்தனையும் ஒரே புள்ளியில், ஒரே வரலாற்று நிகழ்வில் கிளர்ந்த எதிரெதிர் கருத்தியல் நிலைப்பாடுகள் என்பது வியப்பூட்டும் வெளிப்பாடே. இன்றும் இந்தியாவில் இந்துத்துவ சக்திகளுக்குப் பெரும் சவாலாக நிற்பது அதன் பொருட்டே. அந்த வகையில், 1960-ஆம் ஆண்டில் வெளிவந்த ‘ராஜா தேசிங்கு’ திரைப்படமும் ஆர்வமூட்டக்கூடியது. செஞ்சி ராஜா தேசிங்கு குறித்த ஏராளமான வாய்மொழி வழக்காறுகள், கதைப் பாடல்கள், கூத்து நிகழ்வுகள் இன்றும் தொடர்பவை. அவற்றை அடிப்படையாகக் கொண்டு, சில வரலாற்றுப் புனைவுகளையும் இணைத்து உருவாக்கப்பட்டது ‘ராஜா தேசிங்கு’ திரைப்படம்.

## புனைவும், வரலாறும்

அவுரங்கசீப் படையின் தளபதிகளில் ஒருவரான தேசிங்குக்கு (TEJ SINGH) செஞ்சியை ஆளும் தன்னாட்சி உரிமை வழங்கப்படுகிறது. ஆற்காடு நவாப்புக்குக் கப்பம் செலுத்த வேண்டாத ஆட்சி உரிமை. அவரது மகன் ராஜா தேசிங்கிற்கு வாரிசுரிமையாக அது மறுக்கப்படுகிறது.

இது தொடர்பிலான போரில் 22 வயதேயான ராஜா தேசிங்கு ஆற்காடு நவாப்புடனான போரில் அவனது நண்பன் / தளபதி மகபூப் கான் துணையோடு போரிட்டு இருவரும் மாய்கின்றனர். அவனது மனைவி உடன்கட்டை ஏறுகிறாள். அவர்களைக் கௌரவிக்கும் விதமாக நவாப் நினைவுச் சின்னம் எழுப்பியுள்ளார். அது இன்றும் இருக்கும் சாட்சியம். ராஜபுத்திர இனத்தினர் இன்றும் செஞ்சிப் பகுதியில், தமிழ் பேசும் மக்களாக வாழ்கின்றனர். எனவேதான் கதைப்பாடலும், கூத்தும் இன்றும் தொடர்கிறது.

புனைவும், வரலாறும் இப்படி இருக்க, வீர் சாவர்க்கரின் ‘இந்து ராஷ்ட்டிர தர்ஷன்’ நூலில் செஞ்சியைப் பூர்வ இந்து ராஷ்ட்டிரம் எனப் புனைகிறார். வேடிக்கை என்னவெனில், செஞ்சியின் தேஜ் சிங் மராட்டிய படைக்கெதிராகப் போரிட்டே இந்த ஆட்சிக் கொடையைப் பெற்றார் என்பது. சாவர்க்கரின் பூர்வ இந்து ராஷ்ட்டிரம் செஞ்சி மட்டுமல்ல, சிவாஜியின் படை வென்ற தஞ்சையும் கூட இந்து ராஷ்ட்டிரம்தான்.

**ராஜபுத்திர இனத்தினர் இன்றும் செஞ்சிப் பகுதியில், தமிழ் பேசும் மக்களாக வாழ்கின்றனர். எனவேதான் கதைப்பாடலும், கூத்தும் இன்றும் தொடர்கிறது.**

கொடுமை என்னவெனில், இந்த ஆக்கிரமிப்பிற்கெதிராகப் போரிட்ட மங்கம்மாள் மற்றும் முத்தரையர் குறுநில மன்னர்களை இந்து விரோத அந்நியர்கள் என்று சாவர்க்கர் புனைவதுதான். இன்று இந்துத்துவக் காவடி தூக்கும் கூலிப்படைகளுக்கு இந்தச் செய்திகள் அதிர்ச்சியளிக்காது. ஆனால், இயல்பாக திராவிட சினிமாவாக ‘ராஜா தேசிங்கு’ இந்தப் பொய் களுக்கெதிரான மாற்றுக் கதையாடலை முன்வைக்கிறது.

## மதநல்லிணக்க சமத்துவ வாழ்வு

ராஜா தேசிங்கு குறித்த கதைப் பாடல்களையும், கூத்துகளின் உள்ளடக்கங்களோடு, கூடுதலாகத் திராவிட மதநல்லிணக்க சமத்துவ வாழ்வு நோக்கினையும் இணைக்கிறது. ஆற்காடு நவாபின் தளபதி தௌலத் கானை, ராஜா தேசிங்கின் அண்ணனாக்குகிறது.

ராஜா தேசிங்கு, தௌலத் கான் ஆகிய இரண்டு பாத்திரங்களையும் ஏற்று நடித்து இணைவை முழுமையாக்குகிறார். கண்ணதாசன் அவர்களின் திரைக்கதை ஒவ்வொரு காட்சியிலும் இந்து- இஸ்லாமியர் அன்பை, உறவுப் பிணைப்பைச் சித்தரிப்பதில் கவனமாக இருக்கிறது.

தேசிங்கின் நண்பன் மகபூப் கான் பாத்திரத்தில் எஸ்.எஸ்.ராஜேந்திரன். கதைப்பாடல்படி தில்லியில் பாதுஷாவின் அடங்காத குதிரையை அடக்கி, தேசிங்கு, அப்பாவை மீட்பதோடு செஞ்சிக்குத் தன்னாட்சி உரிமையும் பெற்று, பாதுஷாவின் மகளையும் (பானுமதி ) மணந்து திரும்புகிறான்.

நண்பன் மகபூப் கான் காதலி இப்ராஹிம் ராவுத்தரின் மகள் ஆயிஷா, அதாவது தமிழ் இஸ்லாமியப் பெண். தாயையும் தன்னையும் அங்கீகரிக்காத மன்னரை வஞ்சம் தீர்க்க தௌலத் கான் நவாபின் தளபதியாகிறான். பழிவாங்கும் நோக்கத்தோடு செஞ்சியுடன் நவாபைத் தூண்டி போர் தொடுக்கிறான். ஆனால், தாய்க்குக் கொடுத்த இறுதி வாக்குப்படி போர்க்களத்தில் தம்பி ராஜா தேசிங்கைக் கொல்லாமல் அவன் மடிகிறான்.


இறுதியில் தௌலத், தன் அண்ணன் என உணரும் தேசிங்கு, தானும் தன் வாளாலேயே மடிகிறான். திரைப்படத்தின் இறுதிக் காட்சியில், அண்ணா என்று குற்றவுணர்ச்சியில் தேசிங்கு கதறுகிறான். தௌலத் கான் ‘தம்பி’ என மரணத்தின் விளிம்பில் அரவணைத்துக் கொள்கிறான்.

இந்தக் காட்சியில் ‘அண்ணா’, ‘தம்பி’ என்ற விளிப்புகள் தெளிவாக தி.மு.க.வின் உறவுப் பிணைப்பை உணர்ச்சியோடு வெளிப்படுத்துகிறது.

ஏ.எம்.ரகுமான் ஒளிப்பதிவில், ஜி.ராமநாதன் இசையில், டி.ஆர்.ரகுநாத் அவர்கள் இயக்கத்தில் காட்சியமைப்புகள் தொய்வின்றி நகர்கின்றன. குறிப்பாக, தில்லியில் குதிரையை அடக்கும் காட்சிகளும், போர்க்களக் காட்சிகளும் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கின்றன. மகபூப் கான் பெற்றோராக வைத்தியர் பாத்திரத்தில் என்.எஸ்.கிருஷ்ணன், மற்றும் டி.ஏ.மதுரம் தோன்றும் நகைச்சுவைக் காட்சிகளுக்குக் கூடுதல் மெருகேற்ற கே.ஏ.தங்கவேலு மற்றும் எம்.என்.ராஜம் ஆகியோர்.

...படம் விரியும்

## பிளவுவாதத்துக்கு எதிரான முழக்கம்!



இந்திய ஆன்மிகம் என்பது பௌத்தம், சமணம், சாங்கியம் எனப் பொருள்முதல்வாத அடித்தளம் கொண்டதாகும். ஆரியர் வருகைக்குப் பின்னரே சமூக நீதிக்கு எதிரான ஆன்மிகக் கருத்துகள் வலுப்பெற்றதை விவரிக்கிறது ‘இந்திய ஆன்மிகமும், காவி பிளவுவாதமும்’ என்கிற இந்த நூல்.

அதேபோல, நவீன இந்தியாவின் உருவாக்கத்தில் 19-ஆம் நூற்றாண்டிலும், 20- ஆம் நூற்றாண்டிலும் உருவான சமூக நீதி, சமத்துவத்துக்கான போராட்டங்கள் மிகப்பெரிய பங்கு வகிக்கின்றன. அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், ஜோதிபாபூலே என மக்களை அரசியல்மயப்படுத்திய தலைவர்களும், ஆன்மிகச் சீர்திருத்தம் மூலம் சமத்துவத்துக்குக் குரல் கொடுத்த வள்ளலார், அய்யா வைகுந்தர், நாராயண குரு எனப் பலரது மகத்தான பங்களிப்பும் தவிர்க்க முடியாதது.

இந்த ஆன்மிக அடித்தளத்தையும், வரலாற்று அடிப்படைகள் குறித்த புரிதல் இன்றியும், பிளவுவாதம் மட்டுமே அரசியலாகக் கொண்டுள்ள ஆர்.எஸ்.எஸ், பா.ஜ.க ஆகியவற்றைத் தோலுரிக்கிறது இந்த நூல்.

நூலின் ஆசிரியர் எம்.அபுதாகீர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் களச் செயல்பாட்டாளர். சாமானிய மக்களிடம் பேசிய உரையாடல்களின் தொகுப்புதான் இந்த நூல் என்கிறார். பாரதி புத்தகாலயம் வெளியிட்டுள்ள இந்த நூலை, காலத்தின் தேவை அறிந்து வாசிப்பது நம் கடமை.

## :ப்ளாஷ்பேக்



### கே.வி.கே சாமி படிப்பகம்

1977-ஆம் ஆண்டு, மக்களவைத் தேர்தலில் முதன்முதலாக உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்கத் தொடங்கிய நான், இன்று வரையிலும் பாதை மாறாமல் கழகத்திற்கே வாக்களித்து வருகிறேன்.



ஜெயராஜ்

1995-ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த தூத்துக்குடி மாவட்டம், மாப்பிள்ளையூரணி ஊராட்சியில் டி.சவேரியார்புரத்தில் கே.வி.கே சாமி படிப்பகத்தைத் திறந்து வைக்க அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய கழகத் தலைவருமான தளபதி அவர்கள் வருகை தந்தார். அப்போது டி.சவேரியார்புரம் கிளைச் செயலாளராக இருந்த எனக்கு தளபதி அவர்கள் சால்வை அணிவித்துப் பாராட்டினார். இன்றைக்கு கலைஞர் நூற்றாண்டு படிப்பகங்களைக் காணும்போதெல்லாம், தளபதி திறந்து வைத்த கே.வி.கே சாமி படிப்பகத்தை நினைக்காமல் இருக்க முடியவில்லை.

**-எம்.ஜெயராஜ், முன்னாள் கிளைச் செயலாளர், மாப்பிள்ளையூரணி ஊராட்சி, ராஜபாளையம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண்: 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### சொத்தில் பங்கு

**1989-ஆம் ஆண்டு பெண்களுக்கு ஆண்களைப் போல சொத்தில் சமபங்கு என்கிற சட்டத்தைக் கொண்டு வந்தார் கலைஞர். 1929-ஆம் ஆண்டு செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டில் சௌந்திரபாண்டியனார் தலைமையில், தந்தை பெரியார் அவர்களால் கொண்டு வரப்பட்ட முக்கியமான தீர்மானம் அது. 60 ஆண்டுகளுக்குப் பின்னர் அதைச் செயல்பாட்டுக்குக் கொண்டு வந்தவர் கலைஞர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 309




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023. Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.